சமூகவியல் நோக்கில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயற்பாடுகள்

முனைவர் ம. மதியழகன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

UG 7210

சமூகவியல் நோக்கில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயற்பாடுகள்

முனைவர் ம. மதியழகன்
உதவிப் பேராசிரியர்
சமூக அறிவியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-433-5

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 390

நூல் : சமூகவியல் நோக்கில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயற்பாடுகள்

ஆசிரியர் : முனைவர் ம. மதியழகன்

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2043, புரட்டாசி
முதற்பதிப்பு - செப்டம்பர் 2012

பக்கம் : 86 + 8

அளவு : டெம்மி 1/8

தாள் : டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ

படிகள் : 1200

விலை : உரூ. 80.00

ஒளியச்சு : முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,
தெற்கு வீதி, தஞ்சாவூர்.

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக
மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

07 FEB 2019

முனைவர் ம. திருமலை
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010
17.09.2012

அணிந்துரை

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி

என்று பாடி பெண் விடுதலைக்கு உரமூட்டினார் மகாகவி பாரதியார். வீட்டு முன்னேற்றம் மட்டுமன்று; நாட்டு முன்னேற்றத் திலும் பெண்களின் பங்கு இன்றியமையாதது. கல்வியில் - வேலைவாய்ப்பில் - பொருளாதாரத்தில் - சமூகப் பங்களிப்புகளில் - அரசியலிலெல்லாம் பெண்கள் சம உரிமையுடையவராய்த் திகழும்போதுதான் வீடு சிறக்கும்; நாடு செழிக்கும். 'வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம்' என்ற விந்தை மனிதக் காலம் மறைந்து விட்டது. நாட்டுக்குள்ளே நடக்கும் அத்தனை யிலும் பெண்கள் போட்டிபோட்டு வெல்லும் பொற்காலம் இது. வாய்ப்பு அளிக்கப் பெற்றால் - அளிக்கப்படுவதென்ன? வாய்ப் பினை ஏற்படுத்திக் கொண்டால் வரலாற்றுச் சாதனைகளைப் படைப்பவர்கள்தாம் பெண்கள். கல்வி, விளையாட்டு, தொழில், அரசியல் என அத்தனையிலும் தற்போது பெண்கள் முத்திரை பதித்து வருவது இதனை மெய்ப்படுத்துகிறது.

திட நம்பிக்கை, விடாமுயற்சி, கடும் உழைப்பு, தற்சார்புக் கோட்பாடு ஆகியவை பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரிதும் வேண்டுபவை. குறிப்பாக, ஓரளவே கல்வியறிவு பெற்றிருக்கிற அல்லது கல்வி அறிவு பெற்றிராத பெண்களுக்கு இவை மிகமிக வேண்டற்பாலன. இவற்றோடு இவர்களுக்குச் சரியான வழிகாட் டலும் அமையப்பெற்றால் இவர்கள் தாமும் பயன்பெற்றுச்

சமுதாயத்திற்கும் வளம் சேர்ப்பார்கள். இத்தகைய வாய்ப்பையும் வழிகாட்டலையும் அரசு சிறப்பாக அளித்து வருகிறது. அவற்றுள் ஒன்றுதான் மகளிர் சுய உதவிக்குழு அமைப்பு. இவ்வமைப்பு ஆல மரமாய் விரிந்து இன்று அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. மகளிர் சுய உதவிக்குழுக்களில் பங்குகொண்டு, பணியாற்றி, உழைத்து, தொழில் செய்து, பொருளீட்டி, குடும்பத்தைத் தாங்கி, சேமித்தும் வைத்துச் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நடக்கும் பெண்கள் ஏராளம்! ஏராளம்!! வாட்டி வதைத்த ஏழ்மையை வாட்டி வதைத்துத் தங்களுக்குத் தாங்களே வெளிச்சத்தை ஏற்றிக் கொண்ட வெற்றிப் பெண்மணிகள் இவர்கள். இந்நிலைக்கு வழிவகுத்தது அவர்கள் சார்ந்திருந்த சுயஉதவிக்குழுவே ஆகும். எனவே, வறுமையை விரட்டி வளம்பெற விரும்பும் பெண்கள் யாவரும் சுய உதவிக் குழுக்கள் பற்றி நன்கு அறிந்துகொள்ளுதல் வேண்டும். அதற்கு இந்நூல் பெரிதும் துணை செய்கிறது.

தமிழ்ப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முனைவர் ம. மதியழகன் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட எட்டு மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த மகளிரை நேரடியாக அணுகி, வினா - விடை அடிப்படையில் தரவுகளைச் சேகரித்து, சமூகவியல் நோக்கில் அலசி ஆய்ந்து, பெறப்பட்ட முடிவுகளினடிப்படையில் இந்நூலினை உருவாக்கியுள்ளார். மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வயது, இனம், மதம், கல்வித்தகுதி, குடும்ப நிலைமைகள், மாத வருமானம், சேமிப்பு விவரம், நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள், கடன் பெறும் முறை, குழுக்களில் உள்ள பிரச்சினைகள், அவற்றிற்கான தீர்வுகள் முதலியன இந்நூலில் துல்லியமாகக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சில குழுக்களின் செயற்பாடுகள் பற்றிய ஆய்வாக இது இருப்பினும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் பற்றி அனைவரும் அறிந்துகொள்ளவும், பங்குகொள்ள விழைவோர் விவரமறிந்து பங்குகொள்ளவும், பிற குழுக்களும் தத்தம் செயற்பாடுகளை மதிப்பீடு செய்து கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு மேலும் நன்கு செயற்படவும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. சிறப்புமிக்க இந்நூலினை உருவாக்கித் தந்த நூலாசிரியரைப் பாராட்டி மகிழ்கிறேன்.

முன்னுரை

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் குறுகிய கால ஆய்வுத் திட்டத்திற்குச் 'சமூகவியல் நோக்கில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் செயற்பாடுகள்' எனும் பொருண்மையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. சமுதாய நிலையில் ஆடவருக்கு ஈடாக மகளிர் ஈடுபட்டுப் பணியாற்றிவரும் துறைகள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகின்ற நிலையில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் செயற்பாடுகளை ஆராய்தல் இன்றியமையாதது. இந்த ஆய்வுத் தலைப்பு இன்றைய சமூகத் தொடர்புடையதாகவும், தேவையான ஓர் ஆய்வாகவும், பல ஆய்வுகளுக்குக் களம் அமைப்பதாகவும் இருப்பது உணரப்பட்டு இத்தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. மகளிரின் சமூகப் பொருளாதார மேம்பாடு தொடர்புடைய இந்த ஆய்வில் உறுதியான சில தீர்வுகள் மற்றும் ஆய்வு முடிவுகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

ஆய்வுத் திட்டத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கிய முன்னாள் துணைவேந்தர் முனைவர் **ம. இராசேந்திரன்** அவர்களுக்கும், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டு நூலாகப் பதிப்பிக்க இசைவு நல்கிய இந்நாள் துணைவேந்தர் முனைவர் **ம. திருமலை** அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் வட்டம், நாஞ்சிக்கோட்டை ஊராட்சியில் நன்கு செயல்பட்ட எட்டு மகளிர் சுய உதவிக்குழுக்களில் தரவுகள் சேகரிக்க ஒத்துழைப்பு கொடுத்த மகளிர்குழு உறுப்பினர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த ஆய்வு அறிக்கையை நூலாக வெளியிடுவதற்கு ஆவன செய்த பதிப்புத்துறை இயக்குநர் திரு வை. கண்ணபுரக் கண்ணன் அவர்களுக்கும், பதிப்புக்குழு உறுப்பினர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் வெளிவரப் பல நிலைகளில் உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை / அச்சகப் பணியாளர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- முனைவர் ம. மதியழகன்

பொருளடக்கம்

1.	முன்னுரை	*1*
2.	நூலாய்வு	*7*
3.	தஞ்சாவூர் அமைவிடம்	*33*
4.	பகுத்தாய்வும் விளக்கமும்	*37*
5.	கண்டுபிடிப்புகளும் பரிந்துரைகளும்	*79*
	துணைநூற்பட்டியல்	*85*

இயல் - 1

முன்னுரை

மகளிர் சுய உதவிக்குழுத் திட்டம் 1989-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் தர்மபுரி மாவட்டத்தில் முதன் முதலாகத் தொடங்கப் பட்டது. இத்திட்டத்திற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மாநில மகளிர் வளர்ச்சி நிறுவனங்கள் ஆதரவளித்து வருகின்றன. தமிழக அரசால் 1989-இல் அறிவிக்கப்பட்ட மகளிர் சுயஉதவிக்குழு திட்டம் பன்னாட்டு நிதியுதவிடன் செயல்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் மொத்தம் 3 லட்சத்து 67 ஆயிரத்து 415 சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 59 லட்சத்து 7ஆயிரத்து 869 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இவற்றில் 2 லட்சத்து 85 ஆயிரத்து 666 பேர் ஊரகப் பகுதிகளிலும், ஒரு லட்சத்து 7ஆயிரத்து 750 பேர் நகர்ப்புறத்திலும் உள்ளனர். மொத்த சேமிப்பு நிதியாக ரூ.1,826 கோடி உள்ளது.44 ஆயிரத்து 728 மகளிர் சுயதவிக் குழுக்கள் மானியம் பெற்றுள்ளனர்(தினத்தந்தி,18.08.2008).இத்திட்டத்தின் மூலம் பெண்களிடம் தன்னம்பிக்கை வரவேண்டும் என்பதற்காகத் தொடங்கப்பட்டது. சமூக பொருளாதார நிலையில் மகளிர் முன் னேற்றம் அடைத்துள்ளனர். மிகவும் பின்தங்கிய நிலையில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து கொண்டிருந்த இலட்சக் கணக்கான பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாய் அமைந்துள்ளது. சுயஉதவிக்குழு ஆரம்பிப்பதற்கு முன் வறுமை, கடன் தொல்லை ஆகிய பிரச்சனைகளில் சிக்கி தவித்துக் கொண்டி ருந்த பெண்களுக்கு சுயஉதவிக் குழுக்கள் வாழ்க்கையின் முன் னேற்றத்திற்கு ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. சமூக நலத்

துறையின் கட்டுப்பாட்டில் இருந்த மகளிர் குழுக்கள் தற்போது உள்ளாட்சித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவருகிறது.

ஆய்வின் முக்கியத்துவம்

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஊரக கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையில் மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்றன. மகளிர் பல நிலைகளில் சுயஉதவிக் குழுவினால் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். தன்னம்பிக்கையாகவும், அதிகாரப் பகிர்வு மிக்கவர்களாகவும் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின் றார்கள். மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள பெண்களுக்கு 2001 ஆம் ஆண்டு முதல் தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின் றன. இப்பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தொழில் தொடங்க அதற்குத் தேவையான பணத்தை குறைந்த வட்டியில் வங்கிகள் மூலம் கடனைப் பெற்றுத் தரப்படுகிறது. சுயஉதவிக் குழுவினால் சிறு தொழில்கள் செய்து உயர்ந்த நிலையில் இருக்கின்றார்கள். மகளிர்சுயஉதவிக் குழுக்கள் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்று வருகின்றது. நகர்ப்புறங்களைவிட, கிராமப்புறங்களில் இக்குழுக்கள் சிறப்பாகச் செயல்பட்டு அதிக அளவில் வங்கிகளில் சேமிப்பு நிதியாக உள்ளது. மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர் களின் சமூகப் பொருளாதாரம் குறித்த இந்த ஆய்வு அதிக முக்கியத் துவம் பெறுகிறது. இன்றைய நிலையில் இவ்வாய்வு மிகவும் பயனுடைய ஆய்வாகும். மகளிர்சுயஉதவிக் குழு தொடர்பான திட் டங்கள் வகுக்கும்போது இவ்ஆய்வுவின் முடிவுகள் அரசுக்கும் பிற நிறுவனங்களுக்கும் மிகப் பயனுடையதாக அமையும்.

ஆய்வுச் சிக்கல்

இந்தியா வேளாண்மையை அடிப்படையாகச் கொண்ட மைந்த நாடாகும். தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டம் வேளாண் மையையே நம்பியுள்ளது. காவேரி நீர்ப்பாசன பகிர்வுச் சிக்கல், பருவமழை பொய்ப்பு, தொடர்ந்து வறட்சிநிலை போன்ற காரணங்களால் வேளாண்மையினர் அரசுத்துறைப் பணி, தனியார் துறைப்பணி என்ற நிலைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். ஒவ் வொரு துறையிலும் மகளிரின் பதிவானது பெருகிக் கொண்டு வரு வதை யாரும் மறுக்க இயலாது. சமுதாயப் பண்பாடுகள் மாறி

வருகின்றன. எடுத்துக்காட்டாக கூட்டுக் குடும்ப நிலை மாறி இன்று தனிக்குடும்பம் என்ற நிலை முன்னுரிமை பெறுகிறது. சமுதாய நிலையில் ஆணுக்கு ஈடாக மகளிர் ஈடுபட்டு பணியாற்றி வரும் துறைகள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இவ்வாறாக பல துறைகளில் தம் முத்திரையைப் பதித்துவரும் மகளிரின் எண்ணிக்கையும், துறைகளும் பெருகி வருகின்ற நிலையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பை (செயல்பாடுகளையும் பிரச்சனைகளையும்) ஆராய்தல் இன்றியமையாதது.

ஆய்வின் நோக்கம்

1. மகளிர் சுயஉதவிக்குழுவை அமைப்பதற்குத் தேவையான காரணிகள் மற்றும் குழுக்களின் செயல்பாடுகளைக் கண்டறிவது.

2. தஞ்சாவூர் தாலுக்கா மகளிர் சுயஉதவிக்குழுவின் உறுப்பினர்களின் சமூக-பொருளாதார நிலையைக் கண்டறிவது.

3. மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் பிரச்சனைகள் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிவது.

கருதுகோள்கள்

1. ஒரு மகளிர் சுயஉதவிக்குழுவை அமைப்பதற்கு பொருளாதாரம் மற்றும் கல்வி காரணிகளாக உள்ளன மற்றும் உறுப்பினர்களுடைய நலனுக்காக சுயஉதவிக் குழுவில் பல செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றனர்.

2. மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுடைய வரவு-செலவு மற்றும் சேமிப்புப் பழக்கம் ஆகியவற்றை கண்டறிவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

3. மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மூலமாக அதன் உறுப்பினர்கள் குழுக் கூட்டத்திற்கு வராமலும், குடும்ப

வேலையைச் சரியாக கவனிக்க முடியாததால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஆய்வின் நெறிமுறைகள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 400 மகளிர் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் இரண்டரை லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் 60 கோடி ரூபாய் அளவுக்கு சேமித்துள்ளனர் (தினத்தந்தி, 19.08.2008). இவ்வாய்வின் மையமாக தஞ்சாவூர் தாலுக்காவில் உள்ள குறிப்பிட்ட எட்டு மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை அணுகி அவர்களிடம் வினாவிடை அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தரவுகள் ஒப்புநோக்கப்படுகின்றன. ஒவ்வொரு மகளிர் சுயஉதவிக் குழு சார்பாகவும் சுமார் 150 மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு பெறப்பட்ட செய்திகளைக் கொண்டு அதன் செயல்பாடுகளை ஆராயப்படுகின்றன. இவ்வாய்வுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தஞ்சாவூர் தாலுக்கா, நாஞ்சிக்கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களை மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

1. காவிரித்தாய் மகளிர் சுயஉதவிக் குழு
2. பாரதி மகளிர் சுயஉதவிக் குழு
3. தங்கத்தாரகை மகளிர் சுயஉதவிக் குழு
4. ஜாஸ்மின் மகளிர் சுயஉதவிக்குக் குழு
5. இசைத்தமிழ் மகளிர் சுயஉதவிக் குழு
6. ஜோதி மகளிர் சுயஉதவிக் குழு
7. அரசி மகளிர் சுயஉதவிக் குழு
8. இந்திராகாந்தி மகளிர் சுயஉதவிக் குழு

எட்டு மகளிர் சுயஉதவிக் குழுவிற்கும் மொத்தமாக சுமார் 150 போரிடமிருந்து விவரங்கள் பெறப்பட்டு நுணுகி ஆராயப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக் குழு பற்றி ஒரு ஆய்வு வராத நிலையில் இவ்வாய்வு இத்துறையில் ஒரு முன்னணியாக அமைகிறது.

கள ஆய்வு

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நாஞ்சிக்கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட (தஞ்சாவூர் தாலுகா) எட்டு மகளிர் சுய

உதவிக் குழுவைச் சார்ந்த மகளிரை அணுகி அவர்களிடம் வினா விடை அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாநிரலில் குறிப்பிட்ட குழு அமைப்பதற்கான காரணிகள், வரவு செலவு, வங்கிக் கடன் பெறுதல், சேமிக்கும் பழக்கம், குழுவின் செயல் பாடுகள், வருமான அமைப்பு போன்ற பல செய்திகள் பெறப் பட்டன. வினா நிரல் அடிப்படையில் பெறப்படுகின்ற செய்திகள் சமூகவியல் நோக்கில் மகளிர் சுயஉதவிக் குழுவின் செயல்பாடுகள் ஆராயப்பட்டன. வினா நிரலுக்கான மறுமொழிகளே இவ்வாய் வின் முதன்மைத் தரவுகளாக அமையும். மகளிர் தொடர்பான வெளிவந்த கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், ஆண்டு மலர்கள், களஞ்சியங்கள், அரசு அறிக்கைகள் போன்றவற்றில் வந்த செய்திகளும் துணைத் தரவு களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்ந்தறியும் கூறுகள்

ஆய்வின் எல்லையான தஞ்சாவூர் தாலுக்காவில் உள்ள நாஞ்சிக்கோட்டை ஊராட்சியில் நன்கு செயல்படுகின்ற எட்டு மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆராயப்பட்டுள் ளன. தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்ட வணைப்படுத்தப்பட்டுள்ளது. பகுப்பாய்வில் தரவுகளுக்கிடையே நிலவும் தொடர்புகள், அதற்கான காரணங்கள் மற்றும் விழுக்காடு கணக்கிடல் முறையில் உத்திகள் பயன்படுத்தப்பட்டன. சேகரிக் கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அட்டவணைப் படுத்தப்பட்டு விளக்கங்கள் மற்றும் அதற்கான முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன.

ஆய்வின் வரையறை

தஞ்சாவூர் தாலுக்கா நாஞ்சிக்கோட்டை ஊராட்சிக்கு உள்ளடக்கிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மட்டும் இவ்வாய்வுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுப்பணி குறிப்பிட்ட காலக் கட்டத்திற்குள் முடிக்க வேண்டிய பணி என்பதால் எட்டு மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர் 150 மகளிர் மட்டுமே நேரடித் தரவுகள் சேகரிக்கப்பட்டன. எனவே இவ்வாய்வு நுண்ணோக்கு ஆய்வு இல்லை. இந்த நிலையில் தஞ்சாவூர் தாலுக்காவை அடிப்படை யாகக் கொண்டு எடுக்கப்படும் விவரங்களை வைத்து ஒட்டு

மொத்தமாக ஒரு முடிவுக்கு வந்தாலும், அந்த முடிவு ஏற்கப்படக் கூடியதுதானா என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது உள்ளது. இந்நிலையில் இம்மாவட்டத்தைப் போலவே பிற மாவட்டங்களிலும் இதுபோன்ற ஆய்வு மேற்கொள்ளப்படுமேயானால் தெளிவான ஒரு முடிவினைப் பெற வாய்ப்புண்டு.

ஆய்வின் வடிவமைப்பு

இந்த ஆய்வானது கீழ்க்கண்டவாறு ஐந்து இயல்களைக் கொண்டு அமையும்

இயல் 1: முன்னுரை

இயல் 2: நூலாய்வு

இயல் 3: தஞ்சாவூர் அமைவிடம்

இயல் 4: பகுத்தாய்வும் விளக்கமும்

1. மகளிர் சுயஉதவிக்குழு அமைப்பு - செயல்பாடுகளும் முன்னேற்றமும்
2. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் சமூக பொருளாதார நிலை
3. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் அவற்றைத் தீர்க்கும் முறைகளும்

இயல் 5: கண்டுபிடிப்புகளும் பரிந்துரைகளும்

துணை நூற்பட்டியல்

இயல் - 2

நூலாய்வு

நூலாய்வு, பகுப்பாய்வு மற்றும் விவாதங்கள் சிறப்பாக அமைவதற்காக தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம், தஞ்சை மைய நூலகம், பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகம், ஆய்வேடு தொடர்புடைய நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், அரசு அறிக்கைகள், செய்தித்தாள்கள் ஆகியவற்றின் மூலம் திறனாய்வு செய்யப்பட்டன. விவாதநிலை தெளிவாக அமையவும், பயனுள்ளதாக ஆய்வாளர்கள் மற்றும் அறிஞர்கள் எழுதியுள்ள நூல்களை மதிப்பீடு செய்தல் அவசியமாகிறது.

ஜாக்குலின் டிரைவர்ஸ் (1985) பெண்களின் நிலை குறித்துப் பின்வருமாறு கூறுகிறார்.

1. குடும்ப விஷயங்களில் கணவர்களைவிட மனைவிகள் சொல்வதே இறுதியானதாக இருக்க வேண்டும்.

2. வேலை என்பது ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான். இருப்பினும் பெண்களைப் பொருத்தவரை மன நிறைவு என்பதானது குழந்தைகளிடையேயும் வீட்டிலும்தான் உள்ளது.

3. ஒரு பெண் வீட்டில்தான் முக்கிய இடத்தைப் பெறுகிறாள்.

4. தன் வேலையைத் தானே தேர்வு செய்வதன் மூலம் ஒரு பெண் முழுமையானவளாகவும், சுதந்திரமான வளாகவும் கருதப்படுகிறாள்.

5. ஒரு பணியை மேற்கொள்ளும்போது ஒரு பெண் இலாபம் அடைகிறாள். அவ்வாறே அவளுடைய குடும்பமும் பயனடைகிறது.

மிஸ்ரா (1992) கோடிக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்படுவதாக அரசு ஆவணங்கள் கூறுகின்றன. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் இவ்வாறாக கொணரப்பட்ட நிலங்கள் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், முன்னாள் இராணுவ வீரர்களுக்கும் ஆதரவற்றோருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இவ்வாறாக நிலங்கள் விநியோகிக்கப்படும்போது பயனாளிகள் பெயரில் கணவன் மற்றும் மனைவி இருவரின் பெயர் பட்டாவில் இருக்க வேண்டும் என மைய அரசு மற்றும் மாநில அரசின் நடத்தை நெறிமுறைகள் தெளிவாகக் கூறுகின்றன. இவ்விதிமுறைகள் மீறப்படுவதை முதன்மை ஆதாரங்கள் தெளிவுறுத்துகின்றன. இதுபோன்ற சூழலில் கணவர் பெயரில் மட்டுமே பட்டா வழங்கப்படுகிறது. இந்நிலையில் மகளிர் மேம்பாடு பற்றியும் நிலச்சீர்திருத்தம் பற்றியும் நாம் எவ்வாறு பேசமுடியும்?

ஆரம்பகால ஆய்வுகள் ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்கள் அதிக அளவில் விவசாயத்தில் ஈடுபட்டதையும், அதே நேரத்தில் அவர்களுக்கு எவ்வித உரிமையையும் பெறாமல், சார்ந்தே இருந்த நிலையையும் சுட்டுகின்றன. உண்மையில் மகளிர் மேம்பாடு என்றால் நிலத்தில் அவர்களும் சட்ட உரிமையைப் பெறுவதோடு ஆண்களுக்கு நிகராக நடத்தப்படவேண்டும். கெயில் ஆம்வெட் பரம்பரை பரம்பரையாக பெண்களுக்கு குறைந்த அளவே முக்கியத்துவம் தரப்படுவதாகவும், குறைந்தே மதிப்பிடப்படுவதாகவும் கூறுகிறார். திறமையான வேலைகளுக்கு பெண்களைப் பயிற்சி தந்து ஈடுபடுத்த முடியாது என்ற கருத்தை அவர் மறுக்கிறார். இவ்வாறு செய்வதன் மூலம் பெண்கள் ஒதுக்கி வைக்கப்படுவதாக அவர் கூறுகிறார்.

மரியா மைஸ் (1993) பெண்களுக்கு அவர்கள் எவ்வாறெல் லாம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என உணர்த்த மனச் சான்று தேவையில்லை. சமூகப் பணிகளில் ஈடுபடல், சட்டமுறை, நிர்வாகம், அரசியல் கட்சிகள், நிலச்சீர்திருத்த அறிமுகத்தில் அரசிதழ் பதிவுபெறா அலுவலர்கள் ஆகிய பல நிலைகளிலான பங் களிப்பு பொருளாதார சீர்திருத்தங்கள் மட்டுமன்றி சமூக சீர்திருத் தங்களையும் கொண்டு வந்துள்ளது. இதன் காரணமாக விவசாயத் தொழிலாளர்கள், குறிப்பாகப் பெண்கள், மக்கள் இயக்கங்களுடன் தம்மை முழுமூச்சாக ஈடுபடுத்திக் கொண்டு, நிலச்சீர்திருத்தச் சட் டங்களை விரைந்து செயல்படுத்த ஆயத்தமாகியுள்ளனர். மென்சர் மற்றும் சாரதாமணி ஆகியோர் பெண்களை விட ஆண்கள் அதிக மாக ஊதியம் பெற்றாலும் ஆண்களைவிட பெண்கள் தான் தம் வரவில் அதிக அளவிலான தொகையைச் செலவழிக்கின்றனர். குழந்தைகளை வளர்ப்பது தம் பொறுப்பு என பெண்கள் நன்கு உணர்ந்துள்ளனர். விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை பெண்களின் பங்களிப்பு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நடுத் தர விவசாயிகளைப் பொறுத்தவரையில்கூட பெண்களின் நிலை உயர்நிலையில் உள்ளது. நிலச்சீர்திருத்த முறையாக அறிமுகப்படுத் தப் பெற்றால் பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம் மேம்பாடு அடைவதோடு சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சமூக உரிமைகள் நிலையிலும் உயர்ந்த அளவிலான சமத்துவ நிலை யைப் பெறமுடியும்.

கத்லீன் கவ் (1993): நிலச்சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப் பட்டதன் விளைவாக பெண்களின் நிலையில் நல்ல மாற்றம் ஏற் பட்டுள்ளதைக் காணமுடிகிறது. நிலச்சுவான்தார்களிடம் குறைந்த அளவிலும், தம் வயதையொத்த ஆண்களிடம் அதிகமான அள விலும் பெண்கள் அனுசரித்து பணி செய்கின்றனர். நாற்று நடல், களை பறித்தல், அறுவடை செய்தல் என்ற பலவாறான நிலை களில் நன்கு பணியாற்றுகின்றனர். அவர்களில் சிலர் நிலச்சுவான் தார்களின் வீட்டில் பணியாற்றுகின்றனர். நிலச்சீர்திருத்தச் சட்டத் தால் விவசாயத் தொழிலாளர்களில் பெண்கள் அதிகம் பலனடை யும் நிலையில் இருப்பினும் சமூக உறவு நிலைகளில் அவர்கள் சரி சமமாக மதிக்கப்படுவதில்லை. இந்தியச் சமுதாயக் குடும்ப அமைப்பில் காணப்படும் குடும்பத் தலைவருடைய ஆதிக்கத்தின் பாதிப்பே இதற்குக் காரணம். பெண் விவாசயத் தொழிலாளர்கள்

மக்கள் இயக்கங்களில் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டாலும் கூட முடிவெடுத்தல் என்ற நிலை ஏற்படும்போது அவர்களுக்கு போதிய அளவில் முக்கியத்துவம் தரப்படுவதில்லை.

பிரீத்தி சிங் & சரோஜ் காஷ்யப் (1993) இருவரும் கடன் வசதி பெறுவதில் கிராமப்புறப் பெண்கள் முடிவெடுக்கும் நிலை குறித்து விவாதிக்கின்றனர். இல்லம் மற்றும் வயல் என்ற நிலைகளில் கிராமப் பெண்களின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்துவிடுகிறது. ஆகையால் அவர்கள் சமூகத்தில் ஒரு முக்கியமான அங்கமாகக் கருதப்படுகின்றனர். முடிவெடுக்கும் நிலையில் காட்டப்படுகின்ற பங்களிப்பு இறுதி முடிவு எடுக்கும் வரை முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

முன்பெல்லாம் பெண்கள் முடிவு எடுக்கும் நிலை என்ற நிகழ்வில் கலந்து கொள்ளத் தகுதியற்றவர்களாகவும், அத்தகு அறிவு இல்லாதவர்களாகவும் கருதப்பட்டனர். அண்மைக் காலமாகப் பெண்களின் பங்களிப்பும் நிலையும் ஒரு தொடர்ந்த மாற்றத்தைக் கண்டுவருகின்றன. தற்பொழுது வீட்டுப் பிரச்சனைகளில் முடிவு எடுப்பதில் பெண்கள் முக்கியமான பங்கினை ஆற்றுகிறார்கள். இதன் மூலமாகப் பெண்கள் குடும்பப் பிரச்சனையில், குறிப்பாக நீதி தொடர்பானவற்றில் முடிவெடுப்பதில் முக்கியமான பங்கினை ஆற்றுகின்றனர். தம் கணவர்களுக்குக் கிட்டத்தட்ட ஒரு வங்கிபோல இருந்து செயல்படுகின்றனர். இவ்வாறாக அவர்கள் முடிவு எடுக்கும் நிகழ்வில் முக்கியமான இடத்தைப் பெறுவதற்குக் காரணங்களாகச் சமூகப் பண்பாட்டு நிலையில் பொருளாதாரச் சுதந்திரம் மற்றும் மக்கள்தொகைக் காரணிகள், உடல்வாகும் போன்றவற்றைக் கூறலாம்.

இருப்பினும் பெண்கள் முடிவு எடுத்தல் என்ற நிலையில் எத்தகு தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர் என்பதை அறிவது அவசியம். இந்த ஆய்வானது கிராமப் பெண்கள் கடன்வசதியைப் பயன்படுத்துவதில் எந்த அளவு முடிவு எடுக்கிறார்கள் என்பதைப் பற்றி ஆராய்கிறது.

மிஸ்ரா (1993) கிராம மாற்றங்களுக்கான அதிகாரபூர்வமற்ற பிரதிநிதிகளே பெண்கள் என்று கூறுகிறார். நாடு விடுதலை பெற்ற

முதல் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் பல வளர்ச்சித் திட்டங்களுக் காகவும், விவசாய அடிப்படை வசதிகளுக்காகவும், அணைகள், சாலைகள், பாலங்கள், தொழிற்சாலைகள் போன்றவை கட்டுவதற் காகவும், பொருளாதார வளர்ச்சி நிலையை மேப்படுத்தவும் ஒதுக் கப்பட்டுள்ளன. துரதிருஷ்டவசமாக இரு அடிப்படை இலக்கு களை அடையத் தவறிவிட்டதைக் காணமுடிகிறது. ஒரு இலக்கு மேம்பாடு அடைந்த சமத்துவம் மற்றும் அதிக அளவிலான பொரு ளாதார சந்தர்ப்பங்கள் நாட்டிலுள்ள பெரும்பாலான ஏழைகளுக்கு கிடைப்பது என்பதாகும்.

மற்றொரு இலக்கு அவற்றை யார் பெறுகின்றார்களோ அவர்களோடு தொடர்புடையது. அவர்களின் பண்பாடு நெறி முறையும் அவர்களுடைய பொருளாதாரக் கடமைகளை வரை யறுத்துவிடுவதால் அந்த வளர்ச்சி நிலையிலிருந்து ஆதாயம் பெறு கின்ற அவர்களுடைய திறமை முன்வைக்கப்படுகிறது. உண்மை யில் சொல்லப்போனால் இந்தியப் பெண்களுக்கு வளர்ச்சித் திட் டங்களில் குறைந்த அளவிலான அறிமுகம் ஏற்படுகிறது. அதன் காரணமாக அவர்களால் குறைந்த அளவிலான பயன்களைப் பெற முடிகிறது. பெரும்பாலான பயன்கள் ஆண்களைச் சென்றடையும் நிலையிலேயே அமைந்துள்ளன. இதன் காரணமாக பெண்களின் நிலையில் சற்று இறக்கம் காணப்படுகின்றது.

மார்கிரெட் பென் *(1993:143)* 'தொழில் முனைவோர் வளர்ச்சி' என்ற நூலில் இன்றைய சமுதாயத்தில் மகளிர்கள் எவ் வாறு முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள் என்பது பற்றி கீழ் வரும் கருத்துக்களில் குறிப்பிடுகின்றார். மகளிர் பல்வேறு நட வடிக்கைகளில் வெற்றிகரமாகச் செயல்படுகின்றனர். சமுதாயம், உலகியல் மற்றும் பொருளாதாரத் தடைகளை மீறி பல்வேறு பணி களில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு முக்கிய காரணமாக பெண் கல்வி, சமுதாயச் சீர்திருத்தங்கள் போன்றவை உள்ளன. இன்று இந்தியாவில் மகளிர் மதிப்புமிக்க பணிகளில் ஈடுபட்டு வருகின் றனர். இவர்கள் கணித மேதையாகவும், புகழ்மிக்க விஞ்ஞானி களாகவும், மருத்துவர்களாகவும், கல்வியாளர்களாகவும், நிர்வாகி களாகவும், தொழில் முனைவோர்களாகவும், கட்டிடக் கலைஞர் களாகவும் செயல்பட்டு வருகின்றனர். இன்றைய ஜனநாயக நாட்

டில் பெண்கள் தலைவர்களாக உயர்ந்து செயல்பட்டு வருவதைக் காண்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஊர்வசி குலதி *(1995)* தன் 'Trench and Magnitude of Crime Against Women' *(1987-1991)* என்ற நூலில் மகளிர் குழுக்கள் மூலம் பெண்களை ஒன்றுதிரட்டி அவர்களிடம் தலைமைப் பண்பை உயர்த்திக் கொள்ளவும், சுயமரியாதை மேப்படுத்திக் கொள்ளவும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம். சட்டத்தை முறையாகச் செயல்படுத்தவும், பெண்கள் மீதான அநீதியை கட்டுக்குள் கொண்டு வந்து அவர்களைப் பாதுகாக்கவும் பெண்கள் குழுக்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும். பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்கள் தொடர்பான 73 மற்றும் 74 ஆவது சட்டத்திருத்தங்கள் பஞ்சாயத்தில் குறைந்த அளவு மூன்றில் ஒரு பங்கு பெண்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதோடு தொடர்புடையதாகும். இது தவிர பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்கு மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத அளவு பெண்கள் பெறுவர். இச்சட்டம் செயல்பாட்டுக்கு வரும் காலத்தில் 7.5 லட்சம் பெண்கள் பஞ்சாயத்து உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். முன்னரே பஞ்சாயத்து தேர்தல் நடந்துமுடிந்த மேற்கு வங்காளத்தில் மொத்த உறுப்பினர்களில் *38* விழுக்காட்டினர் பெண்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது சட்டத்தில் கூறப்பட்டுள்ள குறைந்த அளவு மூன்றில் ஒரு பங்கு என்ற நிலையைவிட அதிகமாகும்.

உண்மையில் இது ஒரு புரட்சிகரமான படிநிலைதான். வீணா மஜீம்தார் 'ஏதோ ஒரு வழியில் பெண்களின் முன்னேற்றத்துக்கான நிலை பெண்களுக்கான தேசிய ஆணைய உருவாக்கம்' என்கிறார். ஒருவிதத்தில் பெண்களுக்கு அதிகாரம் கொடுப்பதற்கான வாய்ப்பு இது. பெண்கள் நலனைக் கூர்ந்துநோக்கும் முக்கியமான கவனிப்பாளர்களாகப் பெண் பஞ்சாயத்து உறுப்பினர்கள் இருப்பர். அவர்களின் நிலை, எளிதாக அணுகும் பாங்கு, கீழ்நிலையில் அணுக்கமான தொடர்பு, பெண்கள் தொடர்பான புரிந்துணர்வு போன்றவை கிராமப்புறப் பெண்களின் நிலையை மேம்படுத்தும்.

அரசுக்கும், பெண்களுக்கும் இடையே இருந்து செயல்பட்டு வருகின்ற, பெண்களைக் கொண்ட பஞ்சாயத்துகள் பெண்

களுக்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்த்துக் குரல் கொடுக்கும் அமைப்பாக அமையும். இதுபோன்ற சட்டங்கள் கிராமப்புறங் களில் முறையாக அறிமுகப்படுத்தப்படுவதற்கு அவர்கள் முயற்சி களை மேற்கொள்ளலாம். கிராமப்புறப் பெண்களிடையே கல்வி யறிவு, மருத்துவ உதவி, ஆரோக்கியம், பொருளாதார மற்றும் சமூகநலன் என்ற பல துறைகளில் சமூக மாற்றங்களைக் கொண்டு வர அவர்கள் உதவலாம். பெண் பஞ்சாயத்து உறுப்பினர்களின் நிலை குறித்து பலர் ஐயப்பாடுகளை எழுப்பியுள்ளனர். அவற்றுள் குறைந்த அளவிலான கல்வியறிவு, போதிய அரசியல் விழிப் புணர்வு இல்லாமை போன்றவை உள்ளிட்ட பல காரணிகளைக் கூறலாம்.

பல தொண்டு நிறுவனங்கள் பெண் முகவர்களுக்குப் பல பயிற்சிகளை வழங்க முன்வருகின்றன. அவற்றுள் மும்பையைச் சேர்ந்த யேஷவந்த்ராவ் சவாண் பிரஷிஸ்தான் உள்ளிட்ட பல அமைப்புகள் அடங்கும். இதன் இலக்குகள் இரண்டாகும். முதலா வதாகப் பெண் பஞ்சாயத்து உறுப்பினர்கள் தம் கடமைகள், பொறுப்புகள், பங்களிப்புகள் எவை என அறியவேண்டும். இரண் டாவதாக அந்தப் பெண் உறுப்பினர்களிடையே செயலாக்கத்தைத் தூண்டிவிட்டு பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை அலசி ஆராய வழிவகை செய்யவேண்டும். இது போன்று பெண் பஞ்சா யத்து உறுப்பினர்களைத் தயார்படுத்துவதில் தொண்டு நிறுவனங் களின் பங்களிப்பு மிகவும் அவசியம். இங்கு துரதிஷ்டமான சூழல் என்னவெனில் தற்போது குறைந்த அளவிலான பெண் அமைப்பு களே காணப்படுகின்றன. அவ்வாறு உள்ளவற்றிலும் பல அமைப் புகள் கிராமப்புறத்தைவிட நகர்ப்புறத்திலேயே காணப்படுகின் றன. இத்தகு சூழலில் ஒருங்கிணைந்த செயல்பாடு தேவைப் படுகிறது. நாட்டிலுள்ள அனைத்து தொண்டு நிறுவனங்களையும் ஒன்றாகக் கொண்டு வந்து இணைத்துச் செயல்படவேண்டும். குறிப்பாக கிராமப்புறத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலமாக பெண்களையும், பெண் பஞ்சாயத்து உறுப்பினர்களையும் ஊக்கு வித்து வழிகாட்டி, அவர்களுடைய பங்களிப்பை உணரச்செய்து பிற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டியது அவசியம்.

இவற்றுள் மிகவும் முக்கியமானது பெண்களைப் பொருளாதார நிலையில் மேம்படுத்துவதேயாகும். பெண்களின் நிலை சிறுமைப்படுத்தப்படுவதற்கு வறுமையும், பொருளாதாரச் சார்பும் காரணிகளாக அமைகின்றன. அதிவேக நகர்மயமாக்கலும், வறுமையில் கொடுமையுமே பெண்கள் குறிப்பாக பெண் குழந்தைகள் விலைமகளிராக ஆகும் நிலைக்குக் காரணங்களாக அமைகின்றன. நல்ல வருமானம் தேடல் என்பது அவர்களை இச் சூழலில் விட்டுவிடுகிறது. இந்நிலையில் கொள்கை முடிவு எடுப்போர், நிர்வாகிகள், சட்டத்தைச் செயலாற்றும் நிறுவனங்கள் பெண்களின் உரிமைகள் மற்றும் பாலினப் பிரச்சனைகளுக்கு முக்கியமான கவனம் தரவேண்டியது அவசியமாகிறது.

ஸ்வேதா மிஸ்ரா (1995) நிலச்சீர்திருத்தம் மற்றும் பெண் அதிகாரம் குறித்து ஆராய்கிறார். நிலமற்ற விவசாயிகள் படும் பாட்டை விரிவாக ஆராயும் அவர் வருமானம் என்பதே ஒரு பெரும் சிரமமான நிலையாகக் காணப்படுவதாகக் கூறுகிறார். பெரும் பெண் விவசாயிகள் படிப்பறிவற்ற பிற்படுத்தப்பட்ட, மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியினராக உள்ளனர்.

பெண்கள் விவசாயம் தொடர்பான பெரும்பாலான பணிகளில் ஈடுபடுகின்றனர். அவற்றுள் நாற்று நடல், அறுவடை செய்தல், களை பறித்தல் போன்றவை உள்ளிட்ட பல பணிகள் அடங்கும். வீட்டு வேலைகளுடன் அவர்கள் பணம் சம்பாதிக்க இவ்வாறான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு முந்தைய பத்திகளில் பெண்களின் இயக்கங்கள் குறித்தும், தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்தும், அவை பெண்களின் நிலையை மேம்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்தும் ஆராயப்பட்டது. இதுவரை விவாதிக்கப்பட்ட அனைத்தும் நிலச் சொத்து தொடர்பான பெண்களின் நிலை தொடர்புடையவை. நிலச்சொத்தில் பெண்களுக்கு சட்ட உரிமை தராமல் பெண்களை அதிகாரப்படுத்துவது என்பது எவ்வகையில் சாத்தியமாக அமையும்?

இந்து சட்டங்கள் ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் சொத்தில் சமபங்கு இருப்பதாகக் கூறினாலும் எத்தனை பெண் குழந்தைகள் சட்டச் சிக்கலின்றி பெற்றோர் சொத்தில் உரிமை பெற

றுள்ளனர்? கொள்கை வடிவமைப்போரும், அறிமுகப்படுத்தும் நிறுவனங்களும் பதில் சொல்ல வேண்டிய பெரிய கேள்வி இது. பெரும்பாலான சட்டங்கள் மூலம் பெண்கள் முழு அதிகாரத்தையும் பெறமுடியவில்லை. உதாரணமாக ஒரு நிலம் கணவன் மற்றும் மனைவி பெயரில் இருக்கும்போது மனைவிக்கு விருப்பம் இல்லாவிட்டால் அக்குடும்ப ஆண் உறுப்பினர் அதனை விற்கவேண்டாம் என சட்டரீதியாகக் கட்டுப்படுத்துவர்.

அசோக்குமார் *(1995:43-44)* 'Rural Industrialisation in India' என்ற நூலில் இன்றைய சமூகத்தில் பெண்களின் இயக்கங்கள் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இதில் இரண்டு மகத்தான இயக்கங்கள் வளர்ந்து வருகின்றது. இந்தக் குழு அமைப்பினால் மத்திய, மாநில அரசுகள் சாதிக்காத சாதனைகளை இன்று பெண்கள் குழுக்களாகச் சேர்ந்து சுயமாகச் சிந்தித்து திட்டமிட்டுச் செயல்படுவது இவர்களின் தன்னார்வத்தையும். ஒற்றுமைகளையும் காட்டுகின்றது. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகின்றது. மகளிர்களுக்குள் ஒற்றுமைத் திறமையை ஏற்படுத்தி பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற நியதியை இதன்மூலம் உணரமுடிகின்றது என்று குறிப்பிடுகின்றார்.

கோபால் லால் ஜெயின் *(1995:26)* 'Rural Development' என்ற நூலில், மகளிர் சுயஉதவிக் குழு மூலம் சமுதாயத்திலும் அரசியல் நிலையிலும் தன்னுரிமை மேம்பாட்டை அடையமுடியும் என்று கூறுகின்றார். பெண்கள் மகளிர் சுயஉதவிக் குழு மூலம் தன்னம்பிக்கை, தைரியம், ஆண் பெண் வேறுபாடின்றிச் செயல்படுதல் ஆகியவை பெற்று, இன்று பெண்கள் உயர்ந்து காணப்படுகிறார்கள். பொதுச் சேவைகளில் பங்கு கொள்ளுதல், பெண்களுக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளுதல், சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் பெண்களால் மேம்பாட்டை அடையமுடியும் என்று உறுதியாகக் கூறுகிறார்.

முத்துச்சிதம்பரம் *(1995:43-44)* 'பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலில், பெண்களின் முன்னேற்றம் பற்றி பின்வரும் கருத்துக்களில் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். இந்திய ஆராய்ச்சி முன்னேற்றக் கழகம் தொழில்நுட்பப் பயிற்சி மையங்

களை இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடத்தி பெண்களுக்குத் தகுந்த தொழில்நுட்பங்களை விளம்பரப்படுத்துகின்றனர். பால் வளமிக்க கால்நடைகளை வளர்க்க ஆதரவு தருகின்றது. இதன் மூலம் அதிகமாகப் பயன்பெறுபவர்கள் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் ஆவர். பெண்களின் கல்வி வளர்ச்சியிலும், அவர்களின் முன்னேற்றங்கள் பற்றியும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் பற்றியும் குறிப்பிடுகின்றார். பெண்களின் முன்னேற்றத்திற்கு பட்டுப்புழு வளர்ப்பு, கிராமிய சிறுதொழில்கள் செய்வதற்கு நிதியுதவி மற்றும் கடனுதவி முதலியவைகளை அளிக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கும் உதவுகின்றது. கிராமங்களில் பெண்களின் ஏழ்மை நிலையைப் போக்குவதற்கு இந்த மகளிர் சுய உதவிக்குழு ஆரம்பித்து இன்று பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்து அடுத்தவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மையுடன் சிறந்து விளங்குகின்றனர் என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் இன்றைய சமூகத்தில் உழைத்து வருமானம் பெற்று வாழ்க்கை நடத்தும் பெண்களை ஒன்றுசேர்த்து சங்கங்களாகவும், கூட்டுறவுகளாகவும் இயங்க வைத்து, தங்கள் தேவைகளைத் பூர்த்தி செய்துகொள்ள வழிவகுக்கின்றன. பெண்களின் குழு அமைப்பு முறை அகமதாபாத்தில் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றது. தெருவில் குப்பை சேகரிப்பவர்கள், கைவண்டி இழுப்பவர்கள், பருத்தி ஆலையில் வேலைசெய்யும் நிரந்தரப் பணியில்லாத பெண்கள் ஆகியவர்களை ஒன்றுசேர்த்து குழு அமைப்பு முறைகளை ஏற்படுத்தி, அதன் மூலம் இலாபம் பெற்று முன்னேற்றம் கண்டு வருகின்றர்.மகளிர் அமைப்புக்கள், தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் பெண்களின் இன்னல்களைப் போக்கவும், அவர்கள் பொருளாதாரத்தில் எவ்வாறு இருக்கவேண்டும் என்பது பற்றியும், இதற்கான சில காரணங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றனர். அரசிடம் கடன்பெற்று தங்களால் முடிந்த சிறுதொழில்கள் செய்து அவற்றின் மூலம் முன்னேற்றம் பெறவேண்டும். இதன் மூலம் பெண்களிடையே விழிப்புணர்வும் தன்னம்பிக்கையையும் அதிகரிக்கச்செய்யவும் இந்த மகளிர் சுய உதவிக் குழு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது என்று குறிப்பிடுகின்றார்.

சர்மா *(1998:84)* 'Rural in India' என்ற நூலில் பெண்களின் வளர்ச்சி பற்றிய கருத்துக்களை பின்வருமாறு குறிப்பிடுகின்றார். பெண்களின் நிலையில் முன்னேற்றங்கள் இருந்தாலும் ஆண்களுடன் ஒப்பிடும்போது சமூக பொருளாதார அடிப்படையில் பின்தங்கியே இருக்கிறார்கள். பெண்களின் திறமைகள், செயல்பாடுகள் வளர்ச்சியடைந்தால்தான் கிராமங்களும் குடும்பங்களும், மாநிலமும், நாடும் முன்னேறும். இதன் அடிப்படையில் தமிழக அரசு மகளிர் மேம்பாட்டிற்காக மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்தது. இத்திட்டம் மகளிர் வாழ்க்கையில் ஓர் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறியுள்ளார்.

சிங் *(1999)* தனது 'Self Help Groups and Pressure Groups for olden Persons' என்ற கட்டுரையில் அதிகாரப்படுத்தல் என்பது முடிவெடுத்தல் மற்றும் அதிகாரப் பங்கீடு என்ற நிலைகளில் அமைவதாகக் கூறுகிறார். அதிகாரப் பங்கீடு என்பதானது வழிவழியாக வரும் நிலையில் அல்ல என்கிறார். உணர்வு ரீதியான பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தேவைகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். அவ்வாறே குழு மேற்கொள்ளும் செயல்பாடுகளின் பங்களிப்பு முக்கியமானதாக அமைகிறது.

சுயஉதவி என்பதானது தனியார், நிறுவனம், கொள்கை நிலம் என்ற நிலைகளில் அமையும். சுயஉதவி செய்து கொள்வோர் தம் செயல்பாடுகள் மூலம் தன்னையும் மேம்படுத்தி, பிறரையும் மேம்படுத்துகின்றனர். தனியார் நிலையில் இதனைச் செயல்படுத்தும்போது போதுமான திறமை இருக்க வேண்டியது அவசியம். நிறுவனம் ரீதியாக நோக்கும்போது நிர்வாகத்தில் குடிமகனின் ஈடுபாட்டைக் குறிக்கிறது. கொள்கை நிலை அல்லது சமூகநிலை என்ற அளவில் அதிகாரப்படுத்தல் முயற்சியில் திட்டம், தேவை மதிப்பீடு. இருக்கின்ற வளங்களை ஒதுக்கீடு செய்தல், புதிய வளங்களை வளர்த்தல், பிற நிறுவனங்களை நிர்வகித்தல், ஆய்வு, கல்வி போன்ற பல கூறுகள் அடங்கும். சுயஉதவியில் ஈடுபடுத்திக் கொள்வோர் சட்டம் மற்றும் கொள்கை முடிவில் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

ஜெயமாலா (2000) கிராமப்புறப் பெண்களைப் படிப்பி விப்பதன் மூலமும், அவர்களுக்குப் பயிற்சி தருவதன் மூலமும் ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் கொணர முடியும் என்கிறார். இதன் மூலமாக ஒட்டுமொத்த சமூக நலனுக்கான திட்டங்களை அறி முகப்படுத்த முடியும். தெற்குக் கன்னடா மற்றும் உடுப்பி மாவட் டங்களில் சில இடங்களில் சுயஉதவிக் குழுக்கள் அரசு பதிவுபெறா அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர வேறு பல திட்டங்கள் தென் னிந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கர்னாடக மாநிலத்தில் தெற்குக் கன்னட மாவட்டத்தில் இரு வட்டங்களில் ஏழைகளின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்த திட்டங்கள் இவ் வாறான குழுக்களால் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஞானவிகாஸ் திட்டம் எனப்படும் பெண்களுக்கான திட்டம் பெண்கள் பயத்தி லிருந்தும் கூச்சத்திலிருந்தும் விடுபட வழிவகை செய்வதோடு அவர்களால் சமுதாயத்திற்கு பெரும் பங்களிப்பு செய்ய முடியும் என்ற ஓர் எண்ணத்தையும் ஊக்குவிக்கிறது.

பெண்களின் கனவுகளையும் நம்பிக்கைகளையும் செயல் படுத்த ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் கூட் டம் நடத்தப்பெறுது. இதுபோன்ற கூட்டங்களில் சிறுசேமிப்பின் முக்கியத்துவம், குடும்பக் கட்டுப்பாடு உள்ளிட்ட பலவற்றின் முக்கியக் கூறுகள் எடுத்துரைக்கப்படுகின்றன. ஒரு மனிதனுக்கு உணவுக்காக மீன் தருவதைவிட அவனுக்கு நீந்தக் கற்றுக் கொடு என்ற பழமொழியை நினைவூட்டும் வகையில் இத்திட்டம் வடி வமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற கூட்டங்களில் மக்களின் பங் களிப்பானது ஒவ்வொரு நிலையிலும் முக்கியமானதாகக் கருதப் படுகிறது.

இராஜீவ் (1999) 'சிறப்பு மலர்' என்ற இதழில், சுயதொழில் செய்தல் பற்றிய கருத்துக்களை இவர் கூறுகின்றார். தன்னார்வப் பகிர்வின் மூலமாக ஜீவன் இயக்க பெண்கள் சலவை சோப் தயார் செய்யும் தொழில் செய்கின்றனர். இவர்கள் உற்பத்தி செய்த பொருட்களை கிராமங்கள்தோறும் விற்பனை செய்வதற்கு பிரதி நிதிகள் நியமித்துள்ளனர். பெண்கள் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விளம்பரத்திற்காகவும், அவர்களின் தொழில்களை அதிகரிக்கச் செய்வதற்காகவும் உற்பத்தி செய்த பொருட்களைக் கொண்டு செல்வதற்கு புதிய வாகன வசதிகள் ஏற்படுத்தப்பட

உள்ளது. பெரிய நிறுவனங்களுடன் இணைந்து செயல்படவும் அரசு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மகளிர் வாகனத்தின் மூலம் கிராமங்கள்தோறும் சென்று பொருள்களை விற்று அதன் மூலம் இலாபம் பெறுகிறார்கள் என்று கூறியுள்ளார்.

செல்வராஜன் (1999) 'புதுகைப்புனல்' என்ற இதழில் பின்வரும் கருத்துக்களைக் கூறுகின்றார். மக்களிடையே மகளிர் சுய உதவிக் குழு கருத்துக்களை எடுத்துக்கூறி மக்களிடையே ஒற்றுமை ஏற்படுவதற்கான விழிப்புணர்வு குறித்த கீழ்க்கண்ட கருத்துக்களைக் கூறுகின்றார். நகர் மற்றும் கிராமப்புற ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் பெண்கள் பல பணிகளில் மேம்படுத்தப்பட்டு வருகின்றனர். தற்போது கூட்டுறவு வங்கி மூலம் பெண்கள் அதிக அளவு கடன் வாங்குவதிலும் சேமிப்பு நிதியை இருப்பு வைப்பதிலும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக கூட்டுறவு வங்கி, குழுக்களுக்கு உதவிகள் செய்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் 4129 சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி அளிக்கப்பட்டன. சுழல் நிதியாகவும் பொருளாதார மேம்பாட்டு நிதியாகவும் வழங்கப்பட்டுள்ளது. குழுவின் முன்னேற்றம் காரணமாக புதுக்கோட்டை மாவட்டம் தமிழகத்திலேயே ஒரு முதலிடமாகத் திகழ்கிறது. ஒரு சுய உதவிக் குழுவிற்கு கடனுதவி அளிக்கப்பட்டால் அதிலுள்ள 20 உறுப்பினர்களும் பயனடைகின்றனர். இதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றனர். மகளிர்களுக்கு ஊக்கம் அளிக்கச் செய்ய நபார்டு வங்கி, மகளிர் திட்டம், முன்னோடி வங்கிகள் இவை அனைத்தும் இருக்கின்றன என்று கூறியுள்ளார்.

குந்தர் அகர்வால் (2000) அதிகாரம் பெற்ற பெண்களால் மட்டும் ஆண்களுக்கு i. ாக வளர்ச்சி நிலையில் பங்களிக்க முடியும் என்று கூறுகின்றார். பெண்களை அதிகாரப்படுத்த பலவகைக் காரணிகள் சமுதாயத்தில் காணப்படுகின்றன. மீரத் என்னுமிடத்தில் 1999 இல் ஒரு கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்திய நகர்ப்புறத்தைச் சார்ந்த 100 பெண்கள் இவ் ஆய்வில் உட்படுத்தப்பட்டார்கள். இப்பெண்களில் 30 முதல் 70 வயதிற்குட்பட்ட படித்த பணியாற்றுகின்ற மற்றும் பணியில் இல்லாதவர்கள் அடங்குவர். ஆய்வின்போது அப்பெண்களின் படிப்பு, வருமானம், பணி நிலை, குடும்ப உறுப்பினர்களின் மனநிலை, தம்மைப் பற்றிய பெண்களின் எண்ணங்கள் ஆகியவை அடிப்படையாகக் கொள்

ளப்பட்டன. அனைத்து வயதைச் சார்ந்த பெண்களில் 75 விழுக்காட்டினர் மிகுந்த நம்பிக்கையுடன் காணப்படுவதைக் காண முடிந்தது. அவர்களது பொருளாதார நிலையும் கல்வி நிலையும் எந்நிலையில் இருந்தாலும் அவர்களிடையே நம்பிக்கை உணர்வு காணப்பட்டதை ஆய்வில் காணமுடிந்தது.

இருப்பினும் அதிகம் படித்தவர்களில் 65 விழுக்காட்டினரும், அதிக வருமானம் பெறும் பெண்களும்கூட அதிகமாகத் துன்புறுத்தப்படுவதையும் தவறாகப் பயன்படுத்துவதையும்கூட காணமுடிந்தது. வீட்டுவேலை மேற்கொள்ளும் 25 விழுக்காட்டுப் பெண்களில் குறிப்பிட்ட சிலரைத் தவிர பலர் முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மனநிலையை நோக்கும்போது மீதி 30 விழுக்காட்டினர் தம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணத்தோடு இருப்பதை ஆய்வின்போது காண முடிந்தது. குடும்ப உறுப்பினர்களின் செயல்பாட்டைத் தவிர பெண்களுக்குத் தம்மை பற்றிய கருத்தும்கூட சமுதாயத்தில் அவர்களின் நிலையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இந்த ஆய்வின் மூலமாக பெரும்பாலான 70 விழுக்காட்டினர் பணியில் உள்ளோராக இருந்தும், படித்தவர்களாக இருந்தும் கூட தம்மைத் தாழ்ந்த பாலினத்தவராக கருதிக் கொள்கின்றனர். குணத்தை எடுத்துக் கொண்டால் மீதி 30 விழுக்காட்டினரின் குடும்பங்கள் பெண்களின் அதிகாரத்திற்கு ஆதரவாக இருப்பதைக் காணமுடிந்தது. அத்துடன் அவர்கள் பாலின சமத் தன்மையளவில் இருப்பதைக் காணமுடிந்தது. அனைத்துத் தடைகளையும் மீறி பெண்களால் எதையும் சமாளிக்க முடியும் என அவர்கள் நினைக்கின்றனர். பெண்களை அதிகாரப்படுத்துவதற்குரிய காரணிகளாக பெண்களின் கல்வி, பதவி, சுதந்திரப் பொருளாதார நிலை போன்றவை அமைகின்றன. குடும்பத்தாரின் நேர்மறை எண்ணங்களும், பெண்களுக்கு தம்மைப் பற்றிய நேர்மறை எண்ணங்களும் பெண்களின் நிலையில் மாற்றத்தைக் கொண்டு வருவதோடு அவர்கள்ள அதிகாரப்படுத்தவும் முக்கியமான காரணங்களாக அமைகின்றன. இவ்வகையான போக்குக் குறைந்த அளவே காணப்படுகிறது. மனிதநேயத்தைக் கடைப்பிடித்து செயல்படுத்து வதன் மூலமாக இவற்றைச் சாதிக்க முடியும். பெண்களை அதிகாரப்படுத்துவதற்கான ஒரு நல்ல சூழலையும் இது உருவாக்கித் தரும்.

மணிமேகலை மற்றும் ராஜேஸ்வரி (2000) ஆகிய இருவரும் அண்மைக் காலமாக பெண்களை அதிகாரப்படுத்துதல் என்பதானது கல்வியாளர்கள், பெண் அமைப்பைச் சார்ந்தவர்கள், கொள்கை முடிவு எடுப்பவர்கள் ஆகியோரின் முக்கிய சவாலாகக் காணப்படுகிறது என்று கூறுகின்றனர். ஆனால் ஒரே நாளில் பெண்களை அதிகாரப்படுத்திவிட முடியாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஆண்களுக்குச் சரிநிகர் சமமாகப் பெண்களும் சமுதாயத்திற்கு பங்களிக்க வேண்டும் என்ற ஒரு செயல்திட்ட வரைவை அரசானது மேற்கொள்வது சாலச் சிறந்தது எனப் பெண்கள் அமைப்புகள் கருதுகின்றன. ஏனென்றால் அவர்களுக்கு உரிய அளவிலான சந்தர்ப்பங்கள் சமுதாயத்தில் தரப்படுவதில்லை என்பதே அவர்களின் கருத்தாகும். ஆனால் காலம் மாறிவிட்டது. இவை போன்றவற்றை பெண்களால் சாதிக்க முடியும் என நிரூபித்துக் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். இந்நிலையில் இந்திய அரசு 2001- ஆம் ஆண்டை 'பெண்கள் அதிகாரப்படுத்தல் ஆண்டு' என அறிவித்தது மிகவும் பெருமைக்குரியதே.

பெண்களுக்குப் பல வகைகளில் அதிகாரம் வழங்கலாம். கல்வி வசதி, பொருளாதார சந்தர்ப்பங்கள், முடிவெடுக்கும் திறமை மேம்படுத்திக் கொள்ள பயிற்சி தரல், கொள்கை முடிவெடுத்தலில் அவர்களை ஈடுபட வைத்தல் போன்ற நிலைகள் உள்ளிட்ட பலவகையான நிலைகளில் அவர்களுக்கு அதிகாரம் வழங்கலாம். பெரும்பாலான அறிஞர்கள் இவையனைத்திற்கும் மேலாக பெண்களை அதிகாரப்படுத்த மிகவும் சிறந்த வழியாக பொருளாதாரச் சுதந்திரத்தையே பரிந்துரைக்கின்றனர். இது தவிர அவர்கள், ஜயதி கோஷ் (1996), எலா பட் (1997), மைக்கேல் சோசுடாவ்சுகி (1999) ஆகியோர் கிராமப்புறப் பெண்களும், நகர்ப்புறப் பெண்களும் சுய வேலைவாய்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதே சிறந்தது எனக் கருதுவதாகக் கூறுகின்றனர். குறிப்பாகச் சொல்லப் போனால் கிராமப்புறங்களில் தற்போது சுயஉதவிக் குழுக்கள் அரும்பெரும் பணியை ஆற்றி வருகின்றன. சேவா (குஜராத்), கிராமின் வங்கி (வங்காள தேசம்), பணியாற்றும் பெண்கள் அமைப்பு (சென்னை) போன்ற அமைப்புகள் பெண்கள் சுயஉதவி முயற்சியில் ஈடுபட வேண்டும் என அறிவித்து வருவதை உலகமே நன்கு அறியும். அண்மைக்காலத்தில் இந்தியாவில் கிராமப்புறங்களில் சுயஉதவிக் குழுக்களின் பணிகள் பல்கிப் பெருகியுள்ளன.

சொத்துக்கடன் நிலை என்ற கோணத்தில் கிராமப்புறப் பெண்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. சொத்தில் அவர் களுக்கு உரிமை இல்லாத காரணத்தால் கடன் பெறுபவர்களிட மிருந்து பல தொல்லைகளை அனுபவிக்கின்றனர். பணக்காரக் குடும்பத்தில் உள்ளோர்கூட பணம் என்ற நிலையில் அதனைப் பெறுவதில் பலவகையான சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

இத்தகு சிரமங்களிலிருந்து விடுபட வைப்பதற்காக சுய உதவிக் குழுக்களும், பிற கூட்டுறவு வளர்ச்சி நிதி அமைப்புகளும் பெண்களுக்கு அதிக அளவில் வாய்ப்பினைத் தந்து அவர்கள் கடன் வசதி பெற வழிவகைகள் செய்கின்றன. இதன் முக்கியமான நோக் கம் குழு உறுப்பினர்களிடையே சேமிப்பு எண்ணத்தை வளர்க்க வும், அந்த சேமிப்புத் தொகையிலிருந்து அவர்களின் வசதிக்குக் கடன் வசதி பெறவும் என்பதேயாகும். ஆந்திரப் பிரதேசத்தில் இவ் வகையான முயற்சி நல்ல பயனைத் தந்து வந்துள்ளதைக் காணமுடி கிறது. இங்கு வெளியாரின் தலையீட்டிற்கு அவசியமே ஏற்படுவ தில்லை. இத்தகு வசதி மூலம் அவர்கள் பிறரைச் சாராமல் சுதந்திர மாகச் செயல்பட முடிவதோடு மாதம் குறிப்பிட்ட தொகை செலுத்தி நிதிக்கான பொறுப்பை அனைவரும் பகிர்ந்து கொள் கின்ற வாய்ப்பினைப் பெறமுடிகிறது. இவ்வாறாகப் பெண்களை சேமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதன் மூலமாக பொருளா தார மாற்றம் ஏற்படுவதோடு மட்டுமன்றி அதிக அளவிலான சமூக மாற்றத்தையும் கொணரமுடியும். வீட்டு எல்லைக்கு அப்பாற் பட்டு இவ்வாறான செயல்களில் பெண்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக குடும்ப நிலையிலும், கிராம நிலையிலும் அதிக அளவிலான சமூக மாற்றத்தைக் காணமுடிகிறது.

துவாரகி (2000) தன்னுடைய 'Women Self Help Groups : Do they have a niche in the realm of rural development' என்ற கட்டுரையில் கடந்த 5 முதல் 10 ஆண்டுகளாக சுயஉதவிக் குழுக்கள் பற்றிப் பேசப்படுகிறது என்று கூறுகிறார். கடந்த ஓராண்டிற்குள் சுய உதவிக் குழுக்களுக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது என்பது பெரிய அளவில் ஆகிவிட்டது. கிராமப்புற வளர்ச்சி பற்றிப் பேசும் எவரும் சுயஉதவிக் குழுக்கள் குறித்துப் பேசாமல் இருக்கமுடியாது என்ற நிலை தற்போது ஏற்பட்டுவிட்டது.

ஆய்வுக்காக 10 சுயஉதவிக் குழுக்களின் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. நான்கு கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது அவற்றின் தாக்கத்தைக் காணமுடிந்தது.

மகாராஜன் (2000) தன்னுடைய 'Working Women and Empowerment' என்ற கட்டுரையில் பொருளாதாரச் செயல்பாடுகளில் பெண்களின் பங்களிப்பானது வளர்ந்த நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் பொதுவாகவே உள்ளது என்று கூறுகிறார். இந்தியாவைப் பொருத்தவரை, வரலாற்றைக் கூர்ந்து நோக்கினால், பெண்கள் விவசாயத்துறையில் ஆண்களுக்கு உதவியாக இருந்து வருவதைக் காணமுடிகிறது. தொழில் துறையிலும்கூட தொழில்மயமாக்கலின் போது இந்தியாவில் அவர்களுடைய பங்களிப்பு அதிகம் இருந்ததைக் காணமுடிகிறது. இவ்வாறு நோக்கும்போது எந்த ஒரு நாட்டிலும் பெண் தொழிலாளிகள் ஒரு சக்திவாய்ந்த பிரிவினராக இருப்பதைக் காணமுடிகிறது.

பெண்களின் தகுதியும் உடல் வாகும் குறிப்பிட்ட அளவிலான பணிகளையே மேற்கொள்ள வைக்கும் என்ற கருத்து இரண்டு உலகப் போர்களுக்குப் பின்னர் தகர்க்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பெண்கள் தாமாகவே முன்வந்து தொழில் நிறுவனங்களிலும், விவசாயத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். ஆண்கள் கனரகத் தொழிற்சாலைகளில் பணிகளை மேற்கொண்டுள்ளனர். பெண்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதற்கு சுயஉதவி அவசியமாகிறது. பெண்கள் தமக்குத் தாமே உதவிசெய்து கொள்ள பிறர் உதவி செய்ய வேண்டும். ஒரு குழுவில் உறுப்பினராக ஆவதன் மூலமாக ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பு உணர்வு ஏற்படுவதோடு ஒட்டுமொத்த அளவில் பல பயன்களைப் பெறுகின்றார்கள். ஒட்டுமொத்தமாக அவர்கள் முடிவெடுக்க முடிகிறது. பொது நலனைக் கருத்தில் கொண்டு ஒட்டுமொத்தமாகத் திட்டங்களை அறிமுகப்படுத்த முடிகிறது. மேம்படுத்தப்பட்ட அதிகார அடித்தளம் சிறப்பாக அமைய பொருளாதாரச் சுதந்திரம் ஒரு பாதையாக அமைந்துவிடுகிறது. பெண்களின் நிலை உயர உயர முடிவெடுக்கும் அதிகாரமும் உயர்கிறது.

கடன்வசதி பெறுதல், தொழில்முனைவோர் திறமை மேம்பாடு போன்ற நிலைகளிலான திட்டங்களில் பொருளாதார

நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொள்ள பெண்கள் உதவி செய்யப்பட வேண்டும். அரசிதழ் பதிவுபெறா நிறுவனங்கள் இவை போன்ற திட்டங்களில் ஈடுபாட்டோடு செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். பெண்களை இவ்வகையான திட்டங்களில் ஈடுபடுத்துவது இவை போன்ற அமைப்புகளில் பொறுப்பாகும். இவை போன்ற முயற்சிகளுக்கு அரசும் ஆதரவு தந்து ஊக்குவிக்க வேண்டும். சட்டத்தை அறிமுகப்படுத்தி பெண்கள் நல்கை பெறவும், கடன்வசதிகள் பெறவும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது பெண்களின் ஈடுபாட்டினை அதிகம் காணமுடியும்.

ஜெயமாலா (2000) ‘முற்றம் மாத இதழில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பட்டுவளர்ப்பு பற்றி குறிப்பிடும் போது,கர்நாடகா,ஆந்திரா மாநிலங்களில் பட்டுநூல் உற்பத்தி பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது என்று கூறுகின்றார்.புதிய தொழில்நுட்பப் பயிரான பட்டுநூல் பயிரில் உயர்விளைச்சல் தரும் வீரியரகப் பயிர் மல்பரியை பயிர் செய்தல், அதிக இடைவெளியில் மல்பரி பயிரைச் சாகுபடி செய்தல், நல்லமுறையில் பயிர் செய்து தொழுஉரம் இடுதல், சரியான அளவில் இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல், செலவின் அளவைக் குறைக்கும் வகையில் உயிர் உரம், பசுந்தாள் உரம், மண்புழு உரம் இடுதல் ஆகியவற்றை சரியான முறையில் பயன்படுத்தினால் பட்டுநூல் வளர்ப்பில் கிடைக்கக்கூடிய இலாபங்கள் அதிகம். இதற்கு குறுகிய நாட்கள் மட்டுமே தேவைப்படும். இந்த முறைகளைப் பயன்படுத்தினால் நல்ல பயன் பெறலாம் என்று குறிப்பிடுகின்றார். இதன் மூலம் பெண்கள் நல்ல பயிற்சிகள் பெற்று அதன் மூலம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகின்றார்கள் என்று கூறுகின்றார்.

அமிதவா முகர்ஜி (2000), ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரங்களைத் தந்து சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்று கூறுகிறார். இதற்காக ஒரு செயல்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலமாக இரு அமைப்புகளும் இணைந்து செயல்பட்டு பல சாதனைகளை உருவாக்க முடியும். அதிகாரமில்லோருக்கு அதிகாரம் வழங்கல் என்ற

நிலையில் இரு அமைப்புகளுமே செயல்படுவதால் மக்களைச் சார்ந்த நிலையிலான வளர்ச்சி ஏற்படும்.

மாவட்ட நிலையிலும் அதற்குக் கீழ்நிலையிலும் மூன்று அடுக்கு பஞ்சாயத்து நிறுவனச் செயல்பாடு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. இதனைப் பயனுள்ளதாக ஆக்குவதற்கும் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கும் பல்வேறு வகையான குழுக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். உரிய முறையில் இவை செயல்படுத்தப்படா விட்டால் அதன் பயன் முழு அளவில் கிடைக்காமல் போய்விடும். அதன் பொறுப் புணர்வை மேம்படுத்தவும், அதன் பணி நிலை தெளிவானது என்பதைப் புரியவைக்கவும் நிறுவன நிலையிலான தொடர்பு சுயஉதவிக் குழுக்களுடன் கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ராஜசேகர் (2000) தன்னுடைய 'A Distrinction between poverty Alleviation and Reduction' என்னும் கட்டுரையில் வறுமைத் தன்மையைக் குறைத்தல், வறுமையை குறைத்தல் என்பதற்கான வேற்றுமையை ஆராய்கிறார்.

குதிஷாகாந்தி (2002) 1998-99 முதல் 2002-03 ஆண்டுகளுக் கிடையேயான காலகட்டத்தில் பெண் தொழில் முனைவோர் களுக்குப் பயிற்சித் தருவதற்காக தமிழ்நாடு அரசால் ஒதுக்கப்பட்ட தொகை ஐந்து லட்சமாகும் என்கிறார். தமிழ்நாடு அரசு 1,08,924 பெண்களுக்கு இந்தப் பயிற்சியைத் தந்துள்ளது. குறிப்பாக சுய உதவிக் குழுக்கான திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் 20,000 பெண் களுக்குத் தொழில் முனைவோர்க்கான பயிற்சி அளிக்கப்பட் டுள்ளது.

கஸ்தூரி சந்திரசேகரன் (2000) செப்டம்பர் 12 நாளிட்ட இந்து நாளிதழில் மதுரையிலுள்ள பெருங்குடி என்னும் ஊரைச் சேர்ந்த ஒருவர் தன் உரிமைகளுக்குத் தலைவராக இருந்து செயல்படுவதாகக் கூறுகிறார். மகா கலசம் என்ற பெயரிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பின் தலைவராகச் செயல்படும் இவர் கிராமத்து வீட்டில் இல்லத்தரசியாக இருந்து பெண்களின் தலைவியாக மாறியதைப் பற்றி அண்ணாமலையிடம் எடுத்துக்

கூறுகிறார். நான்கு பெண் குழந்தைகள் உள்பட அவளுக்கு ஐந்து குழந்தைகள் என்றும், குடும்பத்தை நடத்த பணம் கடன்பெறும் சூழ்நிலையில் மிகவும் விரக்தியடையும் நிலைக்குச் சென்றுவிட்டதாகவும், அப்பகுதியில் அக்காலக்கட்டத்தில் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு ஆரம்ப நிலையில் இருந்ததாகவும் கஸ்தூரி என்னும் அப்பெண் கூறுகிறார். 1995-இல் பெருங்குடியில் இருந்த அங்கயற்கண்ணி கலசம் என்ற சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக அவர் ஆகியுள்ளார். சில வகையானத் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், சிறிது பணம் சேமிக்கவும் தன்னால் முடியும் என்ற நம்பிக்கையில் அவர் குழுவில் சேர்ந்துள்ளார். அவருடைய ஈடுபாடு 1996-இல் மகாகலசத்தின் தலைவராக ஆகும் அளவு உயர்த்திவிட்டுள்ளது. அவரது முயற்சிக்கு அவருடைய கணவரின் தூண்டுகோல் உதவியாக இருக்கிறது என்கிறார். அவரது கணவர் மீனாட்சியம்மன் கோவில் அருகே அப்பகுதியில் ஆட்டோ ஓட்டுபவராக உள்ளார். தற்போது அவருடைய மூத்த மகள் சுயஉதவிக் குழு ஒன்றில் உறுப்பினராக ஆகியுள்ளார். கஸ்தூரியின் தற்போதைய ஒரே இலக்கு தன்னைச் சுற்றியுள்ள பெண்கள் பொருளாதார நிலையில் மேம்பாடு அடையவேண்டும் என்பதிலும் அவர் மிகவும் தெளிவாக இருந்து செயல்பட்டு வருகிறார்.

பிரீத்தி சந்திரசேகர் (2002) செப்டம்பர் 23 நாளிட்ட இந்து நாளிதழில் சமூக அநீதி மற்றும் கொடுமையிலிருந்து பெண்கள் வெளிவர பொருளாதார நிலையில் அவர்களை அதிகாரப்படுத்த வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார். அண்மைக் காலங்களில் பொருளாதார நிலையில் பெண்கள் முன்னுக்கு வருவதற்கான பொருளாதாரக் கொள்கைகள் அருகிவிட்டதாகவும் அவர்களுடைய சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்த சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு முக்கியமான இடத்தைப் பெறுகிறது என்றும் கூறியுள்ளார். சுயஉதவிக் குழுக்கள் மற்றும் அரசிதழ் பதிவுபெறா அமைப்புகளின் செயல்பாடுகளும் பெண்களின் திறமையை வெளிக்கொணர்வதில் முக்கியமான பங்காற்றி வருகின்றன. பொருளாதாரச் சுதந்திரத்தை பெண்கள் உணர்ந்து கொள்ள சுய உதவிக் குழுக்கள் முக்கியமான பங்கினை வகிக்கின்றன.

அமுதா ஜீலி கிரேஸி (2002) மகளிர் சுயஉதவிக் குழுவின் தன்னார்வப் பகிர்வு (Self Help Groups and Empowerment of Women in Thiruvaiyaru Taluk of Thanjavur District) என்ற ஆய்வியல் நிறைஞர் ஆய்வேட்டில் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தாலுக்காவில் 375 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் செயல்படுகின்றன என்றும், இதில் நன்கு செயல்படக்கூடிய எட்டு குழுக்கள் கிராமப்புற பெண் களிடையே சாதி வேறுபாடுகள் மற்றும் ஒற்றுமையுடன் வாழ்வ தாகவும், பெண்களால் தன்னிச்சையாக செயல்படக்கூடிய குழு அமைப்பானது தன்னார்வத்தையும், மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதாகவும், பெண்கள் பொதுக் கூட்டங்களி லும், அரசியல் துறைகளிலும் இணைந்து சிறந்து விளங்குவதாக வும், பெண்களுக்குள் இருக்கும் தனித்திறமைகளைப் பாராட்டி அரசு நிறுவனங்கள் இக்குழுக்களுக்கு கடன்வழங்க முன்வருவ தாகவும், அதன்மூலம் பெண்கள் சுயதொழில் செய்து நல்ல முன் னேற் றம் அடைந்து வருவதாகவும் கூறியுள்ளார்.

சர்மா (2002) 'தொழில் முனைவோர் மேம்பாடு' என்ற நூலில் பெண்களின் மேம்பாட்டுத் திறமைகள் மற்றும் வளர்ச்சி பற்றிய கருத்துக்களைச் சுட்டிக் காட்டுகின்றார். நம் நாட்டின் வளர்ச்சி பெண்களின் கையில் உள்ளது. சமூகத்தில் இருக்கக்கூடிய உரிமைகள் அனைத்தும் பெண்கள் பெற்று எல்லாத் துறைகளிலும் மேம்பாடு அடைகின்றனர் என்றும், இதையே பெண்களின் தன் னுரிமை மேம்பாடு என்றும் கூறுகின்றார். எல்லா பெண்களும் முழுமையான எழுத்தறிவு பெறவேண்டும். எந்தச் செயல்களையும் சிந்தித்து செயல்படவும், தங்களது உரிமைகளையும், கடமைகளை யும் வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன எனக் கூறுகின்றார்.

ஜோஸ் (2003:11) 'Women Workers in Rural India' என்ற நூலில் பெண்களின் முன்னேற்றங்கள் குறித்து சில கருத்துக்களை குறிப்பிடுகின்றார். மாநிலங்கள் அளவில் செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சுயதொழில் செய்து அவற்றின் மூலம் இலாபம் பெறுகின்றனர். பெண்கள் செய்யக்கூடிய தொழில்கள் அகர்பத்தி செய்தல், மெழுகுவர்த்தி செய்தல், சோப், ஜாம் தயாரித் தல், வற்றல் செய்தல், காய்கறிகள் உற்பத்தி செய்தல் போன்ற சிறு

சிறு தொழில்களைச் செய்து அங்காடிக்குக் கொண்டு சென்று அங்காடி விலையின் பேரில் குறைந்த விலைக்கு விற்கின்றனர். அரசு நிறுவனங்கள் மூலமும், தொண்டு நிறுவனங்கள் மூலமும் கடன் பெற்று தொழில்களின் தரத்தை அதிகரிக்கச் செய்கின்றனர். சுயமாக தொழில் செய்வதன் மூலம் சமூகத்தில் தன்னிச்சையாக வாழ முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ரெஜினா பாப்பா (2003) தமிழ்நாடு 'மகளிர் மேம்பாடு' என்ற மாத இதழில் பின்வரும் கருத்துக்களை கூறுகின்றார். தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் வேறுபாடுகள் இன்றி ஒற்றுமையுடன் செயல்பட்டு வருவதைக் கூறுகின்றார். மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் சேமிப்பு மற்றும் ஒற்றுமைத் திறமைகளை ஆராய்ந்து சேமிப்புப் பழக்கம் பெண்களின் வாழ்க்கை நிலையை எவ்வாறு உயர்த்துகின்றது என்றும், உறுப்பினர்களின் ஒற்றுமை மக்களிடையே தன்னம்பிக்கையும், அதிகாரத்தையும் ஏற்படுத்துகின்றது. குழு கூட்ட முறையின் மூலம் பெண்களிடையே பிரச்சனைகள் ஏற்படுவதைத் தவிர்க்கவும், சாதி வேறுபாடுகள் இல்லாமல் இருப்பதையும், ஒற்றுமைகளையும் மக்களிடையே தன்னம்பிக்கையும் ஏற்படுத்துகின்றது. இதற்கு முன்னுதாரணமாக இந்த மகளிர் சுயஉதவிக்குழு மக்களிடையே பாகுபாடு இல்லாமல் இருப்பதைக் காட்டுகின்றது.

ஆனந்த் (2003) 'முற்றம்' மாத இதழில் தனது கருத்துக்களை பின்வருமாறு கூறுகின்றார். இந்தியாவில் சுயஉதவிக் குழுக்கள் பொருளாதாரம் மற்றும் சமுதாயப் புரட்சிக்கான அணுகுமுறைகளை உருவாக்குகின்றன. மத்திய அரசாங்கம் தவிர Nabard வங்கிகள், அரசுசாரா நிறுவனம், தொண்டு நிறுவனம், சர்வதேச அளவில் செயல்படுகின்ற அமைப்புகள் ஆகியவை மூலம் கடன் வாங்கி தங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துகின்றனர். ஆண், பெண் பாகுபாடின்றி ஒரேமாதிரியான தொழில்கள், கல்விகள், வேலைவாய்ப்புகள் இவைகளில் வேறுபாடுகள் இருப்பதை சுட்டிக் காட்டுகின்றார். இந்தத் தேவைகள் அனைத்தும் அனைவருக்கும் சமம் என்ற கருத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

இராஜேந்திரன் (2003) 'Women and Politics in India' என்ற நூலில் சில கருத்துக்களைக் குறிப்பிடுகின்றார். தமிழ்நாட்டில்

உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்க அரசு நிர்ண யித்துள்ளது. மகளிர் நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மற்றும் வங்கிகள் மூலம் 900 கோடி கடன் வழங்கி அதன் மூலம் மக்கள் சுயமாக சிறு தொழில்கள் செய்தல், கால்நடைகள் வளர்த்தல், வட் டிக்கு விடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு மகளிர் முன்னேற்றம் கண்டு வருகின்றார்கள். ஏழ்மையில் இருக்கும் பெண்களுக்குக் கடன்கொடுத்து உதவிகள் செய்வதும், அவர்களின் வறுமையைப் போக்கவும் மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதுமாக செயல்பட்டு வருவதற்குக் காரணமாக மகளிர் சுயஉதவிக்குழு ஒரு சான்றாக விளங்கி வருவதைக் காண்கின்றோம் என்று கூறுகின்றார்.

கலா பார்வதி (2004) தினமணி நாளிதழில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். நாகை மாவட்டம், பூம்புகாரைச் சேர்ந்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் காகிதப் பொம்மைகள் செய்து வருகின்றனர். இவர்கள் செய்துவரும் இந்த கைவண்ணப் பொம்மைகளுக்கு நெதர்லாந்து நாட்டோடு நல்ல வரவேற்பைப் பெற்று குழு உறுப் பினர்கள் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள் செய்த பொருட்கள் நெதர்லாந்து நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு கிடைத்துள் ளது. இவர்கள் செய்துவரும் பொருட்கள், சீன குபேர பொம்மை கள், நர்த்தன விநாயகர் சிலை, புத்தர் சிலை, பொம்மைகள் மற்றும் சுடுமண் பொம்மைகள் இவைகளைச் செய்ததின் மூலம் மக்க ளிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகின்றனர் என்று கூறு கின்றார். இந்தக் குழு உறுப்பினர்கள் 10 லட்சம் பெறுமான பொருள்களைச் செய்து அவற்றின் மூலம் இலாபம் பெற்று வரு கிறார்கள். இன்றைய சமுதாயத்தில் பெண்கள் அறிவுப்பூர்வ மாகவும் கூட்டமைப்பு முறையினாலும் சிறந்து விளங்கி வரு வதைக் காண்கிறோம் என்று கூறியுள்ளார்.

12.6.2004 ஆம் நாள் வெளியான தினமணி நாளிதழ் பின் வரும் கருத்துக்களைக் கூறியுள்ளது. மதுக்கூரில் உள்ள சுயஉதவிக் குழு பெண்கள் 2001-இல் குழுவைத் தொடங்கினார்கள். குழு சேமிப்பின் மூலமும், வங்கிகள் மூலம் கடன் பெற்றும், சுயமாகத் தொழில்கள் செய்து வருகின்றனர். இருபது உறுப்பினர்களும் பாகு பாடு பாராமல் மதுக்கூர் கிராமத்தில் உணவகம் நடத்தி வருகின்ற னர். இந்த உணவகம் நல்லமுறையில் செயல்பட்டு மதுக்கூர் மக்க ளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. மற்ற கடைகளை

விட இங்கு கொஞ்சம் குறைந்த விலையில் விற்று வருகின்றனர். இதனால் அதிகக் கூட்டம் வருகின்றது. இருபது உறுப்பினர்களும் ஒற்றுமையாகச் செயல்பட்டு வருவதால் அவர்கள் எந்தவிதமான பிரச்சனைகளையும் எதிர்கொள்வதில்லை. தங்கள் வேலைகளை தாங்களே செய்வதன் மூலம் நல்ல வருமானம் கிடைக்கின்றது. இந்தக் குழுவின் மூலம் எங்கள் குழந்தைகளின் படிப்பை நல்ல முறையில் படிக்க வைக்கின்றோம். குடும்பங்களின் வறுமைகளைப் போக்கவும், மற்றவர்களுக்கு உதவிகள் செய்யும் அளவிற்கு வளர்ந்து வருகின்றோம் என்றும் இந்தக் குழு உறுப்பினர்கள் கூறுகின்றார்கள்.

தங்கமுத்து (2004:6-8) தினமணி நாளிதழில் பல்கலைக் கழகச் சிற்றுண்டியை மகளிர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது என்று கூறி பின்வரும் செய்தியையும் கூறுகின்றார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சிற்றுண்டி நிர்வாகத்தை மகளிர் சுயஉதவிக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சிற்றுண்டியை நல்ல முறையில் செயல் படுத்தக்கூடிய ஒரு குழு அமைப்பானது மாத்தூர் தென்னம் பிள்ளை கிராமத்தில் செயல்பட்டு வரும் அன்னை தெரசா மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்று கூறியுள்ளார். மேலும் இந்தப் பணி மிகச் சிறப்பாகச் செயல்பட்டு ஒரு முன்னோடி முயற்சியாக அமைந்துள்ள இச்செயல் தொடர பல் வேறு கல்லூரிகளுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றார். மேலும் சுயஉதவிக்குழு உறுப்பினர்களால் தயாரிக்கப்படும் பொருட்கள் இங்கே விற்கவும் அனுமதி உண்டு என்றும், இதனால் மகளிர் நல்ல முன்னேற்றம் அடைந்து வருவதற்கு இது சிறந்த தொழிலாகவும், மக்களிடம் தன்னார்வத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது என்றும் கூறியுள்ளார்.

கரியாலி (2004) மகளிர் சுயஉதவிக்குழு தகவல் கையேட்டில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார். பெண்கள் மகளிர் சுயஉதவிச் குழுக்கள் மூலம் அதிகாரப்பகிர்வு மிக்கவர்களாகக் காணப்படு கிறார்கள். கிராமப்புறங்களில் மகளிரைப் பாதிக்கக் கூடிய கள்ளச் சாராயம், வரதட்சணைக் கொடுமை, பெண் சிசுக்கொலை போன்ற

சீர்கேடுகளை ஒழிக்கும் அளவிற்கு இன்று பெண்கள் வளர்ந்துள்ள னர். ஒரு பெண்ணால் இன்னொரு பெண்ணுக்கு தீங்கு இழைக்கும் நிலை மாறி, இன்று ஒருவருக்கொருவர் உதவிசெய்யும் அளவிற்கு வளர்ந்து வருகின்றார்கள். ஆணுக்குச் சமமாக பெண்கள் செயல் படவும், ஏற்றத்தாழ்வுகள் இன்றி எல்லா தொழிற்சாலைகளிலும் சமமாக தொழில் செய்து சமமாக வருமானம் ஈட்டி, 21 வயதிற்கு மேல் திருமணம் செய்துகொண்டு ஆணுக்கு நிகராக குடும்பப் பாரத்தைச்சுமந்து, குடும்பத்திலும் கிராமத்திலும் முடிவுகள் எடுப் பதில் சமபங்கு பெற்று, சமஉரிமையுடனும், கௌரவத்தோடு வாழும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மகளிர் சுயஉதவிக்குழு அமைப்பே மகளிர் திட்டத்தின் இலட்சியம் என்று சிறப்பாகக் கூறியுள்ளார்.

கே. பாக்யலெட்சுமி *(2004)* முற்றம் மாத இதழில் பெண் களின் செயல்பாடுகள் பற்றி கூறுகின்றார். மகளிர் குழுவின் நற் பலன்களைக் கருதி மகளிர் பல தொழில்களை நடத்தி வருகின்ற னர். மகளிர் குழு என்றால் அரசு ஒரு நல்ல நம்பிக்கை வைத்து உதவிகள் செய்ய தயங்குவதில்லை. உணவு தானியப் பயிர் வகை களை நடத்த வேண்டும் என்று அரசு இத்திட்டத்தை நிர்ணயித்துள் ளது. பெண்கள் இயல்பாகவே அன்றாட வாழ்வில் உணவுப் பாது காப்பில் ஈடுபட்டிருப்பதையடுத்து அவர்கள் சுயஉதவிக் குழுக்கள் மூலமாக பல திட்ட நடவடிக்கைகளில் பங்காற்றி வருகின்றனர். மகளிர் திட்டங்கள் உருவாக்கப்பட்டு பல இடங்களில் உணவு தானிய வங்கிகள் வெற்றிகரமாக செயல்படுகிறது என்பதை இத்திட்ட ஆய்வு மையம் விளக்கியுள்ளது என்று கூறியுள்ளார்.

தினத்தந்தி நாளிதழ் *(18.10.2004)* புதுக்கோட்டை மாவட் டம் சுயஉதவிக்குழு குறித்த கீழ்க்கண்ட செய்திகளை வெளியிட் டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம் சுயஉதவிக்குழு உறுப்பினர் களுக்கு கணினி பராமரிப்பு குறித்து ஒருநாள் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. கிராமங்களில் தகவல்தொழில் நுட்ப வளர்ச்சியால் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அரசுத் திட்டங்கள், அமைப்புகள் பற்றிய விவரங்கள், வணிக, வர்த்தகப் பரிமாற்றங்கள், பல முக்கியமான அன்றாட வாழ்க்கை யில் தேவைப்படும் தகவல்களை இண்டர்நெட் எனும் இணையத்

தளத்தின் 38 ஊராட்சிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது சுயஉதவிக் குழுக்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த நபர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேசிய தகவல் மையத்தில் கணினிப்பயிற்சி அளிக்கப்பட்டு வரு கின்றது. இதன் மூலம் பெண்கள் கணினி தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொண்டு நல்லமுறையில் செயல்பட்டு இன்று உலகமே போற்றும் அளவிற்கு சிறந்து விளங்குகின்றனர் என்றும் கூறப்பட் டுள்ளது.

இயல் - 3

தஞ்சாவூர் அமைவிடம்

தஞ்சாவூர் மாவட்டம் வடக்கு அட்சரேகை 10.08 மற்றும் 11'12'க்கும் கிழக்கு தீர்க்க ரேகை 78'48' மற்றும் 79' 38' ஆகியவைகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் 3,39,657 ஹெக்டேர் பரப்பளவில் திகழ்கின்றது. தஞ்சாவூர் மாவட்டம் 1. தஞ்சாவூர், 2. கும்பகோணம், 3. பட்டுக்கோட்டை என்னும் மூன்று கோட்டங்களையும், தஞ்சாவூர், திருவையாறு, பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி எனும் எட்டு வட்டங்களையும் கொண்டதாகத் திகழ்கின்றது. தஞ்சாவூர், பூதலூர், திருவையாறு, ஒரத்தநாடு, திருவோணம், பட்டுக்கோட்டை, மதுக்கூர், சேதுபாவாசத்திரம், பேராவூரணி, அம்மாப்பேட்டை, பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் எனும் 14 ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் இம்மாவட்டத்தில் அடங்கியுள்ளது.

தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, கும்பகோணம் எனும் மூன்று நகராட்சிகளும் 22 சிறப்பு ஊராட்சிகளும் இம்மாவட்டத்தில் உள்ளன. தஞ்சாவூர் கோட்டத்தில் 211 ஊராட்சி மன்றங்கள், கும்பகோணம் கோட்டத்தில் 219 ஊராட்சி மன்றங்கள், பட்டுக்கோட்டைகோட்டத்தில் 139 ஊராட்சி மன்றங்கள் எனத் தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தம் 569 ஊராட்சி மன்றங்கள் உள்ளன.

இயற்கை அமைப்பு

தஞ்சாவூர் மாவட்டத்தை காவிரி, கொள்ளிடம், வெண்ணாறு, குடமுருட்டி ஆறு ஆகிய பெரிய ஆறுகளும் அவற்றிலிருந்து பிரியும் கல்லணைக் காவ்வாய், அரசலாறு, திருமலைராஜன் ஆறு போன்ற கிளை நதிகளும், பல்லாயிரக்கணக்கான வாய்க்கால்களும் சிலந்தி வலைப்போல் நீரால் வளப்படுத்துகின்றன. எனவே, இம்மாவட்டத்தின் பெரும்பகுதி காவிரி டெல்டாபகுதியாகும்.

திருவையாறு, தஞ்சாவூர், பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய வட்டங்கள் காவிரி நதியின் பாய்நிலப் பகுதிகளாகவும், தஞ்சாவூர் வட்டத்தின் ஒரு பகுதி ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை ஆகிய வட்டங்களில் பெரும் பகுதிகள் கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதிகளாக விளங்குகின்றன. இம்மாவட்டத்தில் மலைப்பகுதி என்பது இல்லை. பேராவூரணி, பட்டுக்கோட்டை ஆகிய வட்டங்களில் காட்டுநிலப் பகுதிகள் உள்ளன. இவை புதுக்கோட்டை மாவட்டக் காட்டுப்பகுதிகளுடன் இணைந்த பகுதிகளாகவே விளங்குகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தின் மேற்குப் பகுதியான வல்லம், பூதலூர் பகுதிகளில் மிக அதிக அளவில் ஏரிகள் உள்ளன. கள்ளப்பெரம்பூர் ஏரி, அல்லூர் அழிச்சுக்குடி ஏரி, சித்திரக்குடி ஏரி, வெண்டையம்பட்டி ஏரி ஆகிய இம்மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகளாகும். சோழர் காலத்தில் இப்பகுதி ஏரியூர்நாடு என்ற அழைக்கப்பெற்றதாகச் சோழர் காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

ஆண்டு சராசரி மழை அளவு 1015.05 மில்லி மீட்டர் ஆகும். வடகிழக்கு பருவமழைக் காலங்களில் 531.33 மில்லி மீட்டர் (52.32 சதவிகிதம்) அளவும், தென்மேற்குப் பருவமழைக் காலங்களில் 62.64 (30.58 சதவிகிதம்) அளவும் மழை பொழிகிறது.

மாவட்டத்தின் பரப்பளவும் மக்கள் தொகையும்

தஞ்சாவூர் மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 3396.57 சதுர கிலோமீட்டர் ஆகும். இம்மாவட்டம் நஞ்சை அளவிலும், புஞ்சை அளவிலும் தரிசு நிலங்கள், காட்டுப்பகுதிகள் எனப் பல்

வேறு நில அமைப்புகள் உள்ளன. 2001-ஆம் ஆண்டுக் கணக்கெடுப் பின்படி இம்மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 22,05,375 ஆகும். இவற்றில் 10,91,557 ஆண்களும், 11,13,818 பெண்களும் அடங்குவர்.

மாவட்டத்தின் வரலாறு

மராட்டிய அரசர்களின் ஆளுகையின் கீழிருந்த நாட்டினை கி.பி. 1799 இல் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். கி.பி. 1850 முதல் தஞ்சை மாவட்டம் என்ற பெயரில் அரசு நிர்வாகம் தோற்றம் பெற்றது. அப்போது தஞ்சை நாடு ஒன்பது தாலுகாவாப் பிரிக்கப் பெற்றது. அவை 1.திருவாதி, 2.கும்பகோணம், 3.மாயவரம், 4. பாபநாசம், 5.திருவாரூர், 6. நன்னிலம், 7. கீவளூர், 8. மன்னார் குடி, 9. பட்டுக்கோட்டை என்பனவாகும். ஆங்கிலேய ஆட்சிக்குப் பின்னர் நிர்வாக மேம்பாட்டிற்காக கீழ்த்தஞ்சை, மேலத் தஞ்சை என இரு பகுப்புகளாகக் கொண்டு நிர்வாகம் செயல்பட்டது. 1991-ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பின்னர் 1996-இல் திருவாரூர் மாவட்டம் உதயமானது.

தனிச்சிறப்பு

தமிழகத்தின் நெற்களஞ்சியம் என அழைக்கப்பெறும் தஞ்சாவூர் மாவட்டம் கரிகாற்சோழன் காலத்திலிருந்து கல்லணை உதவியால் சீரான நீர்ப்பாசனம் பெற்று, வளம் கொழித்து வருகின் றது. நீர்வளமும், நிலவளமும் சிறப்புற்றதால் சோழ நாட்டில் கவின் கலைகள் பலவும் வளர்ந்தன. திருக்கோவில்களை மைய மாகக் கொண்டு கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசை, நாட்டியம் எனப் பல கலைகளும் வளர்ந்தன. தமிழகத்தின் கலைவளர்ச்சிக்குத் தாயகமாக விளங்குவது தஞ்சாவூர் மாவட்டம் தான். தஞ்சை வீணை, தஞ்சாவூர் ஓவியம் என்பது உலக அளவில் தஞ்சை மாவட்டத்தின் புகழைப் பறைசாற்றுபவை ஆகும். தஞ்சை நால்வர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பரதநாட்டியப் பாணி, பந்தலூர் பாணி போன்றவை ஆடற்கலைக்கும் இம்மாவட்டம் கொடுத்த பெருங்கொடையாகும்.

வேளாண்மை

தஞ்சை மாவட்ட மக்கள் 75 சதவிகிதம் விவசாயம், வேளாண் தொழில்களைச் சார்ந்தே இருக்கின்றனர். நெல் பயிரிடுவது முதன்மையாக உள்ளது. இதற்கடுத்து கரும்பு,வாழை, பயறு வகைகளைப் பயிரிடுகின்றனர். தொழில்களைப் பொறுத்தவரை 8 ஆயிரத்து 723 சிறு தொழில்களும், 9 நடுத்தர மற்றும் பெரிய அளவு தொழில்களும், 5 ஆயிரத்து 187 குடிசை தொழில்களும் இம்மாவட்டத்தில் உள்ளன.

மகளிர் குழு

'மங்கையராய் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்பதற்கேற்ப தமிழக அரசு பெண்களின் சமூகநலனைக் காப்பதிலும், சமூகத்தில் ஆண்களுக்கு நிகராக சம அந்தஸ்து வழங்கும் வகையில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தப் பட்டு வருகிறது. பெண் சுயசார்புடன் வாழவும், பொருளாதார மேம்பாடு அடையவும் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் இம்மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் அதிக அளவில் தஞ்சை மாவட்டத்திற்கு நலத்திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு எண்ணற்ற திட்டங்கள் தீட்டப்பெற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகளிர் சுயஉதவிக்குழுத் திட்டம் மிகவும் பின் தங்கிய நிலையில்,வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வரும் லட்சக்கணக்கான பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாய் அமைந்துள்ளது. வறுமை, கடன் தொல்லை, அறியாமை ஆகிய பிரச்சனைகளில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த பெண்களுக்கு இச்சுயஉதவிக் குழுக்கள் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டி யாக அமைந்துள்ளது.

இயல் - 4

பகுத்தாய்வும் விளக்கமும்

1. மகளிர் சுயஉதவிக்குழு அமைப்பும் செயல்பாடுகளும்

1989-ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு பன்னாட்டு வளர்ச்சிநிதி (ஐஃபாட்) உதவியுடன் 8 மாவட்டங்களில் 75 ஒன்றியங்களில் செயலாக்கப்பட்ட திட்டத்தின் மூலம் சமூக பொருளாதார நிலையில் மகளிர் மேம்பாடு அடைந்தனர். ஆண்களுடன் ஒப்பிடும்போது பெண்கள் சமூக பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ளனர். பெண்கள் நிலை உயர்ந்தால்தான் குடும்பம், கிராமம், மாநிலம், நாடு ஆகியவை முன்னேறும். இதன் அடிப்படையில்தான் மகளிர் மேம்பாட்டுத்திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டம் படிப்படியாக அனைத்து மாவட்டங்களுக்கும் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி மற்றும் அனைத்து பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புற ஏழைப் பெண்களை, சுயஉதவிக் குழுக்கள் மூலம் வலுப்படுத்தி சமூக பொருளாதார மேம்பாடும், சுயசார்பு தன்மையும் அடையச் செய்வதே மகளிர் மேம்பாட்டுத்திட்டத்தின் இலக்கு ஆகும்.

நோக்கங்கள்

பெண்களிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்த்தல், அவசரக் கடன் தேவைகளை தாமாகவே பூர்த்திசெய்ய கற்றுக்கொள்ளுதல், கடன்களை உரிய முறையில் பயன்படுத்தி திரும்பச் செலக்கக்

கற்றுக் கொள்ளுதல், வங்கிக் கடன் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளைப் பெற வழிவகை செய்தல், உற்பத்தி செய்யும் பொருட்களை நேரடி யாக விற்பனை செய்யும் வழிமுறைகளைத் தெரிந்து கொள்ளுதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

மகளிர் மத்தியில் 'நமக்கு நாமே' என்ற உணர்வை ஏற்படுத்துதல், சாதி சமய வேறுபாடுகளை நீக்கி ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதல், குடும்பத்தில் முடிவெடுப்பதில் பங்கேற்கச் செய்தல், சுகாதாரம், குடும்ப நலத்தில் அக்கறை ஏற்படுத்துதல், மகளிருக்கு தன்னம்பிக்கையூட்டும் அமைப்புகளாக சுயஉதவிக் குழுக்களை ஆக்குதல், கள்ளச்சாராயம், பெண் சிசுவதை, இளம்வயது பெண் திருமணம், குழந்தை தொழில்முறை, வரதட்சணை போன்ற சீர் கேடுகளை ஒழிப்பதில் அக்கறை காண்பித்தல், பெண் குழந்தை களை பள்ளி இறுதி வகுப்பு வரையிலாவது படிக்கச்செய்தல், பெண்களுக்கு எதிரான கொடுமைகளைத் தடுக்கவும் ஒழிக்கவும் ஊக்குவித்தல், சனநாயக, உள்ளாட்சி அமைப்புகளில் குடிமக்க ளாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக மகளிரை பங்கேற் கச் செய்தல் ஆகியவை மகளிரை சமூக மேம்பாடு அடையச் செய்யும் வழிகளாகும்.

பெண்களுக்கு நிதிநிர்வாகத்தை கற்றுக்கொடுத்தல், நடைமுறை அறிவு பெறச் செய்தல், தொழில் திறமையினை வளர்த்தல் தன்னம்பிக்கையை உருவாக்குதல், ஒருங்கிணைந்து செயல்படும் திறமையை ஊக்குவித்தல், தலைமைப் பண்பு, பேச்சாற்றல் போன்ற திறமைகளை வளர்த்தல் ஆகியவை மகளிரின் திறமை களை வளர்த்தல் ஆகும்.

சுயஉதவிக்குழு - விளக்கம்

ஒரே கிராமத்தில் வசிக்கும் ஒருமித்த கருத்துடைய 12 முதல் 20 ஏழைப் பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்யும் மனப்பான்மையுடன் உருவாக்கப் படுவதே சுயஉதவிக்குழு.

குழு உருவாக்கும் முறை

ஏழைப் பெண்கள் அதிகமாக உள்ள குடியிருப்புகளைத் தேர்வுசெய்து அவர்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்க வேண்டும். அப்பெண்களிடம் சுயஉதவிக் குழுக்கள் பற்றி விளக்கிக் கூற வேண்டும். சேவை மனப்பான்மை உள்ள ஓரளவு படிக்கத் தெரிந்த, நம்பிக்கைக்குப் பாத்திரமான ஏழை மகளிரை ஊக்குனராக தெரிவு செய்யப்படவேண்டும். ஒரே உறுப்பினரை பல்வேறு குழுக்களில் இடம்பெறச் செய்தல் கூடாது. அருகாமையிலுள்ள கிராமங்களில் சிறப்பாக செயல்படும் குழுக்களின் அறிவுரையோடு புதிய குழுக்களை அமைக்கலாம்.

குழு விவாத முறை

குழுவை சிறப்பான முறையில் வழிநடத்தத் தகுதியான பெண்களை ஊக்குனராகவும், பிரதிநிதிகளாகவும் தேர்வு செய்வது அவசியம். கணக்குப் பதிவேடுகளைப் பராமரிக்கக்கூடிய கல்வியறிவுள்ள ஒருவரை ஊக்குனராகத் தேர்வு செய்தல் அவசியம். குழுவின் இயக்கத்திற்கு குழு கலந்துரையாடல் விவாதம் மிகவும் முக்கியமானதாகும். குழு விவாதம் பயனுள்ளதாக அமைய, விவாதப் பொருளிலும், வழிமுறையிலும் கவனம் செலுத்த வேண்டும். குழு என்பது ஜனநாயக அமைப்பு ஆகும். அனைத்து உறுப்பினர்களுக்கும் சம உரிமை உண்டு.

குழு விவாதத்தில் கவனத்தில் கொள்ள வேண்டியவை

குழு விவாதத்தை ஊக்குனரும், பிரதிநிதிகளும் வழிநடத்த வேண்டும். மகளிர் திட்ட உறுதிமொழி எடுத்த பிறகு கூட்ட ஆரம்பத்தில் 'கூட்டப்பொருள்' விவரம் தயாரிக்க வேண்டும். வழிநடத்துனர், புதிய கருத்துக்களையோ, செய்திகளையோ சொல்லும் போது உறுப்பினர்களுக்கு எளிதில் புரியும் வகையில் விளக்கமளிக்க வேண்டும். விவாதத்தில் அனைவரையும் பங்கேற்கச் செய்ய வேண்டும். ஒதுங்கியிருக்கும் உறுப்பினர்களை உற்சாகப்படுத்தி கருத்துக்களை வெளிப்படுத்த செய்தல் அவசியம். உறுப்பினர்கள் தவறாமல் கூட்டங்களில் கலந்துகொள்ள மற்ற உறுப்பினர்கள் ஊக்குவிக்க வேண்டும். ஒருவர் பேசும்போது மற்றவர் தறுக்கே பேசி இடையூறு விளைவிக்காமல் இருப்பது அவசியம்.

அதிகமான உறுப்பினர்கள் கூறும் ஒரேவிதமான கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் விளக்கிக் கூறவேண்டும். ஒவ்வொரு பொருளாக விவாதம் செய்து, மாற்று கருத்துக்களை கேட்டு, சாதக பாதகங்களை மதிப்பிட்டு முடிவெடுக்க வேண்டும். எடுத்த முடிவை யார் எந்த காலகட்டத் திற்குள் செயலாக்கம் செய்ய வேண்டும் என்ற விபரத்துடன் தீர்மான புத்தகத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

நிர்வாக விதிமுறை

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊக்குனரும், இரண்டு பிரதிநிதி களும் குழுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மற்ற அமைப்பு களில் பொறுப்பு வகிக்கும் பெண்களைப் பொறுப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கக்கூடாது. குழுவிற்குத் தலைவி என்ற பதவி கிடை யாது. அனைத்து உறுப்பினர்களும் சமமானவர்கள். ஊக்குனர் பணிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். குழு விரும்பினால் ஊக்குநர் செய்யும் பணிக்காக குழு பொதுநிதியிலிருந்து ஊக்கத் தொகை அளிக்கலாம். இதுபோன்ற செலவுகளை மேற்கொள்ள 3 ஆண்டுகளுக்கு அரசு உதவி அளிக்கலாம். ஊக்குநருக்கு எவ் வளவு தொகை கொடுக்கலாம் என்பதை குழு பேசி முடிவு எடுக்க லாம். காலப்போக்கில் குழுவே அதன் சந்தா நிதியிலிருந்து அனைத்துச் செலவுகளையும் ஏற்கவேண்டும். ஒவ்வொரு ஆண் டும் சுழற்சி முறையில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண் டும்.

ஊக்குநர் குழு கணக்குகளை முறையாகப் பராமரிக்க வேண்டும். குழுவில் அனைவரும் எழுதப்படிக்கத் தெரியாதவர் கள் என்றால், குழு உறுப்பினர்களின் கல்வி பெற்ற மகளோ மரு மகளோ கணக்குகளைப் பராமரிக்கலாம். இதுவும் சாத்தியமல்ல என்றால் மட்டுமே அதே கிராமத்தைச் சார்ந்த படித்த, நம்பகமான பெண்ணை கணக்குகள் மட்டும் எழுதுவதற்கு குழு விவாதித்து நிய மிக்கலாம். அவருக்குக் குழு மதிப்பூதியம் வழங்கலாம். எக்கார ணத்தைக் கொண்டும் ஆண்களை கணக்குகள் எழுதுவதற்குப் பணியமர்த்தக்கூடாது. ஊக்குநர் பணத்தை நிர்வகிக்கக் கூடாது. குழுவின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கை இரு பிரதிநிதிகள் கூட்டாக கையெழுத்திட்டு இயக்க வேண்டும். குழுவின் வங்கிக் கணக்கு குழுவின் பெயரில் இருக்க வேண்டும். ஊக்குநர், பிரதி

நிதிகள் பெயரில் இருக்கக்கூடாது. காலப்போக்கில் குழுவே சுய மாக கணக்குகளைப் பராமரிக்கவும், சுயமாகக் கூட்டங்களை நடத்தவும், சுயமாக குழுவை நிர்வகிக்கும் திறமையை வளர்ப்பது தான் இந்த திட்டத்தின் நோக்கம் ஆகும். குழுவில் அனைத்து உறுப் பினர்களுக்கும் பொறுப்பு உணர்ச்சி வருவதற்கும் பங்கேற்பை அதிகரிக்கவும் துணைக் குழுக்களை உருவாக்க வேண்டும். நிதிக் குழு, கல்விக்குழு, சுகாதாரக் குழு, கிராம வளர்ச்சிக் குழு, நிர் வாகக் குழு போன்று *4-5* உறுப்பினர்கள் கொண்டு துணைக் குழுக் களை உருவாக்கி செயல்பட வைக்கலாம்.

உறுப்பினர்களின் கடமை

அனைத்து உறுப்பினர்களும் குழு விதிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். குழுக் கூட்டங்கள், பயிற்சிகளில் குறித்த நேரத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். பயிற்சி யில் ஆர்வமுடன் கலந்துகொள்ள வேண்டும். அனைத்து உறுப் பினர்களும் சுழற்சிமுறையில் வங்கிக்குச் செல்லவேண்டும். இதன் மூலம் அனைத்து உறுப்பினர்களும் தன்னம்பிக்கை உடையவர்கள் ஆகின்றனர். சேமிப்பு,சந்தா,கடன் -அசல், வட்டி ஆகியவற்றை தவறாது செலுத்த வேண்டும். ஊக்குநர், பிரதிநிதிகளுக்கு ஒத்து ழைப்புத் தருதல் வேண்டும். விவாதங்களில் கருத்துக்களை தெளி வாகக் கூறி நல்லமுறையில் பங்கேற்றல் வேண்டும். மற்ற உறுப் பினர்களின் உணர்வுகளை மதித்து நடக்க வேண்டும். சாதி, மத வேறுபாடுகளைக் களைந்து அனைத்து உறுப்பினர்களும் சகோ தரிகளைப் போல் நடத்தவேண்டும்.மற்ற மகளிருக்கும் குழந்தை களுக்கும் அநீதிகள், தீங்குகள் நடைபெறுவதைத் தடுக்க நட வடிக்கை எடுப்பது மட்டுமல்லாமல், இத்தகைய கொடுமைக்கு ஆளாகும் பெண்களுக்கு ஆறுதல், தேவையான உதவி செய்யவும் முன்வருதல் வேண்டும். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஊக்குனரையும், வருடத்திற்கு ஒரு முறை பிரதிநிதிகளையும் மாற்றவேண்டும்.

சேமிப்பு

ஒவ்வொரு வாரக் கூட்டங்களிலும் சேமிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்த வேண்டும். ஆரம்பத்தில் குழுக்கள் மாதம் ஒரு முறை சேமிப்பு செய்தலும், காலப்போக்கில் வாரச் சேமிப்பு

செய்வதற்கு ஊக்கப்படுத்தப்படவேண்டும். ஆண்டிற்கு ஒருமுறை சேமிப்பு அதிகப்படுத்த முடியுமா என்று விவாதிக்கலாம். இப்படி சேமிப்பை உயர்த்தும்போது குழுவில் மிக ஏழையான உறுப் பினரின் கருத்தைக் கேட்டு முடிவுசெய்ய வேண்டும். குறிப்பிட்ட தொகைக்குப் பதிலாக விருப்பப்பட்ட தொகையை சேமிக்கும் பழக்கத்தைப் பின்பற்றுவதை விவாதித்து ஏற்கலாம். விருப்ப சேமிப்பு முறையை ஏற்று தீர்மானம் இயற்றும்பொழுது அதிக தொகை சேமிக்கும் உறுப்பினருக்கு எந்தச் சலுகையும் அளிக்கப் பட மாட்டாது என்றும் தீர்மானத்தில் கூறவேண்டும். குழுக் கூட்டத்தில் சேமிப்பு செலுத்தத் தவறிய உறுப்பினர்களிடமிருந்து அபராதத் தொகை வசூல் செய்யலாம். நான்காம் ஆண்டு முதல் ஆண்டுக்கு ஒருமுறை, குழுவின் நிதியில் சேர்ந்திருக்கும் வட்டி யின் ஒரு பகுதியை குழு விரும்பினால், உறுப்பினர்களின் சேமிப்புத் தொகையின் விகிதத்தில் பிரித்து ஊக்கத்தொகையாக வழங்கலாம். குழு கணக்கு ஆண்டு தணிக்கை செய்யும்போதே இதற்கான விழுக்காட்டை முடிவு செய்யலாம். குழு சேமிப்பினை ஒருபோதும் பிரித்து வழங்கக்கூடாது.

குழுவை விட்டு தவிர்க்கமுடியாத காரணத்தினால் விலகிச் செல்லும் உறுப்பினர்களுக்கு பொதுவாக அவர்களுடைய சேமிப்பு மட்டும் திருப்பித் தரப்படும். குழு விரும்பினால் சேமிப்புக்கு வட்டி அளிக்கலாம். ரொக்கப் புத்தகம், சேமிப்பு பேரேடு, தனிநபர் சேமிப்பு, கணக்குப் புத்தகம் ஆகியவற்றில் சேமிப்பு பற்றிய விவரங்களை ஊக்குநர் உடனுக்குடன் பதிவுசெய்ய வேண்டும். உறுப்பினர்கள் படித்தவர்களிடமோ தங்கள் தனிநபர் சேமிப்புக் கணக்குப் புத்தகத்தைக் கொடுத்து, சேமிப்புத் தகவல்களை சரியாக எழுதப்பட்டு உள்ளனவா என்பதை உறுதி செய்துகொள்ள வேண் டும்.

கூட்டமுடிவில் உள்ள குழுப் பணத்தை அதே நாள் அல் லது அடுத்த நாள் வங்கியில் குழு சேமிப்புக் கணக்கில் செலுத்த வேண்டும். பிறகு தேவைப்படும் உறுப்பினருக்கு சங்க கடன் தொகையை வங்கியிலிருந்து எடுக்கலாம். ஒவ்வொரு முறையும் சுழற்சி முறையில் ஒரு உறுப்பினர் வங்கிக்குச் சென்று பணம் செலுத்தும் முறையையும் ஊக்கப்படுத்தலாம். இது மிகப் பயனுள்ள பயிற்சியாகும். குழுப் பெயரில் உள்ள வங்கி சேமிப்புக்

கணக்கைப் பிரதிநிதிகள் இருவரும் கூட்டாகச் சேர்ந்து இயக்க லாம். பணம் எடுப்பதற்கு இவர்கள்தான் செல்ல வேண்டும். உச்ச அளவு எவ்வளவு வைத்துக் கொள்ளலாம், யார் வசம் வைத்துக் கொள்ளலாம் என்பதைக் குழு தீர்மானிக்கலாம். கையிருப்புத் தொகையை சுழற்சிமுறையில் உறுப்பினர்கள் வைத்துக் கொள்ள லாம்.

குழு உறுப்பினர்கள் சிலரின் குடும்பத்தில் அவ்வப்போது பல்வேறு காரணங்களினால் கணிசமாக ரொக்கம் கையிருப்பாக இருக்க வாய்ப்புள்ளது. அவர்களிடமிருந்து தொகையைப் பெற்று குழு உறுப்பினர்களுக்கு வட்டிக்குக் கொடுப்பதன் மூலம் இரு வரும் பயனடைய வாய்ப்புள்ளது. எக்காரணம் கொண்டும் குழு உறுப்பினர்கள் அல்லாதவர்களிடம் இவ்வாறு தொகையைப் பெறுதல் கூடாது.

திட்டப் பணியாளர்கள், தொண்டு நிறுவனத்தின் களப் பணியாளர்கள் எக்காரணத்தைக் கொண்டும் குழுப் பணத்தை கையாளவோ எடுத்துச் செல்லவோ கூடாது. அதேபோன்று குழுக் கணக்குகளையும் களப்பணியாளர்கள் கைவசம் வைத்திருப் பதையோ பராமரிப்பதையோ அறவே தவிர்க்க வேண்டும். ஆடம் பரச் செலவுகளுக்கும், நன்கொடை, இலஞ்சம் கொடுக்கவும் சங்கப் பணத்தைப் பயன்படுத்துதல் கூடாது. சேமிப்பு வசூல் தொகையை வங்கியில் செலுத்தாமல் குழுக் கூட்டத்தில் நேரடி யாக சங்கக் கடன்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

கடன் விதிமுறை

குழு ஆரம்பித்த முதல் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கழித்து சங்கச் சேமிப்பிலிருந்து சிறுகடனாக சங்கச் கடன் வழங்க லாம். சங்கச் கடன் அளவு, வட்டி, திருப்பிச் செலுத்தும் தவனை முறை ஆகியவற்றை ஒவ்வொரு குழுவும் தங்கள் நிதிவசதி, வளர்ச்சி, சூழ்நிலைக்கு ஏற்ப நிர்ணயித்துக் கொள்ளலாம். கடன் திரும்பச் செலுத்த நிர்ணயிக்கப்படும் தவணைக்காலம் (மாதங் கள்) நியாயமானதாக இருக்க வேண்டும். இது கடன் தொகைக்கு ஏற்ப, கடன் பெறும் உறுப்பினரின் திறனையும், கருத்தில் கொண்டு முடிவு செய்யப்படவேண்டும். ஆரம்ப காலங்களில்

கொடுக்கப்படும் சங்கக் கடன்கள் சிறு கடன்களாகவும் (ரூ. 200 - 500 வரை) குறைந்த காலத்தில் திருப்பிச் செலுத்தப்படும் கடனாக வும் (3மாதம் முதல் 6 மாதம் வரை) வழங்கலாம். காலப்போக்கில் குழுவே கடன் தொகையின் அளவை உயர்த்த தீர்மானிக்கலாம்.

உறுப்பினர்களின் அவசரச் செலவு, மருத்துவச் செலவு, கல்விச் செலவுகள், தொழில் துவங்க மூலதனம் ஆகிய தேவை களுக்கு சங்கக் கடன்கள் வழங்கலாம். பல உறுப்பினர்கள் சங்கக் கடன்கள் கேட்கும்போது மருத்துவம், கல்வி, தொழில், மூல தனம், அவரசத்தேவை ஆகியவற்றில் எதற்கு முன்னுரிமை அளிப் பது என்பதை விவாதித்து கடன் அனுமதி அளிக்கலாம். சங்கக் கடனுக்கான வட்டி விகிதத்தையும் குழுவே தீர்மானிக்கலாம். பொதுவாக முதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் நிறை வடைந்த பின், தேவைப்பட்டால், வட்டிவிகிதத்தைக் குறைக்க குழு முடிவு செய்யலாம். இத்தகைய குறைப்பு, தொழில் செய்ய பெருந்தொகையை சங்கக் கடனாகப்பெற உறுப்பினர்களுக்கு உதவியாக இருக்கும்.

சங்கக் கடன் அனுமதி விவரமாக தீர்மானப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். சில அவசரத் தேவைகளுக்கு சங்கக் கடன் வழங்க சிறப்புக் கூட்டங்களையும் கூட்டலாம். சங்கக் கடன் வழங்கல், தவணைத் தொகை வசூலித்தல் ஆகியவை கூட்டத்தில் மட்டும் தான் நடைபெற வேண்டும். சங்கக் கடன்பெற்ற உறுப் பினர்கள் ஒவ்வொரு மாதமும் அசல் தவணைத் தொகையையும், வட்டியையும் குழுக் கூட்டத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். கூட்டத்தில் ஒவ்வொரு உறுப்பினரின் அன்றைய சங்கக் கடன் நிலுவையை வாசித்து அனைவரும் தெரிந்துகொள்ள வழிவகை செய்யவேண்டும். ஓர் உறுப்பினர் சங்கக் கடன் கட்டத் தவறினாலும் அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்து, சங்கக் கடன் வசூல்செய்ய நடவடிக்கை எடுக்க ஒத்துழைப்பு தர வேண்டும்.

செய்யக்கூடாதவை

குழு நிதியை பயன்படுத்தாமல் வங்கியில் சேமிப் பாகவோ வைப்பு நிதியாகவோ போட்டு வைப்பது முற்றிலும் தவிர்க்க வேண்டியவை ஆகும். சுயஉதவிக்குழு பொறுப்பாளர்கள்

மற்றும் உறுப்பினர்கள் சங்கக் கடன் கொடுக்கும்போது தங்கள் உறவினர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ முன்னுரிமை காட்டக் கூடாது. உண்மையாகவே தேவைப்படும் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இதனைக் களப்பணியாளர்கள் கண்காணிக்க வேண்டும். ஓர் உறுப்பினர் ஒரு சங்க கடனை முழுமையாகத் திருப்பிக் கட்டும் வரையில் அடுத்த கடன்பெற அனுமதி கொடுக்கக்கூடாது. சங்க உறுப்பினராக இல்லாத நபர்களுக்கு கடன் அல்லது நன்கொடை கண்டிப்பாக வழங்கக்கூடாது.

பொது நிதி

சங்கக் கடன் மூலம் கிடைக்கும் வட்டிதான், மகளிர் குழுவிற்கு முக்கிய வருமானம் ஆகும். அதைத் தவிர சுயசார்பு நிலையை அடைய, பிற வழிகளிலும் சங்க வருவாயை ஈட்டக் கூடிய தொழில்கள் செய்தால் சேமிப்புத் தொகையை அதிகரிக்கலாம். காலப்போக்கில் ஒவ்வொரு குழுவும் பல்வேறு செலவுகளை அதன் நிதியிலிருந்தே கீழே குறிப்பிட்டுள்ள முறையில் செய்துகொள்ள வேண்டும்.

மாதச் சந்தா

வங்கிக்குச் செல்லும் போக்குவரத்துச் செலவு போன்ற சிறு நிர்வாக செலவுகளை ஈடுகட்ட ஒவ்வொரு உறுப்பினரிடமும் குறைந்த அளவு மாத சந்தாவாக ரூ. 2/- வசூல் செய்யலாம். இதை குழுதான் நிர்ணயம் செய்ய வேண்டும். காலப்போக்கில் குழுவின் செலவுகளும் அதிகரிக்கும் என்பதால் மாதச் சந்தாவை ஆண்டுக்கு ஒரு முறை அதிகரிக்க முடிவுசெய்யலாம்.

சேவைக் கட்டணம்

குழுச் செலவுகளைச் சமாளிக்கவும் குழு நிதியைப் பெருக்கவும் சுயஉதவிக் குழு வாயிலாக செல்லும் வங்கி மற்றும் பிற நிறுவன கடன்களுக்கு வங்கி வட்டியைவிட 2% முதல் 12% வரை அதிக வட்டி கணக்கிட்டு கடன்பெறும் உறுப்பினர்களிடமிருந்து வசூல் செய்யலாம்.

திட்ட உதவி

திட்டத்திலிருந்து குழு பராமரிப்புக்கென மூன்றாண்டு காலத்திற்கு நிதியுதவி அளிக்கப்படும். ஒன்றிய அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவும், குழு கணக்கு ஆண்டு தணிக்கை செய்யவும், ஊக்குனருக்கு மதிப்பூதியம் வழங்குவதற்கும் மற்ற செலவுகளுக்கும் பயன்படுத்த வேண்டும். 3 வருடங்களுக்குப் பிறகு,எவ்வித உதவியும் எதிர்பார்க்காமல் அனைத்துச் செலவுகளையும் செய்து கொள்ளவதற்கு ஆரம்பத்திலிருந்தே தங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும். முன்பு கூறியது போல் சந்தா தொகையை உயர்த்த முடிவு செய்யலாம்.

பொதுச் செலவு

குழுச் செயல்பாடு சம்பந்தப்பட்ட பொதுச் செலவுகளுக்கான வரம்புகளை குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கலாம். செலவினப் பட்டியல்கள் தணிக்கைக்காக பராமரிக்கப்பட வேண்டும். அனைத்துச் செலவுகளும் உரிய பதிவேடுகளில் உடனுக்குடன் பதிவு செய்யப்பட வேண்டும்.

பராமரிக்க வேண்டிய பதிவேடு

ஒவ்வொரு குழுவும் வருகைப்பதிவேடு, குழு தீர்மானப் புத்தகம், சேமிப்புப் பதிவேடு, கடன்பேரேடு, ரொக்கப் பதிவேடு, பொதுப் பதிவேடு, தனிநபர் சேமிப்புக் கணக்குப் புத்தகம், குழு கடிதக் கோப்பு ஆகியவற்றைப் பராமரிக்க வேண்டும். ஊக்குநர் மற்றும் பிரதிநிகளுக்கு பதிவேடுகள் பராமரிக்க பயிற்சி தரப்படும். குழுப் பதிவேடுகளை ஊக்குனர் பராமரிக்க வேண்டும். இரட்டைப் பதிவுமுறையான கணக்குப் பதிவேடுகள் சரியாக எழுதப் படுவதற்கு தொண்டு நிறுவன களப்பணியாளர்கள், ஊக்குனர் பிரதிநிகளுக்கு பயிற்சி அளித்து அவ்வப்போது கண்காணிக்க வேண்டும். களப்பணியாளர்களுக்கு இது தொடர்பான பயிற்சி களுக்கு திட்ட அலுவலகம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கவனத்தில் கொள்ள வேண்டியவை

திட்ட/களப் பணியாளர்கள் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் போது வங்கிக் கணக்குப் புத்தகத்தை பதிவேடுகளுடன்

ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். குழுவின் சேமிப்பு பயன்படுத்தப் படாமல் தேக்கநிலை அடைந்துள்ளதா என்பதையும் சரிபார்க்க வேண்டும். வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட பணத்திற்கு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதா, பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளதா, குழு உறுப்பினர்களுக்குத் தெரியுமா என்பதைக் கவனிக்க வேண்டும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை கணக்குகளை முடித்து, இருப்பு சரிபார்ப்பது களப்பணியாளரின் கடமையாகும். இதைக் குழுக் கூட்டத்தின்போது செய்வது அவசியம். இதைக் குழுவே செய்ய கற்றுக் கொடுக்கலாம். குழுக் கூட்ட தேதியையும் வங்கிக் கணக் குப் புத்தகத்தில் குழு சேமிப்புப் பணம் செலுத்திய தேதியையும் சரிபார்க்கலாம். வசூல் தொகை உடனுக்குடன் செலுத்தப் பட்டுள் ளதா? தாமதம் உள்ளதா? காரணம் என்ன? என்பதைப் பார்க்க லாம். கணக்குகளை பென்சிலால் எழுதுவதைத் தவிர்க்க வேண் டும். கணக்குகளில் குறைபாடுகள் இருந்தால் குழுக்கூட்டத்தில் அதைத் திருத்திக் கொள்ளலாம். கணக்குப் பதிவேடுகள் ஊக்குனர் அல்லது குழுவை சார்ந்தவரால் எழுதப்படுவது அவசியம். குழுவே கணக்குகளைப் பராமரிப்பதன் மூலம் குழுவின் தன்னம் பிக்கை வளரும். அனைத்துப் பதிவேடுகளும் குழுவிடம்தான் இருக்க வேண்டும். குழுவிற்கு அனுப்பப்படும் கடிதங்கள், காப்பீடு, பத்திரம், கடன் அனுமதி ஆணைகள், குழு தரம்பிரித்தல் அறிக்கை, ஆண்டு கணக்கு தணிக்கை அறிக்கை ஆகியவற்றை கோப்பில் பத்திரமாக வைத்திருக்க வேண்டும்.

பயிற்சியின் வகை

மகளிர் திட்டம் மகளிருக்கான மனிதவள மேம்பாட்டுத் திட்டம் ஆகும். எனவே, மகளிர் திட்டத்தில் பயிற்சிகள் அளித்தல் முக்கிய இடம் பெறுகின்றன. உறுப்பினர்கள், பிரதிநிதிகள், ஊக்கு னர்கள் அனைவருக்கும் குறிப்பிட்ட பயிற்சிகள் தொண்டு நிறுவன பயிற்சியாளரால் நடத்தப்பட வேண்டும்.

ஊக்குநர்/பிரதிநிதிகளுக்கு 30 நாட்களுக்கு ஒருமுறை இரு நாட்கள் பயிற்சி தரப்படும். தாம் பெற்ற பயிற்சியில் கற்றவற்றை குழுக் கூட்டத்தில் பகிர்ந்து கொண்டு உறுப்பினர்களின் ஆற்றலை அதிகப்படுத்த ஆவனசெய்ய வேண்டும். வட்டார அளவிலான கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் ஊக்குநர் மற்றும் பிரதிநிதி

வ. எண்.	பயிற்சியின் வகை	பகுதிகள்	பயிற்சி நாட்கள்
1.	ஊக்குனர்கள், பிரதிநிதிகள் பயிற்சி	3	6 நாட்கள்
2.	உறுப்பினர்கள் பயிற்சி	4	4 நாட்கள்
3.	கூட்டமைப்புப் பிரதிநிதிகள் பயிற்சி	4	4 நாட்கள்
4.	தொழில் முனைவோர் பயிற்சி	7	7 நாட்கள்

கள் கலந்துகொண்டு தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு 45 நாட்களுக்கு ஒரு முறை ஒரு நாள் என்ற வீதத்தில் ஆக மொத்தம் 4 நாட்கள் பயிற்சி வழங்கப்படும். பயிற்சியில் சுயஉதவிக்குழு எப்படி உருவாக்க வேண்டும். சுயஉதவிக் குழுக் கூட்டம் எப்படி நடத்தப்பட வேண்டும், சங்கக் கடன் வழங்குதல் கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல், குழு செயல்பாடுகளில் செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை, எழுத்தறிவு, சமூகப் பணிகளில் ஈடுபாடு போன்ற பொருள்கள் விளக்கப்படுவதன் மூலம் குழுக்கள் சிறந்த முறையில் இயங்கத்துவங்குகின்றன.

சிறப்பு அம்சம்

அனைத்து உறுப்பினர்களும் அனைத்துப் பயிற்சிகளிலும் தவறாது கலந்து கொள்ள வேண்டும். குழு உறுப்பினர்களுக்கு மேற்கண்ட பயிற்சி எங்கு நடந்தாலும் பயணப்படி, மகளிர் திட்ட அலுவலகம், தொண்டு நிறுவனம் மூலம் வழங்கும். பயிற்சி நடைபெறும்பொழுது காலை 10 மணி முதல் 5 மணி வரை பயிற்சி வகுப்பில் முழு கவனத்துடன் குழு உறுப்பினர்கள் பங்கேற்க வேண்டும். பயிற்சிக்குத் தாமதமாக வருவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். தாமதமாக வரும் உறுப்பினர்களுக்கு குழு அபராதம் விதிக்கலாம். பயிற்சி நடத்தப்படும் இடம், தேதி ஆகியவை குழு உறுப்பினர்களின் வசதிக்கேற்ப முடிவு செய்வது அவசியம். நூறு விழுக்காட்டு வருகை என்பது குழு வளர்ச்சிக்கு இன்றியமையாதது. பயிற்சி

முடிந்த பிறகு அடுத்து வரும் குழுக் கூட்டத்தில் கற்றவை, குழுவில் விவாதிக்கப்பட்டு, தெளிவாகத் தீர்மானங்கள் மூலம் பதிவு செய்யப்பட வேண்டும். இதனைக் களப்பணியாளர்கள், திட்ட அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

தொண்டு நிறுவனப் பணியாளர் கவனிக்க வேண்டியவை

பயிற்சி அளிக்கப்படும்போது கீழ்க்கண்டவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. பயிற்சி நடத்தும் முன் பயிற்றுனர்கள் தம்மை நன்கு தயார் செய்து கொள்ள வேண்டும். கடந்த பயிற்சி வகுப்புக்களில் கண்ட குறைபாடுகளை நீக்க முயற்சிக்க வேண்டும்.

2. பயிற்சி என்பது ஆர்வத்தை ஊட்டும் பங்கேற்பாக அமையவேண்டும். குழு விவாதம், அனுபவப் பகிர்வு, உண்மைச் சம்பவங்கள் கூறுதல், கதைகள், உற்சாக விளையாட்டுக்கள், விழிப்புணர்வுப் பாடல்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

3. ஒவ்வொரு பயிற்றுனரும் மாதம் ஒன்றுக்கு 12 நாட்களுக்கு மிகாமல் பயிற்சி அளிக்கலாம். மீதமுள்ள 18 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்ட குழுக் கூட்டங்களுக்குச் சென்று முன்னேற்றத்தை ஆய்வு செய்ய வேண்டும்.

4. குழுவைப் பொறுத்த அளவில் பயிற்சி முடிந்த பிறகு தான் முக்கியமான கூட்டம் ஆரம்பமாகிறது. பயிற்றுவித்த பாடம் குழுவால் விவாதிக்கப்பட்டு செயல் வடிவம் பெற்றதா என்பதை பயிற்றுனர் களப்பணியின் போது தான் உறுதிசெய்ய வேண்டும்.

5. ஒவ்வொரு பயிற்சிப் பாடம் முடிந்த பிறகும் குழு ஒரு தீர்மானம் இயற்ற வேண்டும். அதில் கற்றவை எவ்

வாறு செயலாக்கப்படும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

6. கற்றவை நடைமுறைக்கு வராமல் அடுத்த பாடம் செல்வது பயன்தராது. இதற்காகத்தான் இரு பாடங்களுக்கிடையே குறைந்த பட்சம் 45 நாட்கள் இடைவெளி தரவேண்டும்.

7. பட அட்டைகள் இன்றி பயிற்சி நடத்தக்கூடாது.

பங்கேற்பு முறையிலான கண்காணிப்பு-வழிமுறை

திட்டச் செயலாக்கப் பிரிவும் தொண்டு நிறுவனமும் மகளிர் குழு செயல்பாடுகளை கண்காணிக்கும். மாதாமாதம் நடைபெறும் வட்டார அளவிலான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் ஊக்குனர் / பிரதிநிதிகள் தவறாமல் கலந்து கொண்டு தங்கள் நடைமுறைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணலாம். இந்தக் கூட்டத்தில் மற்ற குழுக்களின் சிறப்புப் பணிகளையும் அனுபவங்களையும் குறைபாடுகளையும் பற்றித் தெரிந்துகொண்டு தங்கள் குழு செயல்பாட்டை சீரமைக்கலாம். இக்கூட்டத்தில் திட்ட அலுவலர்கள் / தொண்டு நிறுவனப் பணியாளர்கள் உள் வட்டத்தில் அமராமல், வெளிவட்டத்தில் பார்வையாளராக இருப்பது மிக அவசியம். குழு உறுப்பினர்கள் நடத்தும் இக்கூட்ட நடவடிக்கையில் தேவையில்லாமல் குறுக்கிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

காலப்போக்கில் குழுக்கள் நிலைத்த தன்மை அடைய வேண்டுமென்றால் கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. ஒவ்வொரு மாதமும் இறுதி குழுக்கூட்டத்தில் குழு நிலையை தரம் பிரித்தல் மூலம் ஆய்வு செய்து, குறைபாடுகளைக் களைய குழுக்களே நடவடிக்கை எடுக்க ஊக்குவிக்க வேண்டும்.

2. குழுக் கூட்டமைப்பு / பி.எல்.சி.சி. உறுப்பினர்கள் ஒவ்வொரு குழுவின் முன்னேற்றத்தையும் குறை

களையும் ஒவ்வொரு மாதமும் கூட்டமைப்பே ஆய்வு செய்யும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

3. ஆரம்பத்திலிருந்து குழு கூட்டமைப்புக்கள்/ பி.எல்.சி.சி. கண்காணிப்புப் பொறுப்பை ஏற்றால், இரண்டு வருடங்களில் குழுக்கள் நன்கு பலப்படுத் தப்படும். நிலைத்த தன்மை அடையும்.

தொண்டு நிறுவன களப்பணியாளர்களின் பொறுப்பு

ஒவ்வொரு மாதமும் நடக்கும் குழுக் கூட்டங்களில் ஏதேனும் ஒரு கூட்டத்தில் குழுவின் முன்னேற்றத்தைக் குழுவே ஆய்வு செய்யும் பழக்கத்தை களப்பணியாளர் ஊக்குவிக்க வேண் டும். விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய கேள்விகளைக் கேட்க களப் பணியாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். நலிவடைந்த மற்றும் பிரச்சனைகள் இருக்கும் குழுக்களுக்கு மாதம் இரண்டு, மூன்று முறை செல்வது நல்ல பலனைத் தரும். சிறப்பாகச் செயல்படும் குழுக்களுக்கு அழைத்து வந்து பல அறிவுரைகள் கூறச்செய்யலாம்.

ஆரம்ப கட்டத்தில் களப்பணியாளர்கள், குழுக்களைக் கண்காணிக்கும் நிலை மாறி ஒரு வருடமான குழுக்கள் தாமாகவே குழுக் கூட்டங்களில் சிறு உதவியுடன் குழுவின் முன்னேற்றத்தை ஆய்வுசெய்யும் நிலை உருவாக தொண்டு நிறுவனங்கள் திட்ட மிட்டு செயல்பட வேண்டும்.

சுய சார்புத் தன்மை

தொண்டு நிறுவனத்தைச் சார்ந்த நிலை நீங்கி, குழுக்கள் சொந்தக் காலில் நிற்க, குழுவும் தொண்டும் நிறுவனமும் திட்ட அலுவலகமும் பாடுபட வேண்டும். குழுவிற்கென்று எதிர்காலக் கனவு, தொலைநோக்கு, நோக்கங்கள் ஆகியவை உருவாக்க வேண் டும். ஆண்டுத் திட்டம் தீட்டி, அதனைச் செயல்படுத்தி. செயல் பாட்டினை ஆய்வுசெய்யும் திறமை ஏற்படுத்த வேண்டும். அரசு/ தொண்டு நிறுவன உதவியின்றி வங்கியுடன் வணிக ரீதியான நேரடித் தொடர்பு ஏற்படுத்த வேண்டும். கிராம அளவில் குழு விற்கு மதிப்பும் அங்கீகாரமும் உருவாக வேண்டும். கிராம அளவிலான சமுதாயப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில்

வெற்றி அடைதல் வேண்டும். குழுவின் செலவுகளை சுயமாக எதிர்நோக்கும் நிலை உருவாகுதல் வேண்டும். திட்ட அலுவலகத்தையோ தொண்டு நிறுவனத்தையோ சார்ந்திருக்கும் நிலை நீங்கி சார்பாக செயல்படத் துவங்குதல். குழு கூட்டமைப்புக்களில் முழுமையாக பங்கேற்று பயனடைதல் வேண்டும்.

பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு

தாங்களாகவே, சுயசார்புடன் செயல்பட மகளிர் குழுக்கள், பஞ்சாயத்து அல்லது பகுதி அளவிலான கூட்டமைப்புகளாக இணைந்து செயல்படலாம். கூட்டமைப்புகள் தங்கள் குழுக்களை பலப்படுத்துவதையே முதன்மை குறிக்கோளாக ஏற்று செயல்பட வேண்டும்.

அமைப்பு

ஒரு பகுதியில் உள்ள 15 முதல் 25 மகளிர் குழுக்கள் வரை இணைந்து கூட்டமைப்பை ஏற்படுத்தலாம். பகுதி அளவிலான கூட்டமைப்பில், ஒவ்வொரு குழுவிலிருந்து இரண்டு பிரதிநிதிகள் இடம்பெறுவர். ஊக்குநர்/பிரதிநிதி அல்லது ஒரு உறுப்பினரை இதற்குத் தேர்வு செய்து குழு வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு பிரதிநிதிகளின் பதவிக்காலம் இரண்டுஆண்டுகள் என்று நிர்ணயிக்கலாம். மகளிர் குழுக்கள் நன்றாக செயல்பட ஆரம்பித்து நிலைத்த தன்மை அடைந்தவுடன், அவர்கள் தேவையை உணர்ந்து கூட்டமைப்பு அமைக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

செயல்பாடு

பகுதி அளவிலான கூட்டமைப்பின் கூட்டம் மாதம் ஒரு முறை நடைபெறும். பகுதி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர் குழுக்கள் முடிவுப்படி, ஒவ்வொரு மாத கூட்டமும் சுழற்சி முறையில் ஒவ்வொரு கிராமத்தில் நடைபெறலாம். கூட்டமைப்பு கணக்குகள் மற்றும் செயல்பாடுகளை எழுத, குழுக்கள் பயன்படுத்தும் தீர்மானப் புத்தகம், ரொக்கப் பதிவேடு, வருகைப் பதிவேடு, பொது பேரேடு ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு மாதமும் கூட்டமைப்புக் கூட்டத்தில் கூட்டமைப்பே ஒவ்வொரு

குழுவின் நிறைகளையும் குறைபாடுகளையும் ஆய்வுசெய்து குழுக்கள் மேம்பட வழிவகுக்க வேண்டும். இதைச் சிறப்பாக செய்திட ஆரம்பக் காலத்தில் தொண்டு நிறுவனம் உதவிசெய்ய வேண்டும்.

பகுதி அளவிலான கூட்டமைப்பு செயல்பாடுகளின் செலவை ஈடுகட்ட உறுப்பினர் குழுக்களிடமிருந்து சிறு கட்டணம் வசூல் செய்யலாம். இதற்காக கூட்டமைப்பின் பெயரில் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட வேண்டும். பகுதி அளவிலான கூட்டமைப்பு தன்னோடு இணைந்துள்ள அனைத்து குழுக்களுக்கும் ஆதரவு தரும். பகுதி அளவிலான கூட்டமைப்புக் குழுக்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண உதவிசெய்யும். பகுதி அளவிலான கூட்டமைப்பு வருடாந்திர குழு கணக்கு தணிக்கை, பகுதி அளவிலான கருத்தரங்கம், மகளிர் தின விழா ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யும். பகுதி அளவிலான கூட்டமைப்பு வலு விழந்த குழுக்கள் மேம்பாடு அடைய உதவும்.

பகுதி அளவிலான கூட்டமைப்பு, குழுக்கள் சார்பாக, அரசு துறைகளிடம் பிரச்சனைகளை எடுத்துரைத்து தீர்வுகாண வழி வகை செய்யும். பகுதி அளவிலான கூட்டமைப்பு சமூகப் பிரச்சனைகளுக்கும், கிராம மேம்பாட்டுப் பணிகளுக்கும் கிராமத்திலுள்ள மற்ற பொதுமக்களின் ஆதரவையும் திரட்டும். குழுக் காப்பீடு, விபத்து நிவாரணம், வெள்ள நிவாரணம் ஆகியவை பெறுவதில் குழுக்களுக்கு அறிவுரைகளும் உதவியும் செய்யும். காப்பீட்டு கழகங்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவையுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதில் கூட்டமைப்புக்கு பொறுப்பு உள்ளது.

செய்யக்கூடாதவை

பகுதி அளவிலான கூட்டமைப்பு ஆரம்பித்த முதல் ஆண்டே, சரியாக வளர்ச்சியடையாத நிலையிலேயே, கூட்டமைப்பு மூலமாக குழுக்களுக்கு கடன் வழங்க வழிவகை செய்யக் கூடாது. 4-5 ஆண்டுகளுக்கு செயல்பட்ட பிறகு இதைப் பற்றி சிந்திக்கலாம். கூட்டமைப்பு என்பது குழுக்களின் சமுதாய மேம்பாட்டிற்கான அமைப்பு என்பதை உணரவேண்டும். கூட்டமைப்புப் பிரதிநிதிகள், மகளிர் குழுக்களின் சுயசார்பு நிலைக்கு எந்த

வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது. குழுக்கள் முழுமையாக சேமிப்பை சழற்சி செய்வதை தடுத்துவிட்டு, கூட்டமைப்புகளிலிருந்து குழுக்களுக்கு கடன் வாங்குவது அறவே கூடாது.

அரசியல் மற்றும் சாதி, மத சார்பு அறவே கூடாது. வட்டார, மாவட்ட அளவிலான கூட்டமைப்புகளின் தேவையைப் பகுதி அளவிலான கூட்டமைப்பு உணராதபோது, மேலும் அமைப்புகளை கட்டாயமாக உருவாக்கக்கூடாது கூட்டமைப்பு குழுக்களை பலப்படுத்த உதவ வேண்டும். குழுக்களின் சுதந்திரத்தில் குறுக்கிடக்கூடாது. தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கூட்டமைப்பு நிர்வாகத்தில் பங்கேற்கக்கூடாது.

கிராம மேம்பாடு

மகளிர் குழுக்கள் தங்களுடைய உறுப்பினர்களின் தேவையை மட்டும் பூர்த்தி செய்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் சமூகப் பிரச்சனைகள், கிராமப் பொது அடிப்படை வசதிகள் ஆகிய வற்றிலும் அக்கறை காண்பித்து, ஒட்டுமொத்த கிராமமும் மேம்பாடு அடைய முயற்சி செய்ய வேண்டும். குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆண்டுதோறும் பஞ்சாயத்து கூட்டும் 4 கிராமமன்ற கூட்டங்களிலும் தவறாது கலந்துகொள்ள வேண்டும். தங்கள் குடியிருப்புக்களில் நிலவும் பிரச்சனைகளைக் கூட்டாக எடுத்துக் கூறி, அடிப்படைத் தேவைகளை கிராமப் பஞ்சாயத்து மூலம் நிறைவேற்ற வேண்டும். அதேபோன்று தங்கள் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களில் செயல்படும் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும். குழு உறுப்பினர்கள் வாழும் பகுதியில் குழந்தைகள் அனைவரும் பள்ளிக் கூடங்களில் சேர்க்கப்பட்டுள்ளனரா என்பதை உறுதிசெய்ய வேண்டும். பொது விநியோக அங்காடி, சத்துணவு மையங்கள், குழந்தை நல மையங்கள், குடிநீர் திட்டங்கள், பள்ளி வகுப்புகள் போன்றவை சரியான முறையில் இயங்கச் செய்ய கிராம மக்கள் உதவியோடு 'நமக்கு நாமே' என்ற அடிப்படையில் குழு சிறப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் சமூக- பொருளாதார நிலையைக் கண்டறிதல்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 400 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களில் இரண்டரை லட்சம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் ரூ.60 கோடி அளவுக்கு சேமித்து உள்ளனர். சுய உதவிக் குழுக்கள் பற்றிய விளக்கங்கள், கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்கு தலைமை அலுவலகம் கருப்பூரில் இயங்கி வருகிறது. தஞ்சாவூர் தாலுக்காவில் நாஞ்சிக்கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட நன்கு செயல்படக்கூடிய 8 குழுக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அதில் 150 உறுப்பினர்கள் நேர்காணல் மூலம் முதல் நிலைத் தரவுகள் மூலம் செய்திகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு முறையில் பட்டியலின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் வயது, சாதி வாரியான மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள், உறுப்பினர்களின் கல்வித்தகுதி, திருமணம் பற்றிய விவரம், திருமண வயது, சொத்துக்கள், மாத வருமானம், வங்கி சேமிப்புப் பழக்கங்கள் ஆகியவை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. விழுக்காடு கணக்கிடல் முறையில் உத்திகள் பயன்படுத்தி பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

பட்டியல் - 1

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வயது

வ. எண்.	வயது	உறுப்பினர்கள்	விழுக்காடு
1.	20 - 30	46	31
2.	31 - 40	57	38
3.	41 - 50	35	23
4.	51 - 60	12	8
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 1 இல் ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 உறுப்பினர்களின் வயது பற்றிய விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 31 விழுக்காடு மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் 20-30 வயது பிரிவில் உள்ளனர். 38 விழுக்காடு உறுப்பினர்கள் 31 - 40 வயது உடையவர்களாகவும், 23 விழுக்காடு உறுப்பினர்கள் 41-50 வயதிலும், 8 விழுக்காடு உறுப்பினர்கள் 51-60 வயது பிரிவில் குறைவான உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர்.

பட்டியலின்படி 31-40 வயது பிரிவை உடையவர்கள் அதிக அளவாக 38 விழுக்காடு உறுப்பினர்கள உள்ளனர். அடுத்த நிலையில் 20-30 வயது பிரிவைச் சேர்ந்தவாகள் 31 விழுக்காடு உள்ளனர் என்று அறியமுடிகிறது. 4.1 பட்டியலின்படி மகளிர் சுயஉதவிக் குழுக்களில் நடுத்தர வயதைச் சார்ந்தவர்களே அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என்பதை ஆய்வின்படி அறியலாம். வயதானவர்கள் மிகக் குறைவாகவே குழுக்களில் பங்கேற்கின்றனர் என்பதும் தெரிய வருகிறது.

பட்டியல் - 2

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் இனம்

வ. எண்.	இனம்	உறுப்பினர்கள்	விழுக்காடு
1.	பிற்படுத்தப்பட்டோர்	72	48
2.	மிகவும் பிற்படுத்தப்பட்டோர்	35	23
3.	தாழ்த்தப்பட்டோர்	37	25
4.	இதர வகுப்பினர்	6	4
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 2 இல் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட 150 உறுப்பினர்கள் இனவாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளனர். 48 விழுக்காடு உறுப்பினர்கள் பிறப்டுத்தப்பட்டோர் வகுப்பில் உள்ளனர். 23

விழுக்காடு உறுப்பினர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் உள்ளனர். 25 விழுக்காடு உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்டோர் வகுப்பிலும், 4 விழுக்காடு உறுப்பினர்கள் இதர வகுப்பினர் பிரிவிலும் உள்ளனர்.

பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் அதிக அளவாக 48 விழுக்காடும், அடுத்த நிலையில் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் 25 விழுக்காடும் உள்ளனர். ஆய்வின்படி மகளிர் சுயஉதவிக் குழுவில் மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையிலும், இதர வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிகவும் குறைவாகவும் உள்ளனர் என்பது அறியமுடிகிறது.

பட்டியல் - 3

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் மதம் பற்றிய விவரம்

வ. எண்.	மதம்	உறுப்பினர்கள்	விழுக்காடு
1.	இந்து	*131*	*87*
2.	முஸ்லீம்	*11*	*7*
3.	கிறித்தவம்	*8*	*6*
	கூடுதல்	*150*	*100*

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 3 இல் குழு உறுப்பினர்கள் எந்ததெந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்து மதத்தில் 87 விழுக்காடு உறுப்பினர்கள் உள்ளனர். முஸ்லீம் மதத்தில் 7 விழுக்காடு உறுப்பினர்களும், கிறித்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் 5 விழுக்காடு குறைவான உறுப்பினர்கள் உள்ளனர் என்று ஆய்வில் அறிமுடிகிறது. இந்து மதத்தில் அதிக அளவு உறுப்பினர்களும், கிறித்தவம், மற்றும் முஸ்லீம் மதத்தில் குறைவான உறுப்பினர்களே உள்ளனர் என்பது தெரியவருகிறது.

பட்டியல் - 4

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் கல்வித்தகுதி

வ. எண்.	கல்வித்தகுதி	உறுப்பினர்கள்	விழுக்காடு
1.	1 - 5	60	40
2.	5 - 10	72	48
3.	10 - 12	12	8
4.	12க்கு மேல்	6	4
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 4 இல் மகளிர் குழு உறுப்பினர்களின் கல்வித்தகுதிகள் ஆய்வுக்கு கொடுக்கப்படுகிறது. 40 விழுக்காடு 5-10 ஆம் வகுப்பு வரை படித்த உறுப்பினர்களும் 8 விழுக்காடு 10-12 வகுப்பு வரை படித்த உறுப்பினர்களும், 4 விழுக்காடு 12 அதற்கு மேல் படித்த உறுப்பினர்கள் உள்ளனர். 5-10 ஆம் வகுப்பு வரை படித்த உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையிலும், 12 அதற்கு மேல் படித்த உறுப்பினர்கள் மிகவும் குறைவாக உள்ளனர் என்பது ஆய்வு மூலம் தெரியவருகிறது.

பட்டியல் - 5

திருமணத் தகுதிகளின் குழு உறுப்பினர்கள்

வ. எண்.	திருமணத்தகுதி	உறுப்பினர்கள்	விழுக்காடு
1.	திருமணமானவர்கள்	121	81
2.	திருமணமாகாதவர்கள்	29	19
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பட்டியல் எண் 5 இன் படி 150 குழு உறுப்பினர்களின் திருமணத்தகுதியைப் பற்றி ஆராய்கிறது. 81 விழுக்காடு குழு உறுப்பினர்கள் திருமணமானவர்களும் 19 விழுக்காடு குழு உறுப்பினர்கள் திருமணமாகாதவர்கள் என்பது தெரியவருகிறது. இவ் ஆய்வின்படி திருமணமானவர்கள் அதிக மாகவும், திருமணமாகாதவர்கள் குறைவாகவே மகளிர் சுயஉதவிக் குழுக்களில் பங்கேற்கின்றனர் என்பது அறியமுடிகிறது.

பட்டியல் - 6

குழு உறுப்பினர்களின் வயது மற்றும் திருமணத்தகுதி

வ. எண்.	வயது	கணவருடன் வாழ்பவர்	விதவை	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	20 - 30	47	-	47	31.3
2.	30 - 40	55	1	56	37.3
3.	40 - 50	35	3	38	25.3
4.	50 - 60	6	3	9	6
			கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 6 இன்படி வயது மற்றும் திருமணத் தகுதி கள் ஆராயப்படுகின்றன. 20-30 வயது பிரிவில் 31.3 விழுக்காடு மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் கணவருடன் வாழ்பவர்கள். 30-40 வயது பிரிவில் 37.3 விழுக்காடு உறுப்பினர்களில் 1 விதவை உறுப்பினர் உள்ளனர். 40-50 வயது பிரிவில் 25.3 விழுக்காடு உறுப் பினர்களில் 3 விதவை உறுப்பினர்களும், 50-60 வயது பிரிவில் 6 விழுக்காடு உறுப்பினர்களில் 3 விதவை உறுப்பினர்கள் உள்ளனர் என்று ஆய்வு மூலம் தெரியவருகிறது.

பட்டியல் - 7

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குடும்பத்தின் வகை

வ. எண்.	குடும்பத்தின் வகை	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	தனிக்குடும்பம்	124	83
2.	கூட்டுக்குடும்பம்	26	17
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 7 இன்படி மகளிர் சுயஉதவிக் குழுக்களின் குழு உறுப்பினர்களின் குடும்பத்தின் வகைகள் ஆராயப்படுகின் றன. 83 விழுக்காடு குழு உறுப்பினர்கள் தனிக்குடும்பமாகவும், 17 விழுக்காடு குழு உறுப்பினர்கள் கூட்டுக் குடும்பமாகவும் உள்ளனர் என்று அறியமுடிகிறது. இவ் ஆய்வின் மூலம் அதிக அளவிலான குழு உறுப்பினர்களின் குடும்பங்கள் தனிக் குடும்பங்களாக இருப் பது தெரியவருகிறது.

பட்டியல் - 8

குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை

வ. எண்.	குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை	குடும்பத்தின் எண்ணிக்கை	ஆண்	பெண்	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	2	19	12	17	29	12.6
2.	3	23	30	36	66	15.3
3.	4	45	119	105	224	30.0
4.	5	29	70	76	146	19.3
5.	6	21	55	67	122	14.0
6.	7	9	13	24	37	6.0
7.	8	4	16	8	24	2.6
கூடுதல்		150				100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 8 இன்படி ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட குழு உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்களின் எண் ணிக்கை ஆராயப்படுகின்றன. 4 குடும்ப உறுப்பினர்கள் கொண்ட குடும்பங்கள் 30 விழுக்காடும், 5 குடும்ப உறுப்பினர்கள் கொண்ட குடும்பங்கள் 19.3 விழுக்காடும், 3 குடும்ப உறுப்பினர்கள் கொண்ட குடும்பங்கள் 15.3 விழுக்காடும், 2 குடும்ப உறுப்பினர் கள் கொண்ட குடும்பங்கள் 12.6 விழுக்காடும், 6 உறுப்பினர்கள் கொண்ட குடும்பங்கள் 14 விழுக்காடும், 7 உறுப்பினர்கள் கொண்ட குடும்பங்கள் 6 விழுக்காடும், 8 உறுப்பினர்கள் கொண்ட குடும்பங் கள் 2.6 விழுக்காடும் உள்ளனர் என்பது அறியமுடிகிறது.

பட்டியலின்படி 4 உறுப்பினர்கள் குடும்பங்களில் அதிக அளவாக 30 விழுக்காடும், 8 உறுப்பினர்கள் குடும்பங்களில் மிகக் குறைவாக 2.6 விழுக்காடும் உள்ளனர் என்பது தெரியவருகிறது

பட்டியல் - 9

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் சொத்து மதிப்பு

வ. எண்.	சொத்து மதிப்பு	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	50,000 - 1,00,000	15	10
2.	1,00,000 - 1,50,000	45	30
3.	1,50,000 - 2,00,000	43	29
4.	2,00,000 - 2,50,000	27	18
5.	2,50,000 - 3,00,000	20	13
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 9 படி ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் குழு உறுப்பினர்களின் சொத்துக்களின் மதிப்பின் அடிப் படையில் ஆராயப்பட்டுள்ளது. 50,000-1,00,000 வரை சொத்துக் களின் மதிப்புடைய உறுப்பினர்கள் 10 விழுக்காடு உள்ளனர். 1,00,000-1,50,000 வரை சொத்து மதிப்புடைய உறுப்பினர்கள் 30 விழுக்காடு உள்ளனர். 1,50,000-2,00,000 வரை சொத்து மதிப் புடைய உறுப்பினர்கள் 29 விழுக்காடு உள்ளனர். 2,00,000- 2,50,000 வரை சொத்து மதிப்புடைய உறுப்பினர்கள் 18 விழுக்காடு உள்ள னர். 2,50,000 - 3,00,000 வரை சொத்து மதிப்புடைய உறுப்பினர்கள் குறைவாக 13 விழுக்காடு மட்டுமே உள்ளனர்.

பட்டியலின்படி 1,00,000-1,50,000 சொத்து மதிப்புடைய உறுப்பினர்கள் அதிக அளவாக 30 விழுக்காடும் அடுத்த நிலையில் 1,50,000 - 2,00,000 வரை சொத்து மதிப்புடைய உறுப்பினர்கள் 29 விழுக்காடும் உள்ளனர். குறைந்த சொத்து மதிப்புடைய உறுப் பினர்கள் இக்குழுக்களில் பங்கேற்கின்றனர் என்பதை இவ் ஆய்வு மூலம் அறியமுடிகிறது.

பட்டியல் - 10

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வீட்டின் விவரம்

வ. எண்.	வீட்டின் தன்மை	உறுப்பினர்கள்	விழுக்காடு
1.	சொந்த வீடு	113	75.3
2.	வாடகை வீடு	37	24.6
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 10 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் சொந்த வீட்டில் வசிப்பவர்கள் அதிக அளவில் 75.3 விழுக்காடும், வாடகை வீட்டில் வசிப்பவர்கள் 24.6 விழுக்காடும் உள்ளனர். பெரும்பாலான உறுப்பினர்கள் சொந்த வீட்டில் வசிப்பவர்கள் என்பது ஆய்வுமூலம் தெரியவருகிறது.

பட்டியல் - 11

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வீட்டின் வகைகள்

வ. எண்.	வீட்டின் வகைகள்	உறுப்பினர்கள்	விழுக்காடு
1.	கூரைவீடு	49	33
2.	ஓடு வீடு	75	50
3.	கான்கிரீட் வீடு	26	17
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 11 தேர்ந்தெடுக்கப்பட்ட குழு உறுப்பினர் களின் வீடுகளின் வகைகள் பற்றிய விவரங்களை ஆராய்கிறது. 33 விழுக்காடு உறுப்பினர்கள் கூரை வீட்டில் வசிப்பவர்கள். கான்கிரிட் வீட்டில் வசிப்பவர்கள் குறைவாக 17 விழுக்காடு உறுப்பினர் கள் உள்ளனர்.

பட்டியல் - 12

குழு உறுப்பினர்கள் பயன்படுத்தும் வீட்டு உபயோகப் பொருட்கள் விவரம்

வ. எண்.	பொருட்கள்	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	கிரைண்டர்	32	22
2.	மிக்சி	31	21
3.	தொலைக்காட்சிப்பெட்டி	35	23
4.	இருசக்கர வாகனம்	20	13
5.	அனைத்துப் பொருட்களும்	32	21
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 12 குழு உறுப்பினர்கள் பயன்படுத்தும் வீட்டு உபயோகப் பொருட்கள் பற்றிய விவரம் ஆராய்கிறது. அதிக எண்ணிக்கையில் தொலைக்காட்சிப் பெட்டி 23 விழுக்காடு உறுப்பினர்கள் பயன்படுத்துகின்றனர். அடுத்தநிலையில் கிரைண்டர் 22 விழுக்காடும், மிக்சி 21 விழுக்காடும் குழு உறுப்பினர்கள் பயன்படுத்துகின்றனர். அனைத்து வீட்டுப் பொருட்களும் பயன்படுத்தும் உறுப்பினர்கள் 21 விழுக்காடு உள்ளனர். 13 விழுக்காடு உறுப்பினர்கள் இரு சக்கர வாகனம் பயன்படுத்துகின்றனர்.

பட்டியல் - 13

குழு உறுப்பினர்களின் வீட்டின் வசதிகள்

வ. எண்.	வசதிகள்	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	*தண்ணீர் வசதி*	*25*	*17*
2.	*மின்வசதி*	*69*	*46*
3.	*கழிவறை வசதி*	*15*	*10*
4.	*அனைத்து வசதிகளும்*	*41*	*27*
	கூடுதல்	*150*	*100*

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 13 குழு உறுப்பினர்களின் வீட்டில் உள்ள வசதிகள் குறித்து ஆராய்கிறது. 17 விழுக்காடு உறுப்பினர்கள் தண்ணீர் வசதி உள்ளவர்களாகவும், 46 விழுக்காடு உறுப்பினர்கள் மின்வசதி உள்ளவர்களாகவும், 10 விழுக்காடு கழிவறை வசதி உள்ளவர்களாகவும், 27 விழுக்காடு அனைத்து வசதிகளும் உள்ளவர்களாகவும் உள்ளனர். மின்வசதி உள்ளவர்கள் மிக அதிக அளவாக 46 விழுக்காடும், அடுத்த நிலையில் அனைத்து வசதி களும் உள்ளவர்கள் 27 விழுக்காடு உறுப்பினர்கள் உள்ளனர் என்பது தெரியவருகிறது.

பட்டியல் - 14

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் மாத வருமானம்

வ. எண்.	மாத வருமானம்	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	500 - 1000	72	48
2.	1001 - 1500	23	15
3.	1501 - 2000	19	13
4.	2001 - 2500	20	13
5.	2500 - அதற்கு மேல்	16	11
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 14 குழு உறுப்பினர்களின் மாத வருமானம் பற்றி ஆராய்கிறது. 500-1000 வருமானம் உடையவர்கள் 48 விழுக்காடு உறுப்பினர்களும், 1001-1500 வரை வருமானம் உடையவர்கள் 15 விழுக்காடு உறுப்பினர்களும், 1501-2000 வரை வருமானம் உடையவர்கள் 13 விழுக்காடு உறுப்பினர்களும், 2001-2500 வரை வருமானம் உடையவர்கள் 13 விழுக்காடும், 2500- அதற்கு மேல் வருமானம் உடையவர்கள் 11 விழுக்காடும் உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

இந்தப் பட்டியலின்படி 500-1000 வருமானம் உடையவர்கள் அதிக அளவாக 48 விழுக்காடும், அதற்கு அடுத்த நிலையில் 1001-1500 மற்றும் 2001-2500 வருமானம் உடையவர்கள் 13 விழுக்காடு உள்ளர். மகளிர் சுயஉதவிக் குழுக்களில் அதிக வருமானம் உடையவர்கள் மிகக் குறைவாகவே பங்கேற்கின்றனர் என்பது ஆய்வின் மூலம் அறியமுடிகிறது.

பட்டியல் - 15

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குடும்பச் செலவுகள்

வ. எண்.	குடும்பச் செலவுகள்	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	உணவு	70	47
2.	உடை	7	5
3.	கல்வி	32	21
4.	போக்குவரத்து	20	13
5.	மருத்துவம்	21	14
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 15 மகளிர் குழு உறுப்பினர்களின் மாத குடும்பச் செலவுகள் குறித்து ஆராய்கிறது. 47 விழுக்காடு குழு உறுப்பினர்கள் உணவுக்குச் செலவு செய்பவர்கள், 5 விழுக்காடு உறுப்பினர்கள் உடைக்குச் செலவு செய்பவர்கள், 21 விழுக்காடு கல்விக்குச் செலவு செய்பவர்கள், 13 விழுக்காடு உறுப்பினர்கள் போக்குவரத்துக்குச் செலவு செய்பவர்கள், 14 விழுக்காடு உறுப் பினர்கள் மருத்துவத்திற்குச் செலவு செய்பவர்களாக உள்ளனர். உணவுக்குச் செலவு செய்பவர்கள் மிக அதிக அளவாக 47 விழுக் காடு உறுப்பினர்களும், உடை மற்றும் போக்குவரத்துச் செலவு செய்பவர்கள் மிகவும் குறைவாகவும் உ ள்ளனர் என்பது தெரிய வருகிறது.

பட்டியல் - 16

மகளிர் குழு உறுப்பினர்களின் சேமிப்பு விவரம்

வ. எண்.	சேமிப்பு விவரம்	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	மகளிர் சுய உதவிக்குழு சேமிப்பு	110	74
2.	அஞ்சலக சேமிப்பு	20	13
3.	வங்கி சேமிப்பு	10	6
4.	குழு சீட்டு சேமிப்பு	10	6
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 16 மகளிர் குழு உறுப்பினர்களின் சேமிப்பு பழக்கம் பற்றி ஆராய்கிறது. 74 விழுக்காடு மகளிர் சுயஉதவிக்குழுவில் சேமிப்பவர்கள் காணப்படுகின்றனர். 13 விழுக்காடு அஞ்சலக முறையில் சேமிப்பவர்களாகவும், 6 விழுக்காடு வங்கியில் சேமிப்பவர்களாகவும், 6 விழுக்காடு குழுச்சீட்டில் சேமிப்பவர்களாகவும் உள்ளனர். மகளிர் சுயஉதவிக் குழுவில் சேமிக்கும் உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையிலும், வங்கியில் சேமிப்பவர்கள் மிகவும் குறைவான எண்ணிக்கையில் உள்ளனர் என்பது தெரியவருகிறது.

பட்டியல் - 17

மகளிர் குழு உறுப்பினர்கள் குழுவில் சேமிக்கும் தொகை

வ. எண்.	குழுவில் சேமிக்கும் தொகை	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	ஒரு வாரத்திற்கு ரூ. 10/- வீதம்	120	80
2.	இரண்டு வாரத்திற்கு ரூ. 50/- வீதம்	12	8
3.	மூன்று வாரத்திற்கு ரூ. 75/- வீதம்	10	7
4.	ஒரு மாதத்திற்கு ரூ. 100/- வீதம்	8	5
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 17 மகளிர் குழு உறுப்பினர்கள் குழுவில் சேமிக்கும் தொகையின் அளவு பற்றி ஆராய்கிறது. 80 விழுக்காடு உறுப்பினர்கள் வாரம் ரூ. 10/- வீதம் சேமிப்பவர்கள் அதிக எண் ணிக்கையில் காணப்படுகின்றனர். 8 விழுக்காடு உறுப்பினர்கள் இரண்டும் வாரத்திற்கு ரூ. 50/- வீதம் சேமிப்பவர்களும், 7 விழுக் காடு மூன்று வாரத்திற்கு ரூ.75/- வீதம் சேமிப்பவர்களும், 5 விழுக் காடு உறுப்பினர்கள் மாதத்தற்கு ரூ.100/- வீதம் சேமிப்பவர்கள் ஆய்வு மூலம் தெரியவருகிறது. அதிக எண்ணிக்கையில் குழு உறுப் பினர்கள் வாரம் ரூ.10/- சேமிக்கும் பழக்கம் உடையவர்களாக உள் ளார்கள் என்றும், மாதம் ரூ. 100/- சேமிக்கும் பழக்கம் உடையவர் கள் மிகக் குறைவாக உள்ளனர் என்பதும் தெரியவருகிறது.

பட்டியல் - 18

குழு உறுப்பினர்கள் கடன் வாங்குவதற்குரிய வட்டி அளவுகள்

வ. எண்.	வட்டியின் அளவு	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	1 வட்டி	58	39
2.	2 வட்டி	54	35
3.	3 வட்டி	38	25
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 18 குழு உறுப்பினர்களின் கடன் வாங்கும் வட்டியின் அளவுகளை ஆராய்கிறது. 39 விழுக்காடு உறுப்பினர்கள் ஒரு வட்டிக்குக் கடன் வாங்குபவர்களாகவும், 36 விழுக்காடு உறுப் பினர்கள் இரண்டு வட்டிக்குக் கடன் வாங்குபவர்களாகவும் உள்ள னர். ஒரு வட்டிக்கு கடன் வாங்குபவர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். மூன்று வட்டிக்கு கடன் வாங்குபவர்கள் மிகவும் குறைவாக உள்ளனர். உரிய நேரத்தில் வட்டித்தொகையை செலுத்தாதவரிடமிருந்து கூடுதலாக வட்டி வசூலிக்கப்படுகிறது என்பது கள ஆய்வின் மூலம் தெரியவந்தது.

பட்டியல் - 19

உறுப்பினர்கள் குழுக்கூட்டத்தில் பங்கேற்கும் முறை

வ. எண்.	கூட்டம் நடைபெறும் முறைகள்	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	வாரக்கூட்டம்	120	80
2.	இரு வாரத்திற்கொரு முறை	17	11
3.	மூன்று வாரத்திற்கொரு முறை	10	7
4.	மாதக் கூட்டம்	3	2
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 19 உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் பங் கேற்கும் முறையைப் பற்றி ஆராய்கிறது. 80 விழுக்காடு குழு உறுப் பினர்கள் ஒவ்வொரு வாரமும் கூட்டத்தில் கலந்துகொள்பவர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். அடுத்த நிலையில் 11 விழுக்காடு உறுப்பினர்கள் இரண்டு வாரத்திற்கொரு முறையும், 7 விழுக்காடு உறுப்பினர்கள் மூன்று வாரத்திற்கொரு முறையும், 2 விழுக்காடு உறுப்பினர்கள் மாதக்கூட்டத்தில் கலந்து கொள்பவர் களாக உள்ளனர். ஒவ்வொரு வாரமும் கூட்டத்தில் கலந்து கொள் பவர்களே மிக அதிக எண்ணிக்கையில் 80 விழுக்காடு உறுப்பினர் கள் உள்ளனர் என்றும், மாதக்கூட்டத்தில் கலந்து கொள்பவர்கள் மிகவும் குறைவாக 2 விழுக்காடு உறுப்பினர்கள் மட்டும் உள்ளனர் என்றும் ஆய்வு மூலம் அறிய முடிகிறது.

பட்டியல் - 20

உறுப்பினர்களுக்கு குழுவின் சேமிப்புத் தொகையில் கடன் வழங்கும் முறை

வ. எண்.	கடன் வழங்கும் முறை	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	சுயதொழில் துவங்குதல்	75	50
2.	கல்விச் செலவு	60	40
3.	மருத்துவச் செலவு	12	8
4.	அவசரத் தேவை	3	2
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 20 உறுப்பினர்களுக்கு குழுவின் சேமிப்பு தொகையில் கடன் வழங்கும் முறையை ஆராய்கிறது. 50 விழுக் காடு உறுப்பினர்கள் சுயதொழில் தொடங்குவதற்கும், 40 விழுக் காடு உறுப்பினர்கள் கல்விச் செலவுக்கும், 8 விழுக்காடு உறுப்பினர் கள் மருத்துவச் செலவுக்கும், 2 விழுக்காடு உறுப்பினர்கள் அவசர தேவைகளுக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடி கிறது. சுயதொழில் தொடங்குவதற்கும் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் கடன் வாங்குபவர்கள் இருப்பதையும், அவசரத் தேவை செலவுகளுக்கு கடன் வாங்குபவர்கள் மிக குறைவாக இருப்பதையும் ஆய்வின் மூலம் அறியமுடிகிறது.

பட்டியல் - 21

குழு உறுப்பினர்கள் உதவி பெறும் நிறுவனங்கள்

வ. எண்.	நிறுவனங்கள்	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	வங்கியின் மூலம்	125	84
2.	தொண்டு நிறுவனம்	20	13
3.	பிற அரசு நிதி நிறுவனம்	5	3
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 21 குழு உறுப்பினர்கள் உதவிபெறும் நிறுவங்களைப் பற்றி ஆராய்கிறது. 84 விழுக்காடு உறுப்பினர்கள் வங்கியின் மூலம் பெறுகிறார்கள். 13 விழுக்காடு உறுப்பினர்கள் தொண்டு நிறுவனங்கள் மூலமும், 3 விழுக்காடு உறுப்பினர்கள் பிற அரசு நிதி நிறுவனங்கள் மூலம் பெறுகிறார்கள் என்பதை அறிய முடிகிறது. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் வங்கியின் மூலம்தான் அதிக அளவில் பெறுகின்றார்கள் என்றும், பிற அரசு நிதி நிறுவனங்கள் மூலம் கடன்பெறுபவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர் என்று ஆய்வு மூலம் அறிகிறோம்.

3. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் அவற்றைத் தீர்க்கும் முறைகளும்

தஞ்சாவூர் தாலுக்கா நாஞ்சிக்கோட்டை ஊராட்சியில் உள்ள நன்கு செயல்படக்கூடிய எட்டு மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி ஆராய்கிறது. இப்பகுதியில் உள்ள குழுக்களின் செயல்பாடுகள் அவற்றில் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவைப் பற்றியதாகும். ஆய்வுக்கு 1. காவேரித் தாய் மகளிர் சுயஉதவிக் குழு, 2. பாரதி மகளிர் சுய

உதவிக் குழு , 3. தங்கத்தாரகை மகளிர் சுயஉதவிக் குழு, 4. ஜாஸ்மின் மகளிர் சுயஉதவிக் குழு, 5. இசைத்தமிழ் மகளிர் சுயஉதவிக் குழு, 6. ஜோதி மகளிர் சுயஉதவிக் குழு, 7. அரசி மகளிர் சுயஉதவிக் குழு, 8. இந்திராகாந்தி மகளிர் சுயஉதவிக் குழு அகிய குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டடுள்ளன. மகளிர் சுயஉதவிக்குழுவில் பெண்கள் எந்த அளவில் உயர்ந்திருக்கின்றார் என்பது பற்றியும், குழு உருவாக்கம், குழுவின் செயல்பாடுகள், அவற்றின் முன்னேற்றங்கள் பற்றியும், மக்கள் உயர்ந்தும்ஒருசிலர் நடுத்தர மக்களாகவும் காணப்படுகிறார்கள். இந்த சுயஉதவிக்குழு பெண்கள் சில முன்னேற்றங்கள் அடைந்தாலும் சில வேறுபாடுகளினால் அவர்கள் சில பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். மகளிர் சுயஉதவிக் குழுவினால் மக்களிடையே சேமிக்கும் பழக்கம் ஏற்படுகிறது. சேமிப்புப் பழக்கத்தினால் வரவுசெலவுகளில் குழு உறுப்பினர்களிடையே பிரச்சனைகள் ஏற்படுகின்றன. பிரச்சனைகளை சரி செய்தும், சேமிப்புப் பழக்கத்தை ஒரு முக்கிய நோக்கமாக கருதுகின்றார்கள்.மகளிர் சுயஉதவிக் குழுவினால் மக்களிடையே ஒற்றுமைகள் காணப்படுகின்றன. சாதி, சமய இன வேறுபாடின்றி மகளிர் சுயஉதவிக் குழுவின் மூலம் அனைவரும் சமம் என்ற எண்ணங்களோடு இக்குழுவின் மூலம் பிரச்சனைகள் இன்றி செயல்படுகின்றனர். குழு உறுப்பினர்களிடையே பிரச்சனைகள் ஏற்பட்டாலும் மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் சிக்கல்களை தீர்த்துக்கொண்டு மக்களிடையே எந்தவிதமான பாகுபாடுகளும் இல்லாமல் இருக்கின்றனர். கிராம மக்களிடையே பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அதனைச் சரிசெய்வதில் இவர்கள் தயாராகவும் இருக்கின்றார்கள்.

பட்டியல் - 22

குழு உறுப்பினர்களிடையே பிரச்சனைகள் ஏற்படுவதற்கான காரணங்கள்

வ. எண்.	காரணங்கள்	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	வாரக் கூட்டத்திற்கு வராமல் இருப்பது	55	37
2.	சேமிப்புத் தொகையை உரிய காலத்தில் கட்டாமை	30	20
3.	வட்டி பற்றிய பிரச்சனை	65	43
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 22 மகளிர் குழு உறுப்பினர்களிடையே ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றி ஆராய்கிறது. 37 விழுக்காடு உறுப்பினர்கள் வாரக் கூட்டத்திற்கு வராமல் இருப்பதனால் பிரச்சனை ஏற்படுகிறது என்றும், 20 விழுக்காடு உறுப்பினர்கள் சேமிப் புத் தொகையை உரிய காலத்தில் கட்டாமை, மேலும் 43 விழுக் காடு உறுப்பினர்கள் கடன்வாங்கும்போது வட்டி பற்றிய பிரச் சனைகள் ஏற்படுகிறது என்றும் அறியமுடிகிறது. இந்தப் பட்டியல் மூலம் வட்டி பற்றிய சிக்கல்களினால் அதிக அளவு உறுப்பினர் களிடையே பிரச்சனை ஏற்படுகிறது என்றும், இதற்கு அடுத்த நிலையில் கூட்டத்திற்கு வராமல் இருப்பதினால் உறுப்பினர் களிடையே பிரச்சனைகள் ஏற்படுகிறது என்பதும் தெரிய வருகிறது.

பட்டியல் - 23

குடும்பப் பிரச்சனையால் குழு உறுப்பினர்களுக்கு ஏற்படும் பாதிப்பு

வ. எண்.	குழு உறுப்பினர்களுக்கு ஏற்படும் பாதிப்பு	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	கணவர் மூலம் ஏற்படும் பிரச்சனை	25	17
2.	குடும்ப வேலையைச் சரியாகக் கவனிக்க முடியாமை	36	24
3.	உடல்நிலை சரியாக இருப்பதில்லை	69	46
4.	பிற காரணங்கள்	20	13
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 23 குடும்பப் பிரச்சனையால் குழு உறுப்பினர்களுக்கு ஏற்படும் பாதிப்பு பற்றி ஆராய்கிறது. கணவர் மூலம் ஏற்படும் பாதிப்பு 17 விழுக்காடு உறுப்பினர்களிடையே உள்ளது. குடும்ப வேலையைச் சரியாக கவனிக்க முடியாமையால் ஏற்படும் பாதிப்பு 24 விழுக்காடு உறுப்பினர்களிடையே உள்ளது. உடல் நிலை சரியாக இல்லாமையால் 46 விழுக்காடு உறுப்பினர் களிடையே உள்ளது. பிற காரணங்களால் 13 விழுக்காடு உறுப்பினர் களிடையே உள்ளது. உடல்நிலை சரியாக இல்லாமையால் 46 விழுக்காடு உறுப்பினர்களிடையே அதிக பாதிப்பு உள்ளதாகவும், கணவர் மூலம் ஏற்படும் பிரச்சனையால் 17 விழுக்காடு உறுப்பினர் களிடையே பாதிப்பு ஏற்படுகிறது என்றும், அதற்கு அடுத்த நிலை யில் குடும்ப வேலையைச்சரியாக கவனிக்க முடியாத காரணத்தால் 24 விழுக்காடு உறுப்பினர்களிடையே பாதிப்பு ஏற்படுகிறது என் பதும் தெரியவருகிறது.

பட்டியல் - 24

குழுவில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான கருத்துக்கள்

வ. எண்.	சிக்கல்களைத் தீர்ப்பதற்கான கருத்துகள்	உறுப் பினர்கள்	விழுக் காடு
1.	வரவு செலவுக் கணக்குகளை சரியாக வைத்துக் கொள்ளுதல்	56	37
2.	குழுக் கூட்டத்தை முறையாக நடத்துதல்	45	30
3.	கடன் தொகைக்கான வட்டியைக் குறைத்தல்	30	20
4.	படிப்பறிவு இல்லாத உறுப்பினர் களிடம் குழு செயல்பாட்டை விளக்கிக் கூறுதல்	19	13
	கூடுதல்	150	100

மூலம் : முதல்நிலைப் புள்ளி விவரம்

பட்டியல் எண் 24 சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான கருத்துக்கள் பற்றிய விவரம் கொடுக்கப்படுகிறது. 37 விழுக்காடு உறுப்பினர்கள் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு குழுவின் வரவுசெலவு கணக்குகளை சரியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறு பவர்கள் உள்ளனர். 30 விழுக்காடு உறுப்பினர்கள் குழுக் கூட் டத்தை முறையாக நடத்தவேண்டும் என்று கூறுபவர்கள் உள்ள னர். 20 விழுக்காடு உறுப்பினர்கள் கடன்தொகைக்காக வட்டியைக் குறைக்கவேண்டும் என்று கூறுபவர்கள் உள்ளனர். 13 விழுக்காடு உறுப்பினர்கள் படிப்பறிவு இல்லாத உறுப்பினர்களிடம் குழுவின் செயல்பாடுகளை விளக்கிக் கூறவேண்டும் என்று கூறுபவர்கள் உள்ளனர். இந்தப் பட்டியலின்படி சிக்கல்களைத் தீர்ப்பதற்கு குழுவின் வரவு செலவுக் கணக்குகளை சரியாக வைத்துக்கொள்ள

வேண்டும் என்று கூறுபவர்கள் அதிக அளவாக 37 விழுக்காடு உள்ளனர். கல்வியறிவு இல்லாத உறுப்பினர்களிடம் குழுவின் செயல்பாடுகளை விளக்கிக் கூறவேண்டும் என்று கூறுபவர்கள் குறைவான 13 விழுக்காடு உறுப்பினர்கள் உள்ளனர் என்று அறியமுடிகிறது.

இயல்-5

கண்டுபிடிப்புகளும் பரிந்துரைகளும்

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுக்கா, நாஞ்சிக் கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகள்' என்ற தலைப்பில், சமூகவியல் நோக்கில் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பகுப்பாய்வில் கண்டறியப்பட்ட ஆய்வு முறைகள் இவ்வியலில் தொகுத்துரைக்கப்படுகிறது. மேலும் மகளிர் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகள், பிரச்சனைகள், உறுப்பினர்களின் சமூக, பொருளாதார மேம்பாடு அடைவதற்கு சில பரிந்துரைகள் கொடுக்கப்படுகின்றன.

மகளிர் சுயஉதவிக் குழுக்களில் நடுத்தர வயதைச் சார்ந்தவர்களே அதிக எண்ணிக்கையில் உள்ளனர். மேலும் வயதானவர்கள் மிகக் குறைவாகவே குழுக்களில் பங்கேற்கின்றனர். தஞ்சாவூர் தாலுக்காவில் நாஞ்சிக்கோட்டை ஊராட்சியில் செயல்படுகின்ற மகளிர் சுயஉதவிக் குழுக்களில் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் அதிகமாக 48 விழுக்காடு உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர். 2 விழுக்காடு முற்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் குறைவாக உள்ளனர். மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் அதிக அளவாக 87 விழுக்காடு உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர். மிகக் குறைவாக கிறித்தவம் மற்றும் முஸ்லீம் மதத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் உள்ளனர். மகளிர் சுயஉதவிக் குழுவில் 5-10 ஆம் வகுப்பு வரை படித்த உறுப்பினர்கள் அதிக எண்

ணிக்கையில் 48 விழுக்காடு உள்ளனர். 12-ஆம் வகுப்பு அதற்கு மேல் படித்த உறுப்பினர்கள் மிகவும் குறைவாக 4 விழுக்காடு மட்டுமே உள்ளனர். மகளிர் குழு உறுப்பினர்களில் 81 விழுக்காடு திருமணமானவர்கள் அதிக அளவில் உள்ளனர். மிகக் குறைவாக 19 விழுக்காடு உறுப்பினர்கள் திருமணமாகாதவர்கள் உள்ளனர். குழு உறுப்பினர்களில் 40-50, மற்றும் 50-60 வயது பிரிவில் அதிகமாக விதவை உறுப்பினர்கள் குழுவில் பங்கேற்கின்றனர் என்பதைக் காணமுடிகிறது.

மகளிர் சுயஉதவிக் குழுவில் 83 விழுக்காடு குழு உறுப்பினர்கள் குடும்பங்கள் தனிக் குடும்பங்களாக இருப்பது தெரிய வருகிறது. சுயஉதவிக் குழு உறுப்பினர்களில் 4 உறுப்பினர்களை உடைய குடும்பங்கள் 30 விழுக்காடு உள்ளது. 6 உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள் மிகக் குறைவாகவே உள்ளது. ரூ. 1,000,00-1,50,000 வரை சொத்து மதிப்புடையவர்கள் அதிக அளவாக 30 விழுக்காடு உள்ளனர். ரூ. 2,50,000-3,00,000 வரை சொத்து மதிப்புடையவர்கள் மிகக் குறைவாகவே சுயஉதவிக் குழு பங்கேற்கின்றனர். சொந்த வீட்டில் வசிப்பவர்கள் அதிக அளவாக 75.3 விழுக்காடு உறுப்பினர்கள் உள்ளனர். 24.6 விழுக்காடு உறுப்பினர்கள் வாடகை வீட்டில் வசிப்பவர்கள் குறைவாக உள்ளனர் என்பது தெரியவருகிறது. ஓட்டு வீட்டில் வசிப்பவர்கள் அதிக எண்ணிக்கை 50 விழுக்காடு உள்ளனர். 17 விழுக்காடு உறுப்பினர்கள் கான்கிரீட் வீடுகளில் வசிப்பவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுகிறது. மகளிர் சுயஉதவிக் குழுவில் உள்ள உறுப்பினர்களில் வீட்டிற்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் வைத்திருப்பவர்கல் மிகக் குறைவாகவே உள்ளனர். மின்வசதி உள்ளவர்கள் அதிக அளவாக 46 விழுக்காடு உறுப்பினர்கள் உள்ளனர்.

ரூபாய் 500 முதல் 1000 வரை மாத வருமானம் உடையவர்கள் அதிக அளவாக 48 விழுக்காடு உள்ளனர். ரூ.2500 மேல் வருமானம் உடையவர்கள் மிகக் குறைவாகவே இக்குழுக்களில் பங்கேற்கின்றனர். குழு உறுப்பினர்கள் உணவுக்குச் செலவு செய்பவர்கள் அதிக அளவாக 47 விழுக்காடு உறுப்பினர் உள்ளனர். உடைக்குச் செலவு செய்பவர்கள் குறைவாக 5 விழுக்காடு உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். மகளிர் சுயஉதவிக்குழுவில் சேமிக்கும் உறுப்பினர்கள் 74 விழுக்காடு உள்ளனர். வங்கி சேமிப்பு, குழுச்

சீட்டு சேமிப்பவர்கள் மிகவும் குறைவாக 7 விழுக்காடு மட்டுமே உள்ளனர். ஒருவாரத்திற்கு ரூ. 10 சேமிக்கும் பழக்கம் உடையவர் கள் குழுவில் பெரும்பாலான உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். ஒரு மாதத்திற்கு ரூ. 100 சேமிக்கும் பழக்கம் உடையவர்கள் குழு வில் மிகக் குறைவாகவே உள்ளனர். குழுவில் ஒரு வட்டிக்குக் கடன் வாங்குபவர்கள் அதிக அளவில் 39 விழுக்காடு உள்ளனர். மூன்று வட்டிக்கு கடன் வாங்குபவர்கள் குறைவாக 25 விழுக்காடு உள்ளனர். குழுவில் வாரக்கூட்டத்தில் கலந்து கொள்பவர்கள் அதிக அளவாக 80 விழுக்காடு உறுப்பினர்கள் உள்ளனர். மாதக் கூட்டத்தில் ஒரு முறை கலந்து கொள்பவர்கள் மிகவும் குறைவாக 2 விழுக்காடு உள்ளனர்.

குழு உறுப்பினர்களில் சுயதொழில் துவங்குவதற்கு அதிக அளவாக கடன் வாங்குபவர்கள் 50 விழுக்காடு உள்ளனர். அவசரத் தேவைகளுக்கு கடன் வாங்குபவர்கள் மிகக் குறைவாக 2 விழுக் காடு உள்ளனர். வங்கியின் மூலம் கடன் பெறுகின்றவர்கள் 84 விழுக்காடு உள்ளனர். பிற அரசு நிதி நிறுவனங்கள் மூலம் பெறு பவர்கள் மிகக் குறைவாக 3 விழுக்காடு உள்ளனர்.

வட்டி பற்றிய சிக்கல்கள் அதிக அளவாக 43 விழுக்காடு உறுப்பினர்களிடையே பிரச்சனைகள் ஏற்படுகிறது. குழுக் கூட்டத் திற்கு ஒழுங்காக வராமையால் 37 விழுக்காடு உறுப்பினர்களி டையே பாதிப்பு ஏற்படுகிறது என்பதையும் காணமுடிகிறது. உடல் நிலை சரியில்லாமையால் அதிக அளவாக 46 விழுக்காடு உறுப் பினர்களிடையே குழுக் கூட்டத்தில் ஒழுங்காக கலந்துகொள்ள இயலாமையால் பாதிப்பு ஏற்படுகிறது. இதற்கு அடுத்த நிலையில் குடும்ப வேலையைச் சரியாக கவனிக்கமுடியாத காரணத்தால் 24 விழுக்காடு உறுப்பினர்களிடையே பாதிப்பு ஏற்படுகிறது என்பது, குடும்பத் தலைவர் அல்லது கணவர் மூலம் 17 விழுக்காடு உறுப்பினர்களிடையே பாதிப்பு ஏற்படுகிறது என்பதும் தெரிய வருகிறது. குழுவின் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கும் பெரும் பாலான தகவலாளிகள் குழுவின் வரவு செலவு கணக்குகளைச் சரியாக வைத்துக்கொள்ள வேண்டும், குழுக் கூட்டங்களை முறையாக நடத்தவேண்டும் என்ற கருத்துக்களைத் தெரிவித்துள்ள னர்.

பொதுவான கருத்து/பரிந்துரைகள்

பெண்கள் திறமைமிக்கவர்கள் என்றும், பயிற்சியளித்து, அவர்களிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டால் பல சாதனைகள் படைப்பார்கள் என்றும், மகளிர் திட்ட அனுபவங்கள் நிரூபித்திருக்கின்றன. மகளிர் குழு உறுப்பினர்களாகிய ஏழை மகளிர் இந்த எதிர்பார்ப்புகளையும் கனவுகளையும் நனவாக்கி விடுவர் என்று அரசுக்கு முழு நம்பிக்கையிருக்கிறது.

மகளிரைப் பாதிக்கக்கூடிய கள்ளச்சாராயம், வரதட்சணை கொடுமை, பெண் சிசு கொலை ஆகியவற்றிற்கு எதிராக குரல் எழுப்பி ஒற்றுமையுடன் இச்சீர்கேடுகளை ஒழிக்க குழுக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு பெண் இன்னொரு பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு காரணமாகும் நிலை மாறி, ஒருவருக்கு ஒருவர் கைகொடுத்து உதவிசெய்யும் நிலை பிறக்க வேண்டும் ஒவ்வொரு பெண் குழந்தையும் ஆண் குழந்தைக்குச் சமமாக உணவு உண்டு, உடை உடுத்தி, கல்விபெற்று, திறமைகளை வளர்த்து, தொழில் செய்து, வருமானம் ஈட்டி, 21 வயதிற்கு மேல் திருமணம் செய்துகொண்டு, ஆணுக்கு நிகராக குடும்ப பாரத்தைச் சுமந்து, குடும்பத்திலும் கிராமத்திலும் முடிவுகள் எடுப்பதில் சமபங்கு பெற்று, சமஉரிமையுடனும், கெளரவத்தோடும் வாழும் நிலை உருவாக வேண்டும். இப்படிப்பட்ட உயரிய உலகை படைப்பதுதான் மகளிர் திட்ட இலட்சியம் ஆகும்.

பரிந்துரைகள்

1. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கும் வங்கிக் கடன்களின் தொகைகளை அதிகப்படுத்தலாம்.

2. வங்கிகள் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன்கள் வழங்கும் போது சிறப்பினமாகக் கருதி வட்டியின் அளவைக் குறைக்கலாம்.

3. வங்கிக் கடன்களைப் பெறுவதற்கு தரம் பிரிக்கப்படாமல் அனைத்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும் கடன்கள் வழங்கலாம்.

4. சிறப்பாகச் செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஊக்கத் தொகை வழங்கலாம்.

5. மகளிர் சுயஉதவிக் குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கலாம்.

6. மகளிர்சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு அனைத்து வகையான சிறு தொழில்கள் தொடங்குவதற்கு ஏதுவாக தொழில் நுட்பப் பயிற்சி அளித்தால் சிறப்பாகச் செயல்படுவார்கள்.

7. மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்தளுக்கு இலவச மருத்துவ வசதி ஏற்படுத்திக் கொடுத்தால் குழுக்கள் சிறப்பாகச் செயல்பட ஏதுவாக அமையும்.

8. படிப்பறிவு இல்லாத மகளிர் குழு உறுப்பினர்களிடையே குழுவின் செயல்பாடுகளை பயிற்சி வகுப்புகள் நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

9. குழு உறுப்பினர்களின் பயிற்சிக்கான தினப்படி தொகையை அதிகப்படுத்தி வழங்கலாம்.

[illegible]

பயிற்சிகள்

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

துணைநூற்பட்டியல்

ஆனந்த், பா., 2003 'தொழில் முன்னேற்றத்திற்காக கடன் வசதி' முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், (தமிழ்நாடு அரசு நிறுவனம்) மலர் 4, இதழ் 9, ஏப்ரல் 2003, சென்னை.

இராஜீவ், கே., 2004 'மகளிர்க்கான தொழில் வளர்ச்சித்திட்டங்கள்' முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், (தமிழ்நாடு அரசு நிறுவனம்), மலர் 4, இதழ் 9, ஏப்ரல் 2003, சென்னை.

கரியாலி, சி.கே., 2004, மகளிர் சுயஉதவிக்குழு தகவல் கையேடு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை.

பாக்யலெட்சுமி, கே., 2001, 'பெண்களின் செயல்பாடுகள் ', முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், (தமிழ்நாடு அரசு நிறுவனம்), மலர் 4, இதழ் 6, ஏபரல் 2001, சென்னை.

மார்கிரெட் பெண், 1993, தொழில் முனைவோர் வளர்ச்சி, சடகோபன் அமுதன் பதிப்பகம், கும்பகோணம்.

முத்துச்சிதம்பரம், *1995*, பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

செல்வராசன், *1999*, புதுகைப்புனல், மாவட்ட ஊரக வளர்ச்சி முகவை, ஊற்று - *1*, கண் - *5*, புதுக்கோட்டை.

ரெஜினா பாப்பா, *2003*, 'திருப்புமுனை', முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், (தமிழ் நாடு அரசு நிறுவனம்), மலர் *4*, இதழ் *11-12*, மார்ச்-ஏப்ரல் *2003*, சென்னை.

ஜெயமாலா, என்.கே., *2002*, 'பெண்களின் மேம்பாட்டுத் திறமை மற்றும் வளர்ச்சி' முற்றம் மாத இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், (தமிழ்நாடு அரசு நிறுவனம்), மலர் *4*, இதழ் *4*, ஆகஸ்ட் *2002*, சென்னை.

ஷர்மா, என்.கே., *2002*, 'பெண்களின் திறமை மற்றும் வளர்ச்சி', முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் நிறுவனம் (தமிழ்நாடு அரசு நிறுவனம்) மலர் *4*, இதழ் *5*, செப்டம்பர், *2003*, சென்னை.

இந்திரா, கோ., *2004*, புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக் கோட்டை தாலுக்கா மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றம், ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு சமூக அறிவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

நாளிதழ்கள்

கலாபார்வதி, *2004*, 'பூம்புகார் மகளிர் சுயஉதவிக்குழு தயாரித்த பொம்மைகளை வாங்கும் நெதர்லாந்து', தினமணி, *19.08.2004*

தங்கமுத்து, *2004*, 'பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகச் சிற்றுண்டியை மகளிர் சுய உதவிக்குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டது', தினத்தந்தி, *06.08.2004*

பாஞ்சாலி மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் தஞ்சாவூர் மாவட்டம், *2004* 'மகளிர் சுயஉதவிக்குழு சாதனைகள் நிகழ்த்தி இலாபகரமாக நடத்தும் உணவகம்', தினமணி, *12.6.2004*.

ஹிதேஷ் குமார், *2004*, புதுக்கோட்டை மாவட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் குறித்த செய்திகள்', தினத்தந்தி, *18.10.2004.*

மகளிர் சுயஉதவிக்குழு தகவல் கையேடு, *2004*, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை தினந்தந்தி, *09.09.2005, 18.08.2008, 19.08.2008.*

Amitava Mukherjee, 2002, 'PRIS and SHGs: Convergence of Programmes', Economic and Political Weekly, Volume XXXVII, No. 26, Union Bank of India, Mumbai.

Amutha Juli Grace, D., 2002, Self Help Groups and the Empowerment of Women in Thiruvaiyaru Taluk of Thanjavur District, M.Phil., Thesis (Unpublished), Department of Social Sciences, Tamil University, Thanjavur.

Ariza Ahamed, M., 1999, 'Empowerment of Women : Self Help Groups', Kurukshetra, Vol. 47, No. 7, Publication Division, Ministry of I & B, Government of India, New Delhi.

Ashok Kumar, R., 1995, Rural Industrialisation in India, Anmol Publications Pvt. Ltd., New Delhi.

Das Gupta, 1989, Violence Against Women, Vikas Publishing House Pvt. Ltd., Delhi.

Devaraki, B.R., 2002, 'Women Self - Help Groups : Do they have a niche in the real of Rural Development', Paper presented National Seminar on Environment and Empowerment of Women, Department of Sociology, Gandigramam Rural University, Gandhigramam.

Gopal Lal Jain, 1995, Rural Development, Mangal Deep Publications, Jaipur, New Delhi.

Jacqueline Trivers, 1985, 'Attitude to Position of Women Dimension', Women attached daily lives of Women with young children, Department of Educational Studies, London and Sydney.

Jayalakshmi, 2000, Scheduled Caste Female Agricultural Labourers, Unpublished M.A., dissertation submitted to Department of Sociology, Bharathidasan University, Tiruchirappalli.

Jayamala, 2000, 'Self Help Groups and Women's Empowerment', Paper presented National Seminar on Environment and Empowernment of Women, Department of Economics, Bharathidasan University, Tiruchirappalli.

Jayanthi Priya, 2001, Effect of Participating in Self Help Group, Unpublished M.A., dissertation submitted to Department of Economics, K.N.G. Arts College for Women, Thanjavur.

Jose, 2003, Women workers in Rural India, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi.

Kasturi Chandrasekaran, 2002, 'From Housewife to SHG Leader', The Hindu, Newspaper.

Kathleen Gough, 1995, 'Role of Women in Agriculture', The Encyclopaedia of Women Studies, Vol. 2, The Economic Times, Gyan Publishing House. New Delhi.

Kundal Agarval, 2000, 'Empowerment of Women', National Seminar on Environment and Empowerment of Women, Department of Economics, Bharathidasan University, Tiruchirappalli.

Maharajan, K., 2000, 'Working Women and Empowerment', Paper presented National Seminar on Environment and Empowerment of Women, Department of Economics, Bharathidasan University, Tiruchirappalli.

Mahendhran, 2000, 'Self Help Groups and Women Empowerment', National Seminar on Environment and Empowerment of Women, Department of Economics, Bharathidasan University, Tiruchirappalli.

Manimekalai, 2000, 'Women Empowerment through Self Help Groups', National Seminar on Environment and Empowerment of Women, Department of Economics, Bharathidasan University, Tiruchirappalli.

Mishra, T.K., 1993, 'Indian Women - unorganised Agents of Rural Changes', Kurukshetra, Vol. XLI No. 5, Delhi.

Muthuchidambaram, 2000, 'A Study of Self Help Groups', Paper presented National Seminar on Environment and Empowerment of Women, Department of Economics, Bharathidasan University, Tiruchirappalli.

Pandi, 2000, 'Self Help Groups and Women's Empowerment', National Seminar on Environment and Empowerment of Women, Department of Economics, Bharathidasan University, Tiruchirappalli.

Preethi Chandrasekar, 2002, 'SHGs trying to liberate Women', The Hindu.

Preety Singh, Saroj Kashyap, 1993, 'Invisible Contribution of Rural Women to Rural Development', Kurukshetra, Vol. XLII, No. 2, Hassar.

Rajasekhar, D., 2002, 'Economic Programmes and Poverty Eradication in Tamilnadu', Economic and Political Weekly, Union Bank of India, Vol. XXXVII, No. 29, Mumbai.

Rajendhiran, P., 2003, 'Women and Politics in India', Deep and Deep Publications, New Delhi.

Santhosh Babu, 2002, 'Women's Development of SHGs', Mutram, Mutram Society for Tamilnadu Corporation of Development of Women Ltd., Chennai.

Sathyavati, 1993, 'Role of Rural Women in decision making for credit procurement', Kurukshetra, Vol. XLII, No. 2.

Sharma, N.K., 1998, 'Issues in Rural Development', National Bank for Agriculture and Rural Development, New Delhi.

Singh, 1999, 'Self Help Groups and Pressure Groups for Old Persons', Research & Development', Vol. No. 5, Delhi.

Sweta Mishra, 1995, 'Land Reforms and Empowerment of Women', Kurukshetra, Vol. XLIV, No. 1, New Delhi.

Urvashi Gulati, 1995, 'Violence Against Women', Kurukshetra, Vol. XLII, No. 5, Haryana.

Widge, M.K., 1995, 'Women in Agriculture', Jojana Bhavan, Vol. 39, No. 11, New Delhi.